நவ. 07 - 13, 2004 Nov. 07 - 13, 2004
32 பக்கங்கள்
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்
16.00


7/11/2004



## அகாஷி விஜயம் பயன் தருமா?



தீபாவளி வாழ்த்துக்கள்!



## அந்தரத்தில் புஷ் வெற்றி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுநர் நியமனம்; காங்கிரஸ் மீது உச்சகோபத்தில் ஜெயலலிதா

தமிழக முதல்வர் ஜெயலலிதாவைப் பிடித்த போதாத காலம் லோக்சபா தேர்தல் தோல்வியுடன் முடியவில்லை. காங்கிரஸ் கட்சியுடன் நெருக்கமான உறவை கடந்த காலங்களில் கொண்டிருந்த ஜெயலலிதா அதே காங்கிரஸ் கட்சியின் கடுங்கோபத்துக்கு ஆளாகி தவியாய்த் தவிக்கிறார் இப்போது.

ஆனால், தவறு காங்கிரஸாரிடம் இல்லை ஜெயலலிதாவிடமே. தான் செய்த தவறினால் தானே அவதியுறும் நிலை அவருக்கு. இப்போதுகூட காங்கிரஸில் பெரும் பகுதியினரின் ஆதரவு ஜெயலலிதாவுக்கு உண்டு.

இருந்தும் காங்கிரஸின் தோழமையை தொடர்ந்து தூக்கி எறிந்து நடந்ததன் மூலம் வாழ்நாளில் இனி ஒருபோதும் இல்லை என்றிருந்த தி.மு.க – காங்கிரஸ் உறவு புதுப்



சுர் ஜித் சிங் பர்லானா

பிக்கப்பட்டுள்ளது. தி.மு.க – காங்கிரஸ் கட்சிகளிடையான நெருக்கத்தைப்பார்த்து ஜெயலலிதா கதிகலங்கிப் போய் உள்ளார். அவரைக் காப்பாற்றுவார் யாருமே இல்லை என்றாகிவிட்டது.

அவரது துன்பத்தின் உச்சக்கட்டமாக அவரது பரமவைரி சுர்ஜித் சிங் பர்னாலா தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டுவிட்டார். கடந்தவாரம் பர்னாலா சென்னைக்கு நியமிக்கப்படுவார் என்று கூறி இருந்தோம்; அப்படி நடந்துவிட்டது. தமிழக ஆளுநர் ராமமோகன் ராவ் நீக்கப்படுவதை தடுக்க ஜெயலலிதா தலைகீழாக நின்றுபார்த்தார்.

அதுதான் போகட்டும்; புதிய ஆளுநர் குறைந்தப் நடுநிலையான ஒருவராக இருந்தாலாவது பரவாயில்லை. அவ்வாறின்றி பரமவைரியான ஒருவர் சென்னை ஆளுநர் மாளிகையில் குடியேறிவிட்டார்; அதுதான் ஜெயலலிதாவின் வயிற்றெரிச்சல்.

1991 ஆம் ஆண்டு பதவியில் இருந்த தி.மு.க அரசை பதவிநீக்க ஜெயலலிதா பிரதமர் சந்திர சேகரை நிர்ப்பந்தித்தார். ராஜீவ் காந்தி பிரதமர். பதவியை இழந்திருந்த நேரம் அது. பிரதமர் பதவிக்கு வந்த வி.பி.சிங்கை ராஜீவ், ஜெயலலிதா, சுப்பிரமணிய சுவாமி சகலரும் சேர்ந்து கவிழ்த்தனர். இவர்களின் ஆதரவுடன் பிரதமரான சந்திர சேகர் இவர்களது விருப்பத்துக்கு ஆடலானார். விடுதலைப்புலிகள் கோட்டையாக தமிழகம் மாறிவிட்டது எனக்கூறி தி.மு.க அரசை கலைக்க திட்டம் தீட்டப் பட்டது.

எனினும் மாநில அரசு சட்டம் ஒழுங்கை பேணத்தவறி விட்டது என்று ஆளுநர் அறிக்கை கொடுக்க வேண்டும். ஆளுநராக இருந்த பர்னாலாவோ காங்கிரஸின் பரமவைரி. பஞ்சாப்பில் காங்கிரஸின் எதிரியான அகாலிதன் கட்சியை சேர்ந்தவர். காங்கிரஸ் எதிரி என்பதாலேயே வி.பி.சிங்கால் ஆளுநராக தமிழகத்துக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

இதனால் தி.மு.க அரசுக்கு எதிராக அறிக்கை கொடுக்க பர்னாலா மறுத்துவிட்டார். சுப்பிரமணி சுவாமி, ராஜீவ், சந்திர சேகர் சகலரும் அழுத்தம் கொடுத்தும் பர்னாலா மசியவில்லை. கடைசியில் ஆளுநரின் அறிக்கை இல்லாமலேயே தி.மு.க அரசு கலைக்கப்பட்டது. இதை எதிர்த்து பர்னாலா தனது பதவியை ராஜினாமாச் செய்தார். இதன் பிறகு பர்னாலாவின் அகாலிதன் கட்சி பி.ஜே.பி கூட்டணியில் சேர்ந்தது. அதனால் பி.ஜே.பி ஆட்சிக் காலத்தில் ஆந்திர ஆளுநராக நியமிக்கப்பட்டார். இந்தப் பின்னணியில் தற்போது மதிய அரசில் கடும் செல்வாக்குடன் உள்ள தி.மு.க தனது நெடு நாளைய நண்பரான பர்னலாவை தமிழக ஆளுநராக நியமிக்கும்படி காங்கிரஸை நிர்ப்பந்தித்து வந்தது.

தி.மு.க கேட்டும் ஒவ்வொரு கோரிக்கையினையும் சிரத்தையுடன் நிறைவேற்றும் காங்கிரஸ் இதனையும் நிறைவேற்றித் தந்துள்ளது. வேடிக்கை என்னவென்றால் எந்த பர்னாலாவை நிர்ப்பந்தித்து காங்கிஸூம் ஜெயலலிதாவும் சேர்ந்து தி.மு.க அரசை கலைக்கப்பார்த்தார்களோ அதே பர்னாலாவை அதே காங்கிரஸைக் கொண்டு தமிழக ஆளுநராக நியமிக்கச் செய்துள்ளது தி.மு.க. அடுத்தகட்டம் ஜெயலலிதா அரசு நீக்கப்படுமா என்பதே. அவ்வாறு நடந்துவிடுமோ என்ற பீதியே ஜெயலலிதாவைப் போட்டு ஆட்டுகிறது.

மாநில அரசிடம் அபிப்பிராயம் பெற்றே ஆளுநரை நியமிக்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றில் தொடுத்த வழக்கும் புஸ்வாண



ஜெயலலிதா

மாகிவிட்டது. தி.மு.க சதி செய்வதாக பத்திரிகைகளுக்கு புலம்பிப்பார்த்தார். எவரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. காங்கிரஸ் மீது கடும்கோபத்தில் உள்ளார் ஜெயலலிதா. ஆனால் தவறு அவருடையதே.

1989 இல் எம்.ஜி.ஆர் இறந்து ஜானகி முதல்வரானதும் அ.தி.மு.க உடைந்தது. இதனால் சட்டசபையில் ஜானகி அணியின் பலம் குறைந்தது. இந்நேரம் காங்கிரஸ் அ.தி.க.வின்தோழமை கட்சியாக இருந்தது. காங்கிரஸுக்கு கணிசமான எம்.எல்லேக்கள் சட்டசபையில் இருந்தனர். ஜானகி இவர்களின் ஆதரவைகோரினார். ஆனால், ராஜீவ் ஜெயலலிதாவை ஆதரிக்கும் முட்டாள் முடிவை எடுத்தார். விளைவு ஜானகி அரசு கவிழ்ந்து தேர்தல் வந்து தி.மு.க 10 ஆண்டு கட்குப் பிறகு ஜெயித்து ஆட்சிக்கு வந்தது.

ஜானகியை ஆதரிக்கும்படி பல காங்கிரஸ் காரர்கள் ராஜீவை வற்புறுத்தினர் ராஜீவ்.

பத்தி வீடு

ஜெயலலிதா ஆதரவு முடிவை எடுத்தார். அன்று ராஜீவ் ஜனாகியை ஆதரித்திருந்தால் ஜானகி முதல்வராக தொடந்திருப்பார். ஜெயலலிதாவுடன் சென்ற எச்சசொச்ச அ.தி.மு.னவினரும் படிப்படியாக ஜானகியுடன் சேர்ந்திருப்பர். ராஜீவ் செய்த உபகாரத்தால் தான் ஜெயலலிதா அரசியலில் தப்பிப் பிழைத்தார்.

ராஜீவ் ஜானகியை ஆதரிக்காததால் சிவாஜி கணேசன் முதலான தலைவர்கள் காங்கிரஸிலிருந்து வெளியேறினார். அந்த நன்றியை மறந்த ஜெயலலிதா இப்போது திண்டாடுகிறார். ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு''

-எஸ். சுரேந்திரஜித்-


மூன்று மாடிவீடு விற்பனைக்கு

இல: 179 – 125

அவிசாவல வீதி, ஊறுகொடவத்த

வெள்ளம்பிட்டி.

(O.P.P Lucas Batery Company)


## நிலவும் சில ஆய்வுகளும்:

விண்வெளி ஆய்வில் பல நாடுகளும் ஈடுபட்டுள்ளன. இதில் முன்னாள் சோவியத் யூனியன் பெரும் வெற்றி பெற்றது.



இதைத் தொடர்ந்து ஏற்பட்ட போட்டியில் அமெரிக்கா நிலவுக்கு மனிதனை முதலில் அனுப்பியது.

நிலவு ஆய்வின் இடையில் தொய்வு ஏற்பட்டது. ஆனால், நிலாவில் நீர் இருப்பதற்கான வாய்ப்பு இருப்பதாக செயற்கைக் கோள் ஆய்விலிருந்து கிடைத்த தகவல்களால் உற்சாகமடைந்த நிலாக் காதலர்கள் ஸாரி. விஞ்ஞானிகள் இப்போது மீண்டும் ஆய்வில் தீவிரம் காட்டுகின்றனர். அண்மைய ஆண்டுகளில் பெரிய அளவில் புதியதாக எதையும் விண்வெளி ஆய்வில் சாதிக்கவில்லை. நிலாவுக்கு செயற்கை கோள் அனுப்பவும் இந்தியனை அனுப்பவும் இது போதாது. ராக்கெட் ஏவுகணை அதிகம் வேண்டும். அத்தோடு கூடுதலான எடையுடைய விண்கோளை ஏவும் ஆற்றல் தேவைப்படும். மேலும் நிலவை நோக்கிய பாதையில் கலத்தை ஏவ வேண்டும். இதற்கு பி.எஸ்.எல்.வி.ஏ. பயன்படும் என்கிறார்கள். நிலவின் சுற்றுப்பாதையை அடைய 3,84,407 கி.மீ பயணம் செய்ய வேண்டும்.

மணிக்கு 28,800 கி.மீ வேகத்தில் சீறிப் பாய்ந்து செல்லும் கலம்; இலக்கை சரியாக அடைய; கலத்தின் திசைச் சீரமைப்பு நுட்பத்தில் துல்லியம் தேவை. இது போன்ற சிக்கல்களை சீர்செய்துவிட்டால் நிலவில் இந்தியன் 2007இல் கால் பதிப்பது சாத்தியம் என்கிறார்கள்.


''இன்னல்கள் போக்கியெங்கும் இருளகற்றி ஒளிபரப்ப இகமீதில் தோன்றிய இத்தீபத்திருநாளில்''

சுடர் ஒளி மற்றும் உதயன் பத்திரிகைகளுடன் இணைந்து ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் நிறுவனம் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

இன்று 07–11–2004 அன்று வெளிவரும் சுடர் ஒளி மற்றும் உதயன் வார இதழ்களுடன் இந்த வாழ்த்து அட்டையும் வழங்கப்படுகிறது என்பதை வாடிக்கையாளர்கள், அன்பர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தீபாவளி வாழ்த்து அட்டை

Uthayan Graphics

உதயன் Srilanka Insurance சுடர் ஒளி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன நூலகம்
யாழ்ப்பாணம்

# இலக்கியப் பொழில்

## அடுத்த வாரம் ஆரம்பம்

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும்

**'இலக்கியப் பொழில்'** புதிய அம்சம்

சுடர் ஒளி வார இதழில் அடுத்த வாரம் ஆரம்பமாகிறது.

வளையாத செங்கோல் விளைவித்த நீதியினைப் பகரும் பழம்பாண்டி நாட்டின் மாறன் குலசேகரப் பாண்டியனின் வரலாற்று நிகழ்வினை அமிழ்தான தமிழில் அள்ளித் தருகிறார் பிரபல எழுத்தாளரும், முன்னாள் நீர்ப்பாசன ஆசிரியருமான செல்லேகுழவன் ம.க.அ. அந்த னிசில். சுவைக்கத் தவறாதீர்கள்.

## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250-300 Col. Cms) | | |

# வவுனியாவை அச்சுறுத்தும் ஓட்டோ சாரதி கொலைகள்

அண்மைக் காலங்களில் தென்னிலங்கையில் பொருளுக்காகக் கொலை செய்யும் கலாசாரம் பரவிவருகிறது. இது தற்பொழுது வவுனியாவிலும் பரவி இருப்பதுதான் கவலை அளிக்கும் சமாச்சாரம்.

வவுனியாவைச் சேர்ந்த ஓட்டோ சாரதி ஒருவர் வவுனியா நகரப் பகுதியில் இருந்து கடத்தப்பட்டு செட்டிக்குளம் பகுதியில் வைத்து மிகவும் மோசமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். இவரது ஓட்டோவை அபகரிப்பதற்காகவே இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

எனினும் ஏதாவது பின்னணி இருக்கிறதா என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை நடத்த வருகின்றனர். இந்தக் கொலை கடந்த 12 ஆம் திகதி இடம் பெற்றது.

கொலை செய்யப்பட்டவர் மதினா நகர் பூந்தோட்டத்தைச் சேர்ந்த மொகமட் அமீர் என்று தெரிவிக்கப்படுகிறது. இவருக்கு வயது 27. சம்பவதினம் வவுனியாவில் இருந்து செட்டிக்குளம் செல்வதற்காக சிலர் இந்த ஓட்டோவை அமர்த்தி உள்ளனர்.

ஆட்டோ அரசடிக்குளம் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு ஓட்டோ சாரதி கத்தியால் குற்றப்பட்டு பாழடைந்த கிணறு ஒன்றுக்குள் தள்ளப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஓட்டோ சாரதி கொலை செய்யப்பட்ட சம்பவம் இது முதல் தடவை அல்ல. 1999 ஆம் ஆண்டு கணபதி என்ற ஓட்டோ சாரதி புசல்லாவைப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார். மூன்று சமூகத்தவர்களையும் கொண்டுள்ள வவுனியா ஓட்டோ சங்கத்துக்கு இச் சம்பவங்கள் பெரும் அச்சுறுத்தல் என்றும் இவற்றைத் தடுக்க அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் வவுனியா ஓட்டோ சங்கத்தலைவர் தர்மலிங்கம் பிரபாகரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

வவுனியாவில் கடைசியாக இடம் பெற்ற ஓட்டோ சாரதி கொலையில் இராணுவச் சிப்பாய் ஒருவர் சம்பந்தப்பட்டுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் எதுவும் உறுதி செய்யப்படவில்லை.

இதற்கிடையில் கண்டி வந்தேக பகுதியில் வாகனக் கடத்தலுடன் தொடர்புள்ள குழு ஒன்றை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்களிடம் இருந்து வாகனம், ஆயுதங்கள் போன்றவை கைப்பற்றப்பட்டிருந்தன. இக்குழுவின் பிரதான நபராகக் கருதப்படுவர் ஓர் இராணுவ அதிகாரி. இவர் தற்பொழுது கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுமுறையில் சென்ற அவர் வாகனக் கடத்தலில் ஈடுபடுவதாகத் தெரிய வருகிறது. இந்தக் கடத்தல்கள் எப்போது முடிவுக்கு வரும் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

-மகாமுனி-

# கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சு

## தொழிற்பயிற்சிகள்

வடக்கு, கிழக்கு மாகாணத்தை வாழ்விடமாகக்கொண்ட அல்லது அங்கிருந்து இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் வாழும், பாடசாலைக் f y ⅟ இடைநிறுத்திய, மற்றும் பாதிப்புற்ற தரம் 8 இல் அல்லது அதற்கு மேல் சித்திபெற்ற இளைஞர், யுவதிகளுக்காக மேற்படி அமைச்சினால் பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு – அதனோடு குறிப்பிட்ட மாவட்டங்களில் உள்ள பயிற்சி நிலையத்தில் தமிழ்மொழி மூலம் பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

1. **அலுமினியம் கட்டுமாணப் பயிற்சிநெறி** - கொழும்பு மாவட்டம்
   Aluminium Fabricators Course
2. **தச்சுவேலை (இயந்திர) பயிற்சிநெறி** - திருகோணமலை மாவட்டம்
   Carpentery (Mechanised) Course
3. **பார இயந்திர இயக்குநர் பயிற்சிநெறி** - அநுராதபுர மாவட்டத்தில் உள்ள கல்குளம் பிரதேசம்
   Machinery Operator Course

இப்பயிற்சிநெறிக்கு தெரிவுசெய்யப்படுவோருக்கு தங்குமிட வசதியும், உதவிக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

### தகைமைகள்

1. வடக்கு, கிழக்கு மாகாணங்களை வாழ்விடமாக / பிறந்த இடமாகக் கொண்டவர்களாக இருத்தல்.
2. தரம் 8 அல்லது அதற்கு மேல் சித்தி பெற்றிருத்தல்.
3. பாரஊர்தி சாரதி – அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். (வகுப்பு ஏ) (இயந்திர இயக்குநர் பயிற்சிக்கு விண்ணப்பிப்போருக்கு மட்டும்)
4. 17 வயதிற்கு குறையாமலும், 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்.
5. நற்குணமும் நல்லொழுக்கமும் உடையவர்களாய் இருத்தல்.

மேற்படி பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தேசிய அடையாள அட்டையின் நிழற் பிரதியுடன் கீழே தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தை "A4" அளவுத்தாளில் தயாரித்து பூரணப்படுத்தி 30.11.2004 திகதிக்கு முன்

**பணிப்பாளர் - தொழிற்பயிற்சி**
கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி,
இந்துசமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி,
வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சு.
2ம் மாடி,
64, காலி வீதி,
கொழும்பு - 03.
என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**க. மகானந்தன்,**
*செயலாளர்.*

### பயிற்சிநெறிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பிக்கும் பயிற்சிநெறி :- ..........................
2. முழுப்பெயர், ஆங்கிலத்தில் (பெரிய எழுத்தில்) :-..........................
3. முதல் எழுத்துடன் பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில்) :- ..........................
4. விலாசம், ஆங்கிலத்தில் :-..........................
5. முழுப்பெயர், தமிழில் :-..........................
6. இலங்கைப் பிரஜையா? ஆம் / இல்லை :-..........................
7. தேசிய அடையாள அட்டை இல.:-..........................
8. ஆண் / பெண் :-..........................
9. குடியியல் நிலை:-..........................
10. பிறந்த திகதி:-..........................
11. (1) பிறந்த மாவட்டம்:-..........................
    (2) தேர்தல் மாவட்டம்:-..........................
    (3) தேர்தல் தொகுதி பிரிவு:-..........................
12. கல்வித் தகைமைகள் (சித்தியெய்திய பாடம், ஆண்டுகளுடன்):-

| பாடம் | தகைமை | ஆண்டு |
|---|---|---|
| | | |

13. வாழ்க்கைத் தொழிற்பயிற்சித் தகைமைகள் (பெற்றிருப்பின்) :-

| நிறுவனம் | துறை | காலம் |
|---|---|---|
| | | |

14. மொழித் தேர்ச்சி :-

| வாசித்தல் | எழுதுதல் | பேசுதல் |
|---|---|---|
| தமிழ் | | |
| ஆங்கிலம் | | |
| சிங்களம் | | |

15. தொழில் அனுபவம் (இருப்பின்) :-

| காலம் (மாதங்களில்) | தொழில் புரிந்த இடம் | மாதாந்த வேதனம் ரூபா. |
|---|---|---|
| | | |
| | | |

இத்துடன் தேசிய அடையாள அட்டையின் (இருபுறம்) நிழற்பிரதி சமர்ப்பிக்கின்றேன்.

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானதும், சரியானதுமென வெளிப்படுத்துகிறேன். பொய்யான தகவல்கள் தரப்பட்டுள்ள தென எச்சந்தர்ப்பத்திலும் கண்டுபிடிக்கப்பட்டால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம் என நான் நன்கறிவேன்.

.............................. திகதி

.............................. விண்ணப்பதாரியின் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவலத்தின் உச்சம்

1994 ஆம் ஆண்டு சூடானில் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தின் போது கண்ட காட்சி இது. பஞ்சத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சிறுவன் ஒருவன், ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் இருக்கும் ஐ.நா.முகாம் ஒன்றுக்கு உணவுக்காக ஊர்ந்து செல்கிறான். இந்தப் பையன் எப்போது சாவான்; நாம் எப்போது சாப்பிடலாம் என்று பையனைத் தூக்கிச் செல்லத்தயாராக, அருகிலேயே பிணம் தின்னி கழுகு ஒன்று காத்திருக்கிறது.

இந்தப் படத்தை எடுத்த புகைப்படக்காரரும் போட்டோ எடுத்த உடன் அந்த இடத்தில் இருந்து சென்று விட்டார். இந்தப் படத்தைப் பார்த்ததும் உலகமே பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானது. அமெரிக்காவில் பத்திரிகையாளர்களுக்குக் கொடுக்கப்படும் மிகச் சிறந்த விருதான புலிட்சர் விருது இப்படத்திற்குக் கிடைத்தது. எனினும் இப்படத்தை எடுத்த புகைப்படக்காரரான கெவின் கார்டர், மனம் உடைந்து 3 மாதங்களின் பின்னர் தற்கொலை செய்து கொண்டார். அவர் கடைசியாக கடவுளுக்கு எழுதிய கடிதம் ஒன்று கிடைத்தது.

அன்புள்ள கடவுளுக்கு, நான் எனக்குக் கிடைத்த சாப்பாட்டை இனி எப்போதும் வீணாக்கமாட்டேன். அது எவ்வளவு மோசமாக இருந்தாலும் பரவாயில்லை. இந்தப் பையனைக் காப்பாற்றும்படியும், இந்தத் துயர நிலையிலிருந்து அவனை மீட்குமாறும் நான் வேண்டிக்கொள்கிறேன். நாங்கள் இனிமேல் உலகில் நடப்பதைக் கூர்ந்து கவனிப்போம். எங்களைப்பற்றி மட்டுமே கவனித்துக் கொண்டிருக்கமாட்டோம். இந்தப் படம், பார்க்கும் போதெல்லாம் நாங்கள் எவ்வளவு கொடுத்து வைத்தவர்கள் என்பதை எங்களுக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கும். இனி ஒரு போதும் பிறருக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் வைத்திருக்கமாட்டோம்.

இக் கடிதத்தை நமது நண்பர்களிடம் காண்பியுங்கள். இந்த உலகில் எங்கு, யார் துயரங்களை அனுபவித்தாலும் அவர்களுக்காக நண்பர்கள் பிரார்த்தனை செய்யட்டும். யாரெல்லாம் சாப்பாட்டை வீணாக்குகிறார்களோ அவர்களிடம் இப்படத்தைக் காண்பியுங்கள். அவர்கள் இதைப் பற்றி நினைத்துப் பார்க்கட்டும் — என்று அவர் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தார்.





## நிதிசேகரிக்க வினோத பயணம்

பிரிட்டனை சேர்ந்தவர் வாயிட்ஸ் காட். 1980 இல் இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, அதிலிருந்து மீண்டவர். இந்த நோயை பற்றிய ஆராய்ச்சிக்கு நிதி சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

இப்போது இவர் இரத்தப் புற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிதி சேகரிக்க 4,350 கி.மீ. தூரம் சைக்கிளில் பயணஞ் செய்கிறார். பெரிய சக்கரம் ஒன்றும் சிறிய சக்கரம் ஒன்றையும் கொண்ட இந்த வினோத சைக்கிளில்த்தான் இவர் பயணஞ் செய்கிறார். ஷெர்லாக் ஹோம்சைப் போல கம்பளி உடை மற்றும் தொப்பி அணிந்து பெரிய பொய் மீசை வைத்துக் கொண்டு பயணஞ் செய்கிறார்.

அவுஸ்திரேலியாவில் உள்ள மேற்குப் பகுதியிலிருந்து தெற்குப் பகுதியில் இருக்கும் சிட்னிக்கு செல்கிறார். 4,350 கி.மீ தூரம் உள்ள இந்த இடத்தை இவர் ஆறு வார காலத்தில் கடக்க இருக்கிறார்.

ஏற்கனவே இவர் 2002 இல் 80 கிலோ எடையுள்ள ஆழ்கடல் டைவிங் ஷூட் அணிந்து கொண்டு லண்டன் மரதன் பந்தயத் தூரமான 42 கி.மீ தூரத்தை 5 நாட்களில் கடந்துள்ளார். சென்ற வருடம் லாக்நெஸ் என்ற இடத்தில் தண்ணீருக்கு அடியில் 42 கி.மீ தூரத்தை 12 நாளில் கடந்துள்ளார்.

தற்போது கடக்க இருக்கும் தூரத்தை ஆறு வார காலத்தில் முடித்து விடலாம் என்கிறார். இந்த சைக்கிள் பயணத்தின் மூலம் 1.5 மில்லியன் ஸ்டெர்லிங் பவுண்ஸ் வசூலிக்கலாம் என்பது இவர் எதிர்பார்ப்பு.


## இனிப்பு அழகி



இந்தப் பெண்ணை நீங்கள் கடித்துத் தின்னலாம். பாரிஸில் நடந்த வித்தியாசமான கண்காட்சியில் பிரான் அழகி இந்த ஆடையை அணிந்திருந்தார். இது சாதாரணமாக துணியால் தைக்கப்பட்டது போன்று இருந்தாலும் உண்மையில் சொக்லேட்டுக்களாலேயே தயாரிக்கப்பட்டுள்ளது. சொக்லேட் திருவிழாவை ஒட்டி இந்த கண்காட்சி இடம் பெற்றது




அவுஸ்திரேலியாவில் வசிக்கும் சீன பெண் பொறியியலாளர் ஒருவர் தனக்கு கணவர் தேவை என்று பகிரங்கமாக விளம்பரம் செய்திருக்கிறார். பத்திரிகையில், இணையத்தில் எல்லாம் விளம்பரப்படுத்திப் பார்த்தார் அவர். பயன்தான் இல்லை. உடனே சிட்னி நகரில் சனப் புழக்கம் அதிகம் உள்ள பகுதியில் 12X15 அடி அளவில் ஒரு விளம்பரப் பலகை வைத்துவிட்டார், தனக்குக் கணவன் வேண்டும் என்று. இதாவது பயன்தருமா?



## மசாலா மிக்ஸ்



ஜொலிக்கும் அரண்மனை




புதிய மன்னருக்கு தந்தை பட்ட அபிஷேகம்.

தென் கிழக்கு ஆசிய நாடு கம்போடியா. அதன் மன்னர் நரோத்தம் ஷிஹானுக் நோய்வாய்ப் பட்டுதளர்ந்து போய் விட்டார். இதனால் அவர் கிரீடத்தை துறக்க, ஆட்சிப் பொறுப்பை மகன் நரோத்தம் ஷிகாமோனி சுமந்து கொண்டார்.

### மக்களுக்கு இல்லாத பணம் ஆடம்பரத்துக்கு....

இதற்காக கோடிக்கணக்காகப் பணத்தைக் கொட்டி கம்போடிய மன்னர் அரண்மனை வெகு கோலாகலமாக அலங்கரிக்கப்பட்டது. நல்லதாக ஒரு வைத்தியசாலை கூட இன்றி கஷ்டப்படுகிறார்கள் மக்கள்.

அரண்மனையை அழகுபடுத்தவும் புதிய மன்னர் பதவியேற்பு விழாவுக்கும் செலவழித்த பணத்தில் ஒரு பெரிய, வசதியான வைத்தியசாலையை கட்டி முடித்திருக்கலாம். ஆனால், அதிகாரத் தரப்பு அதையெல்லாம் செய்யாமல் பணத்தைக் கொட்டி வீணே அழிக்கிறது.




கனகச்சிதமாகத் திட்டமிட்டு பணத்தை தண்ணீராய் வாரி இறைத்துத்தான் நாகரீக 'பாஷன் ஷோ' நடத்தப்படுகிறது. பார்வைக்கு குளுகுளு என குளிர்ச்சி தரும் இத்தகைய 'பாஷன் ஷோ'க்களில் அவ்வப்போது சில சமயம் சறுக்கல்களும் வரத்தான் செய்கின்றன. அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் 'பூனை நடை' நடந்த இந்த அழகிக்கு செருப்பு சறுகி விட மேடையில் அவர் பட்ட அவஸ்தை இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரை பாயும் தீவிரவாதம்

## ஈராக் கடத்தல்களின் எதிரொலி



ஈராக் விவகாரத்தில் தொடரும் கடத்தல்நாடகம் தொடர்பாக; இலங்கைப் பிரஜை ஒருவர் பணயமாகப் பிடிக்கப் பட்ட சம்பவம் ஒன்று கடந்த வாரம் நடந்தேறியவிடயம் ஊடகங்கள் மூலமாக அறியக்கிடைத்ததுதான்.

அந்த வகையில் வத்தளையைச் சேர்ந்த 36 வயது நிரம்பிய மூன்று பிள்ளைகளின் தந்தையரான தினேஷ் தர்மேந்திரா ராஜரெட்ணம் என்பவரே 'அன் ஸாருல் சுன்னா' என்றழைக்கப்படும் ஈராக்கின் தீவிரவாத இயக்கத்தினால் கடத்தப்பட்டுள்ளார்.

சந்தோஷ் குமார்(14), கிஷோக்குமார் (12), டிலான் குமார்(10) என்று இவருக்கு மூன்று புதல்வர்கள் உள்ளனர்.

கடத்தப்பட்டுள்ள இலங்கையரின் மேலதிக விவரங்களை திரட்டுமாறு வெளிவிவகார அமைச்சு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளதுடன் இவரை விடுவிப்பதற்கான அவசர நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகின்றது.

வெளிவிவகார அமைச்சின் ஒருவர் இது குறித்துத் தகவல் தருகையில் குவைத்திலுள்ள கம்பனி ஒன்றுக்கு சாரதியாகச் சென்ற இலங்கையர், ஈராக் தீவிரவாதிகளினால் பணயக்கைதியாகப் பிடிக்கப்பட்ட சம்பவம் அல்-ஜசீரா தொலைக்காட்சி மூலம் தெரியவந்துள்ள தென்றும் இச்சாரதி தொடர்பான ஏனைய விவரங்களை அறியும் நோக்குடன் லெபனான், குவைத் நாடுகளுக்கான இலங்கை இராஜ தந்திரிகளுடன், தொடர்பு கொண்டு விவரம் கேட்டபோது மேலதிக விவரங்கள் கிடைக்கப் பெறவில்லையென்று ம் தெரியவந்துள்ளது. எனவே, பணயக்கைதியான இலங்கையர் பற்றி மேலதிக விவரங்களை பெற்றுத் தருமாறு இலங்கைத்தூதுவர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்ட தினேஷ் ராஜரெட்ணம்; குவைத்தின் 'ஜசீம் டிரான்ஸ்போர்ட்' எனும் நிறுவனத்தில் சாரதியாகக் கடமையாற்றச் சென்றவர். குவைத்தில் சம்பளம் போதுமானதாக இல்லாமையால் ஈராக் செல்ல விருந்ததாக அவர் தனது மனைவிக்கு எழுதிய கடிதத்திலிருந்து தெரியவந்துள்ளது.

வெளிநாடு சென்று ஒருவருடமும், நான்கு மாதமும் ஆகியுள்ள காலகட்டத்திலேயே இவர் கடத்தப்பட்டுள்ளார்.

குவைத் நாட்டில் சாரதியாகக் கடமையாற்றிய இவரை அக்கம்பனியானது ஈராக்கில் 'ட்ரக்' வண்டிச் சாரதியாக நியமித்த போதே ஈராக்கிய தீவிர வாதிகளினால் கடத்தப்பட்டுள்ளார். இவருடன் ஒரு பங்களாதேஷ் பிரஜையும் கடத்தப்பட்டதாக தெரியவருகின்றது.

ஈராக்கிலுள்ள குவைத் கம்பனிகள் அமெரிக்கப் படைகளுக்காகப் பணிபுரிந்து வருகின்றன. எனவே, இக்கம்பனிகள் ஈராக்கிலிருந்து அகற்றப்பட வேண்டுமென ஈராக் தீவிரவாதிகள் கடந் தகாலங்களில் எச்சரித்து வந்துள்ளனர். இதன் காரணத்தால் இக்கம்பனியின் சாரதிகள் சிலரை ஏற்கனவே தீவிரவாதிகள் பணயமாகப் பிடித்துள்ளனர். சில கைதிகளுக்காகதீவிரவாதிகளுக்கு கப்பம் வழங்கப்பட்டு கைதிகள் விடுவிக்கப்பட்டசம்பவங்களும் உண்டு.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப் படாது விடின் இஸ்லாமியச் சட்டப்படி கைதிகளை சிரச்சேதம் செய்யப் போவதாக தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர்.

அதேவேளை, கடத்தப்பட்ட தினேஷ் ராஜரெட்ணம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக குவைத்துக்கு செல்லவில்லை என்றும் இவர் குவைத், லெபனான் அல்லது ஜோர்தான் தூதரகங்களின் ஊடாக விசா பெற்றுச் சென்றிருக்க வேண்டும் என்றும் இவர் தொடர்பாக அறிய வந்துள்ளது. ஈராக்கில் கடத்திச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தினேஷ் ராஜரெட்ணம் தனது மனைவிக்கு எழுதியுள்ள கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ஈராக்குக்கு வேலைக்குச் சென்றதும் சம்பளப் பணத்தில் அம்மனுக்கு பூஜை செய்வதாக தான் நேர்த்தி வைத்ததாகவும், அனுப்பும் சம்பளப் பணத்தில் அம்மனுக்கு பூஜை செய்யும் படியும், தாலியும் சங்கிலியும் செய்து கொள்ளும்படியும் பிள்ளைகளுக்கு சைக்கிள் வாங்கிக் கொடுக்கும் படியும் நல்ல சாப்பாடுகளைச் செய்து கொடுக்கும் படியும் குறிப்பிட்டிருந்ததாக அவரது மனைவி குறிப்பிட்டுள்ளார்.

கடத்த ப்ப ட்ட தினேஷ் ராஜ ரெட்ணம், பிள்ளை களின் கல்வி மற்றும் ஆரோக்கிய விட யங்களில் கூடிய ஆர்வம் உள்ளவர் என்பது தெரியவந்தது. குடும்பத்துக்காக உழைத்துப் பாடுபடும் தினேஷ் ராஜரெட்ணம் தனது வாழ்வில் கேட்ட மிகவும் மகிழ்ச்சியான செய்தியாக கூறியதாவது; 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தனது மகன் 'டிலான் குமார்' சித்தியடைந்த செய்தியைத் தான் எனவும் அவரது மனைவி குறிப்பிட்டார்.





மாதம் ஒன் றிற்கு ருபா 25 ஆயிரம்என்ற ஒப்பந்த அடிப்படையில் சென்ற இவருக்கு மாதாந்தம் ருபா 15 ஆயிரமே ஊதியமாக கிடைத்துள்ளது. கடத்தப்பட்ட தினேஸ் தர்மேந்திராவை விடுவிக்க சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் அரசும் வெளிவிவகாரஅமைச்சும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவரு கின்றது.

தினேஸதர் மேந்தி ராவுடன் கடத்தப்பட்ட பங்காளதேஷ் பிரஜையையும் விடுதலை செய்வதற்காக; இவர்கள் பணியாற்றிய அல்ஜஷீம் டிரான்ஸ்போட் நிறுவனம் தீவிரவாதிகளுடன் கோரிக்கை விடுத்துள்ளது. பிரதிஅமைச்சர் விஷ்வ வர்னபால ;கடத்தப் பட்ட தினேஷ் தர் மேந்தி ; வின் விடுதலைக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிய வருகின்றது. கடத்தப்பட்ட தினேஸ் தர்மேந்திரா விடுதலை செய்யப்பட வேண்டுமேயாகில் தீவிரவாதிகளின் இவ்விடயம் தொடர்பாக கொண்டுள்ள நிபந்தனைகள் என்னவென்று அறிந்துகொண்டால் மாத்திரமே இவரின் விடுதலை சாத்தியமாகக் கூடும்.

இதேவேளை, தினேஷ் தர்மேந்திராவை விடுதலை செய்ய அரசு எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லையெனக் கூறும் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, இவரின் விடுதலை தொடர்பாக தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் ஆபத்து நெருங்கும் வீதம் அதிகரித்துக்கொண்டே செல்லும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இவரின் விடுதலை தொடர்பாக ஜயலத் ஜயவர்த்தன அவர்கள்; ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம், குடியேற்றவாசிகளுக்கான சர்வதேச அமைப்பு ஆகியவற்றுக்கு அவசர கடிதங்களை அனுப்பி வைத்து விடுதலை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேளையில்

தர்மேந்திராவின் குடும்பத்துக்கும், நாட்டுக்கும் நல்ல செய்தி ஒன்றும் பிந்திக்கிடைத்துள்ளது. அதாவது, தினேஷ் தர்மேந்திரா எவ்வித ஆபத்துமின்றி இருப்பதாகவும், இன்னும் 24 மணி நேரத்துக்குள் தினேஷ் தர்மேந்திராவும், பங்களாதேஷ் பிரயையும் விடுவிக்கப்படுவார்கள் என ஈராக்கிய தீவிரவாதிகளினால் கைது செய்யப்பட்டு அவர்களால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்ட ஈராக்கிய மொழிபெயர்ப் பாளர் ஒருவர் தெரிவித்துள்ள தாக பிந்தி வந்த செய் தி கள் கூறுகின் றன.


எனவே, எது எவ்வாறு இருப்பினும் கைது செய்யப்பட்ட தினேஷ் தர்மேந்திராவின் விடுதலைக்காகவும், பங்களாதேஷ் பிரயையின் விடுதலைக்காகவும் மனித நேயமுடையவர்களாக இவர்களின் விடுதலைக்காக இறைவனிடம் மன்றாடுவோமாக.

(பாபு)
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் பூங்கா

## சினேகிதியே!

நிலையான சொந்தங்கள்
தான் கண்டதில்லை- உன்னை
நினைக்காத நாளென்று
ஒரு நாளும் இல்லை
பாசத்தைக் காட்டிவிட்டு
பாதியிலே பிரியாதே- பிற
பாசத்தை என் நெஞ்சம்
பாதிகூட எண்ணாதே
வேசங்கள் போடும்
தேசத்தில் ஏன் பிறந்தேன்- உன்
நேசத்தைக் கண்டதினால்
இந்நிமிடம் வாழ்கின்றேன்
உன் பாசமதைத் தேடி
உன் தேசமது வந்தேனே-அது
வேசமென எண்ணி
சில நாட்கள் நொந்தேனே
வேசமில்லை காதலென்று-நீ
விம்மி விம்மி சொன்னாயே
போதுமடி போதும் என்
பொழுதுகள் இனிப்பூக்கும்
தாயின் சாயலென்று -பலர்
காதெட்ட சொன்னதுண்டு
பழகிப் பார்த்த பின்னே
தாயைக் கண்டேனே
அன்று என்னை நேசித்தது
தாயின்றி யாருமில்லை-இன்று
என்னை நேசிப்பது
உன்னையன்றி யாருமில்லை
பாசம் வைப்பவரெல்லாம்
பாதியிலே பிரிவாரென்றால்
உன்னையும் பிரிய நேர்ந்தால்
உயிர் வாழாது என்னுடல்
வார்த்தை ஜாலமில்லையடி
இது என் ஆத்மாவில்
உணர்வுகளுக்குள் சங்கமமாகி
உற்றெடுத்த உறுதித் தீர்வு

*ஜி.எஸ் சிநேகிதன், கொழும்பு*

## பாடையிலே போகும் பட்டங்கள்!

நாம் வாங்கிய பட்டங்கள்
இங்கே படும் பாடு
காற்றுப் பார்த்து
நூல் பி(ப)டித்துப்
பறக்க விட்டோம்
பி(ப)டித்த நூல்
கையில் இருக்க
பட்டம் காற்றில்
படபடக்கிறது
பட்டம் பெறும் வேளை
கறுப்பங்கி அணிவது
எதிர்காலம் எப்படி
என்பதைக் காட்டத்தான்
எங்கோ படித்ததாக
ஞாபகம்
"வேலைக்காய்
அலையும்
பட்டதாரிகள்
வீதியில் கிடக்கும்
புல்லாங்குழல்கள்
வேலை தருநர்களின்
பேனா நண்பர்கள்"
வேலை வேண்டி
ஊர்வலம் செல்ல
பணமில்லை எம்மிடம்
கண்ணில் தீபமேற்றி
காத்திருந்தோம்
நெஞ்சில் நெருப்பு
ஊசி குத்துவது
தெரியாமல்.......

*கரும்புள்ளியான் விக்கி*
*பாண்டியன் குளம்*

## கற்பத்தில் கரைந்திருக்கலாம்!

உன்னைப் பார்க்காமல்
இருப்பதை விட-நான்
குருடாகப் பிறந்திருக்கலாம்
உன்னோடு பேசாமல்
இருப்பதை விட-நான்
ஊமையாய் பிறந்திருக்கலாம்
உன் பேச்சைக் கேட்காமல்
இருப்பதை விட-நான்
செவிடாகப் பிறந்திருக்கலாம்
உன் ஸ்பரிசங்களை
உணராமல் இருப்பதை விட,
நான் உயிரற்று இருக்கலாம்
உன்னைப் பிரியும்
வேதனையைவிட
நான் பிணமாகி
விடலாம்
மொத்தத்தில் கற்பத்திலேயே
காணாமல் போயிருக்கலாம்

*கவிதா,*
*இயக்கச்சி*

## தூரத்தில் இருக்கும் உனக்காய்!

என்றும் என் இதயத்துள்
வியாபித்திருக்கும்
நீ – இன்று
நினைவுகளால் மட்டுமே
எனை
அரவணைத்து நிற்கிறாய்
ஆனால்....
எப்போதும் என்
மனம் நாடுவது
உன் அருகாமையை மட்டுமே
என்பது எப்போது
உனக்குப் புரியப்போகிறது
அன்னையே!

*எஸ். சிநேகா, சாவகச்சேரி.*

## கையடக்கத் தொலைபேசி

நவீன யுகத்தின்
எடுப்பார் கைக்குழந்தை
வீதியின் வாகனத்தில்
விடுதியில் படிப்பறையில்
அமைதி பேணி நடக்கும்
அதியுயர் கூட்டங்களில்
அழைப்பொலி
அசௌகரியமாக
அநாவசியத் தொந்தரவு
ஆனாலும்
அவசியமானவர்க்கு
அட்சய பாத்திரம்
அந்தஸ்த்துப் பார்ப்பவரின்
அடையாள குறி
ஏழைகளுக்கோ
எட்டாத புதிர்
நடுத்தர மக்களுக்கு
இருப்பினில் சுமையாய்
எடுப்பதும் இல்லை
இரவல் கொடுப்பதுமில்லை
எனினும்
கையடக்கமானதுதான்
கைகளுக்கு.....
விலையில் அல்ல.....

*த.சி.ரஞ்சன்*
*நாவலப்பிட்டி*

## தீபத் திருநாளே!

மங்கலம் பொங்கிட
தமிழ் இதயங்கள்
தோறும்
இருள் திரையகற்றும்
தீபத் திருநாளே!
உயர்ந்து நிற்கும்
எம் இனத்தின்
துயரச் சோகங்கள்
இனி ஒரு தரம்
வேண்டாம் எமக்கு!
மமதை அகற்றும்
தீபத் திருநாளே
உன் வரவால்
தூய்மை பெறட்டும்
ஆளும் உள்ளங்கள்!
வீரத் தமிழினத்தின்
இறந்த கால
அனர்த்தங்கள்
இன்னும்
புரையோடிப் போன
புண்களாய்.....!
மறந்து போக
முடியாத
தமிழனின் துன்பச்
சுமைகள்
இனியொரு தரம்
தீண்டாதவாறு
பாய்ச்சி விடு உன்
ஒளியை
இத் தீபத்
திருநாளில்......!
சுதந்திரக் காற்றின்
சுகந்த மணம்
எம்மின ஜீவன்களின்
நாசி தொட
வருவாய்......
இன்பம் தருவாய்...
தீபத் திருநாளே....!

*தர்ஷனா*

## அம்மா....!

நீ எனக்கு நான்
நீ என்பதால்
நான் ஆகினேன்.
நான் உதித்ததால்
நீ தாயாகினாய்...
எனக்குள் உள்ள நீ!
என் உணர்வுகளை
பிரசவித்த நீ தானே
நான் உன் கலவை
நீ என் துடிப்பு
துடிப்புக்களின்
உணர்வுகள்
உனக்கானவை...
நீ செய்த நான்
உன் தாயாவது
எப்போதம்மா?
இப்போது இல்லை என்றால்
எப்போதும் நான் உன்
சேய் தானே
அம்மா...

*கே.கதிர்*
*சபரகமுவபல்கலைக்கழகம்.*

## மனிதர்களுக்கு மட்டும்!

தளர்ந்துவிட்டது
என்னுள் இருந்த
நம்பிக்கைத் தூண்களெல்லாம்
தளர்ந்துவிட்டது.
சிறையறையே
கல்லறையாகிவிடுமோ
விடுதலையின் உச்சரிப்புக்கு
இத்தனை வலிமையா?
என் இளமை
எழுதிய கனவுகள்
எத்தனை எத்தனை
என்னுள்ளேயேவள
உறைந்துகிடக்கிறது.
இன்றோர் மூலையில்
முடக்கப்பட்டு
மறைக்கப்பட்டுக்கிடக்கும்
என் உள்வ
உணர்வுகளை
கண்களுக்குத் தெரியாத
காற்றுடன் கலந்துவிட்டேன்.
மனிதனவன்
மனிதனாக இருந்தால்
நிச்சயம் இது
அவன் இதயம்
தொடும்!

*தமிழின்பன் லூக்கஸ்*
*களுத்துறைச்சிறை*

## உச்சரியாதீர்

பரவாயில்லை
இப்படியே
வாழ்ந்து விடுகிறோம்
ஆனால்
இது ஜனநாயக
நாடென்று
மட்டும்
இனியும்
உச்சரியாதீர்
விதிவிலக்கு
இந்நாட்டில்
மட்டுமே
விதிவிலக்கு
போர்
நடக்க வேண்டும்
என்பதற்காகவே
ஆர்ப்பாட்டங்கள்
நடக்கின்றன

*கல்லடி றொபட்*
*களுத்துறைச்சிறை*

## ஏங்கும் உள்ளம்!

அன்பே
ஒரு தடவையேனும்
திரும்பிப்பார்
அப்படியே
நீ போகும் வழியையே
பார்த்துக்
கொண்டிருக்கும்
என் பூ முகத்தை
அன்பே
ஒரு நிமிடமேனும்
சிந்தித்துப்பார்
ஒரு நிமிடமாவது
உன்னைப் பற்றி
சிந்திக்க மறவாத
என்னைப் பற்றி
அன்பே
ஒரு சொல்லேனும்
பேசிவிடு
ஒரு கோடி வார்த்தைகள்
பேசத் துடிக்கும்
என்னுடன்
உன்
செவ்விதழால்
உதிர்த்துவிடு
ஓர் புன் சிரிப்பை
புன்னகைக்க
மறந்துவிட்ட
என் இதழ்களிற்காய்
உயிரே
ஓர் அசைவிலேனும்
காட்டிவிடு
உன் அன்பை
எந்த சைகையையும்
புரிந்து கொள்ள முடியாத
என் உணர்வுகளிற்காய்

*ரகுபாரதி, கம்பர்மலை.*

## காதல் வலி

கண்களோ மான்விழி
கானமோ தேன் மொழி
சிரிப்போ சிலம் பொலி
நடையோ அன்னம்
இதழ்களோ செவ்விதழ்
பருத்த தொடைகள்
பருவத்தைக் காட்டும்
கண்டேன் அவளை
கொண்டேன் காதல்வலி

*ச.விஜயன், பூநகர்.*

## தாய்

தாலாட்டி சீராட்டி
தன்னையே வருத்தி
கண்போலக் காக்கும்
காவற் தெய்வம்

## சோகம்

காற்றாய் வந்து
கண்ணீர் தந்து
நொடியில் உதிரும்
இயற்கை மலர்வு

## பெண்கள்

உள்ளக் கிடக்கைகளை
உள்ளே அடக்கிக் கொண்டு
உள்ளத்தால் ஒருமைப்பட்டு வாழும்
ஊமை விழிகள்

## கனவு

கற்பனையில் வரும்
இனிய வருகையல்ல
அனுபவ ரீதியில் வரும் – ஓர்
உண்மை வருகை

*ரீ.நவராஜ்*
*திருமுறிகண்டி.*

## நீ வந்த போது!

பார்த்திருந்தேன்
பலகாலம்
பாவி நீ வருவாய் என
எண்ணியிருந்தேன்
சில காலம்
ஏக்கங்கள் தீர்ப்பாய் என
சொல்லியிருந்தேன்
பலருக்கு
சொன்ன சொல்
தவறாதவன் என
உறங்காதிருந்தேன் தினமும்
உன் வருகையை எண்ணி
இத்தனையும்
பொய்யாக தேடினேன்
தொலைதூரம் தென்றலைத்
தூது விட்டு
தென்றல் தொலைந்து போக
தூக்கம் தூரந்து போனது
துயரங்கள் துணைக்கு வந்தன
நீ வந்த போது வசந்தமான
வாழ்வு நீ சென்ற போது
பாலைவனமாகியது!

*சா.விதீபா*
*வவுனியா*

## இளைஞனே திரும்பிப்பார்!

மரணிக்கும் பாதைநோக்கி
மிதந்து கொண்டிருப்பவனே!
பல துன்பம் வந்தபோது
பாடிய வரிகளெங்கே?
நாகரீக வாழ்வு கேட்டு
நாயாய் அலைவதேன்?
நல்ல மனம் புரிந்திடாது
நரம்பில்லா நாக்கதனால்
நச்சுக் சாகடிப்பதேன்?
சற்றுத் திரும்பிப்பார்
நீ கடந்து வந்த
வழிகளை.
கரடுமுரடான பாதைகள்
கடுகடுப்பான வழிகளவை
கஷ்டங்கள் பல கொடுத்த
கனதியான பயணங்கள்.
ஏழைகளின் சிரிப்பு வேண்டி
ஏங்கிய நாட்களவை.
இன்று... நீ ஏன்?
வாடிய மலர்களுக்கு
வனப்பு இல்லையென்பது மெய்
வாடிய நாட்களுக்கு???
ஒடுங்கிய பாரச்சுமைதனை
ஒரு கணத்தில் உதறலாமா?
பணமதனைக் கண்டவுடன்
பாதை தனை மறக்கலாமா?
தத்துவப் பொன் மொழிக்கு
சாவேதும் இல்லையென்று
சாற்றிய சிந்தனையில்
உன் இருப்பும் நிச்சயமே
அது வரையில்...
அழிவுப் பாதை தனில்...

*செ.சிபி.*
*அல்லாரையூர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக்கட்சி – ஜே.வி.பி. பிரசாரப் போரில்!

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்குள் குழப்பம் முற்றியிருக்கிறது. அரசில் உள்முரண்பாடு தீவிரமடைந்து பூகம்பமாக வெடித்திருக்கிறது.

அரசின் பிரதான கூட்டுக்கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. ஆகியவற்றின் தலைவர்கள் இப்போது பிரசாரப் போரில் ஈடுபட்டிருக்கின்றனர். சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்து மறுநாளே இரு கட்சிகளிடையேயும் பனிப்போர் தொடங்கிய போதிலும், அது இன்று உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது.

சுதந்திரக்கட்சி–ஜே.வி.பி. தலைவர்களிடையேயான முறுகல்நிலை அரசின் எதிர்காலத்தைக் கேள்விக்குட்படுத்தியிருக்கிறது. கூட்டமைப்பு அரசின் கடந்த ஏழு மாதகால ஆட்சியில் பல்வேறு கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு வந்தபோதிலும், அவை ஓரளவு முறையாகப் பேசித்தீர்க்கப்பட்டிருக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கைகளில் அவ்வப்போது அதிருப்தியுற்ற ஜே.வி.பி. தலைவர்கள், ஜனாதிபதியை விமர்சித்தும், கண்டித்தும் அவருக்கே நேரடியாகக் கடிதங்களை எழுதி வந்தனர்.

### ஏமாற்றம் தந்த ஜனாதிபதியின் போக்கு

சில விடயங்களில் ஜனாதிபதியை விசாரணைக்குட்படுத்துவது போன்று ஜே.வி.பியினரின் கடிதங்கள் அமைந்திருந்தன. அவற்றுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எழுத்து மூலம் விளக்கமளித்தும் வந்தார். ஜனாதிபதியின் பதில்களில் ஜே.வி.பி.தலைவர்கள் திருப்தி காணாத போதிலும் அரச இயந்திரத்தை இயக்குவதற்காக, அவர்கள் ஒருபடி கீழே இறங்கிச் சென்று விட்டுக்கொடுப்புகளுடன் செயற்பட்டு வந்தனர்.

அத்தியாவசியப்பொருட்களின் விலை உயர்வு, அரிசி இறக்குமதி, அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, சுதந்திரக் கட்சி அமைச்சர்களின் ஊழல், மோசடிகள் போன்ற விடயங்களில் ஜே.வி.பியினர் அவ்வப்போது போர்க்கொடி தூக்கியபோதிலும், ஜனாதிபதி அவற்றைப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

ஜனாதிபதியின் போக்கு ஜே.வி.பி. தலைவர்களுக்கு பலத்த ஏமாற்றத்தையும், ஆத்திரத்தையுமே ஏற்படுத்தி வந்தது. எல்லாவற்றையும் விட இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளில் ஜனாதிபதி மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளும் அவர்களுக்கு விசனத்தை மேலோங்கச் செய்தன.

சமாதான முயற்சிகள் தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாடு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரானதாக இருந்து வருகின்ற போதிலும், சமாதானப் பேச்சு புலிகளோடு மட்டும்தான் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பும், புலிகளுடன் ஐ.தே.க. அரசு செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் புலிகளுக்கு ஜனாதிபதி சலுகைகள் செய்கிறார் என்கின்ற விடயமும் சிங்கள மக்கள் மத்தியில் ஜே.வி.பியின் செல்வாக்கைக் குறைத்து விடலாம் என ஜே.வி.பி. தலைவர்கள் கருதுகின்றனர்.





இலங்கை அரசின் முதுகெலும்பு ஜே.வி.பிதான் என்று அதன் தலைவர்கள் கூறிவருகின்றனர். அந்த அரசு முற்றிலும் பௌத்தர்களின் நலன்களில் அக்கறையோடு செயற்பட வேண்டும், புலிகளுக்குமுழுக்கமுழுக்க எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும் என அவர்கள் கருதுகின்றனர்.

ஆனால், அரசின் முழுமையான அனுசரணையுடனேயே தமிழீழ விடுதலைப்புலிகள் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று வருகின்றனர். நாட்டின் இறைமைக்குப் பாதகமான கருத்துகளை அவர்கள் அந்நாடுகளில் துணிச்சலாக வெளியிட்டிருக்கின்றனர்.

எமக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை இலங்கை அரசு தராதவரை அல்லது அதன் அடிப்படையிலான பேச்சுக்கு முன் வராதவரை நிதி உதவிகளை வழங்க வேண்டாம் எனவும் அவர்கள் அந்த நாடுகளை வற்புறுத்திவிட்டு வந்திருக்கின்றனர்.

இவையெல்லாம் ஜே.வி.பி. தலைவர்கள் மத்தியில் எரிச்சலை ஏற்படுத்தியிருக்கின்றன. ஜனாதிபதி கண்மூடித்தனமாக மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளுக்கு அரசின் பிரதான கூட்டுக் கட்சியினரான தாமும் பொறுப்புச் சொல்லவேண்டி ஏற்படும் என்கின்ற அச்ச உணர்வே ஜே.வி.பியினரை இன்று ஆட்கொண்டிருக்கிறது.

எனினும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தங்களின் ஆலோசனைகளைக் கணக்கில் எடுக்கின்றார் இல்லை என ஜே.வி.பியினர் குமுறுகின்றனர்.

தேர்தலுக்கு முன்பு சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஜனாதிபதி மீறி வருகின்றார் என்று ஜே.வி.பி.தலைவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தனக்கிருக்கின்ற நிறைவேற்று அதிகாரத்தைப் பாவித்தே ஜே.வி.பியினரைப்புறக்கணித்து – ஓரங்கட்டி – தான் தோன்றித்தனமாக – எதேச்சதிகாரத்துடன் செயற்பட்டு வருகின்றார் என்பதனாலேயே, சந்திரிகா அம்மையாரை இப்போது ஜே.வி.பி.தலைவர்கள் தனிப்பட்ட ரீதியில் விமர்சித்தும், கிண்டலடித்தும் வருகின்றனர்.

### இரத்தினபுரிப் பேச்சு

இரத்தினபுரியில் அண்மையில் இடம் பெற்ற மாநாடு ஒன்றில் ஜே.வி.பி.பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ, சந்திரிகா அம்மையாரின் சுய கௌரவத்திற்கு இழுக்கை ஏற்படுத்தும் வகையில் மிகக் கேவலமாகப் பேசியதானது, சுதந்திரக் கட்சித் தலைவர்களையும், ஜனாதிபதியையும் மிகக் கடுமையாகச் சீண்டியிருக்கிறது.

இப்போது நிறைவேற்றதிகாரத்தைப் பாவிக்கின்ற சந்திரிகா அம்மையார், கடந்த ஐ.தே.க. அரசின் இரண்டரை வருடகால ஆட்சியில் கைகட்டப்பட்டிருந்தார் எனவும், ஜே.வி.பியினரே அவரது அதிகாரத்தை மீளப் பெற்றுக் கொடுத்தனர் எனவும் விமல்வீரவன்ஸ கூறியிருந்தார்.

அப்போது ஐம்பது சதத்திற்கும் பெறுமதியற்றிருந்த சந்திரிகா அம்மையாரை நாமே உயிரூட்டி – அதிகாரம் படைத்தவராக மாற்றினோம் எனவும் விமல்வீரவன்ஸ தெரிவித்திருந்தார்.

இக்கருத்துகளின் மூலம் அவர் கூறமுற்படுவது யாதெனில் எம்மால் கிடைக்கப் பெற்ற அதிகாரத்தை எமக்கெதிராகப் பாவிக்காமல் நாம் கூறுவது போன்று பயன்படுத்துங்கள் என்பது தான்.

குறிப்பாக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே போன்றோரின் ஊழல், மோசடி நடவடிக்கைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஜே.வி.பியினர்வற்புறுத்துகின்றனர். அமைச்சர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் கொதிக்கின்றனர்.

ஆனால், ஜனாதிபதி மேலும் மூவருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கியதன் மூலம் தன்னை யார் என நிரூபித்துவிட்டார். விரும்பினால் அடங்கிப்போங்கள். அல்லது முடியுமானதைச் செய்து கொள்ளுங்கள் என சந்திரிகா அம்மையாரின் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

உங்களில் நால்வருக்கு பொறுப்பு வாய்ந்த அமைச்சுப் பதவிகள் தரப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கான பிரதி அமைச்சுக்களும் உங்களுக்குரியவையே. அவற்றின் அலுவல்களைப் பார்த்துக் கொள்ளுங்கள். விவசாய, காணி, நீர்பாசன அமைச்சர் அனுரகுமார திஸாநாயக்கவின் ஊழல், மோசடி குறித்து முதலில் ஆராயுங்கள் பார்க்கலாம் என ஜே.வி.பி.தலைவர்களுக்கு ஜனாதிபதி சாட்டையடி கொடுத்துள்ளார்.

அரசினதும், அமைச்சரவையினதும் கூட்டுப்பொறுப்பை மீறிநடக்காதீர் எனவும் ஜனாதிபதி, உரத்த தொனியில் ஜே.வி.பியினருக்கு கட்டளை பிறப்பித்துள்ளார்.

ஆனால், ஜே.வி.பியினர் இந்த மிரட்டல்களுக்கு அடிபணிந்து அடங்கிப் போவார்களா? நிச்சயமாக இல்லை. சந்திரிகா அம்மையாரின் சண்டித்தனத்தை ஜே.வி.பியினர் எவ்வாறு கட்டுப்படுத்துவர் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

–அஸ்லம் எஸ்.மௌலானா–


அவுஸ்திரேலியாவில்

சுடர்ஒளி

பெற்றுக்கொள்ள

எமது விநியோகஸ்தர்கள்

M.K.S.International

23-25 Pultney St.

Dandenong 3175

Australia :- 03 97 013165



## அறிவித்தல்

**யாழ்ப்பாணம் நிறைவாக்க மருத்துவத்துக்கான திறந்த சர்வதேச பல்கலைக் கழகத்தின் ஒருமைப்பாட்டு மருத்துவ வளாகம்.**

நிறைவாக்க மருத்துவத்துக்கான திறந்த சர்வதேச பல்கலைக்கழகத்துடன் (AlmaAta 1962) இணைந்த Altrnatira International) அமைப்பு அக்கியூபங்சர், மொக்மி பியூஷன், ஹோமியோபதி, ஆயுர்வேதம், சித்த யூனானி, ஆன்மீக சிகிச்சைமுறை, லேசர் சிகிச்சை முறை, மற்றும் ஏனைய பாரம்பரிய நிறைவாக்க மருத்துவங்கள் பற்றிய தீவிர பாடநெறி ஒன்றுக்காக இப் பிராந்தியத்தில் இருந்து தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்களை வரவேற்கின்றது. வறிய தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு முழுமையான புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். வரையறைக்குட்பட்ட தொகை இடங்களே கிடைக்கக் கூடியதாக உள்ளன. வார இறுதிகளுக்கான பாடநெறி (செயல் முறை மற்றும் கருத்தியல்) யாழ்ப்பாண குடாநாட்டில் 2005, ஜனவரி இரண்டாம் வாரத்தில் ஆரம்பமாகிறது. 142 நாடுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வருகைதரும் விரிவுரையாளர்கள் பாடநெறிகளை மேற்கொள்வார்கள். இது 142 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட தீவிர பாடநெறியாகும். உலகளாவிய ரீதியில் 42 வருடங்களாக இது வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது. இறுதிப் பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் 142 நாடுகளில் ஒருமைப்பாட்டு இணைப்பாக்க மருத்துவத்தில் பயிற்சி மேற்கொள்ள முடியும்.

விண்ணப்பதாரர்கள் 2004, நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன்பாக தலைவர் Medicina Alrematira, 28 சர்வதேச பௌத்த நிலைய வீதி, கொழும்பு - 06 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம்.

தொலைபேசி இலக்கம் : 2502383
ஈ.மெயில் : aitc4@postmark.net

**பாடநெறிக்கான போஷகர்:**
பேராசிரியர் டாக்டர் சேர். ரவி பொன்னையா (UK)
**கற்கைகள் துறைத் தலைவர்:**
பேராசிரியர் டாக்டர் சேர். அன்ரன் ஜயசூரியா
**ஹோமியோபதி ஆலோசகர்கள்:**
டாக்டர் ஆஞ்ஜெலிக்கா மெஹ்ம்கே M.D (Bonn). F.F (Hon. D.Ac (Peking). Ph.D
பேராசிரியர் ஜோஷெப் போல் M.D. Ph.D., D.Sc.
(எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகம், சென்னை, இந்தியா)



## பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லிறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் *(முத்திரை செலவுடன்)* விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஒடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**
நவம்பர் 21 – 26 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

**வவுனியாவில்...**
நவம்பர் 06 - 07 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

**யாழ்ப்பாணத்தில்...**
நவம்பர் 13 - 18
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Kooiavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

நவம்பர் 07 – 13, 2004



85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com


## பாதுகாப்பு ஒப்பந்தமும் அகாஷியின் கருத்தும்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ளார்.

இந்திய இராணுவத்தளபதி ஜெனரல் நிர்மல் சந்தர்விஜ்ஜின் இலங்கை விஜயம், ஜனாதிபதியின் இந்திய விஜயம் ஆகியவை இந்தியாவில் காங்கிரஸ் அரசு பதவி ஏற்ப பின்பு இலங்கை தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு எப்படி அமையப் போகின்றது என்பதை கோடிகாட்டுகின்றன.

ஜனாதிபதி தனது இந்திய விஜயத்தின் போது இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட இருக்கிறார்.

1. இராணுவத்துக்கு பயிற்சி அளிப்பதில் பெரிய அளவில் ஒத்துழைப்பு வழங்குவது.
2. இராணுவத் தகவல்களை பரிமாறிக் கொள்வது.
3. இரு நாடுகளும் கூட்டாக இராணுவ ஒத்திகைகளை நடத்துவது.
4. கடல் வேவு நடவடிக்கைகளில் ஈடுபடுவது.
5. பாதுகாப்பு தொடர்பாக பல மட்டங்களில் பரஸ்பர சந்திப்புக்களை நடத்துவது.

இந்த பாதுகாப்பு ஒப்பந்தம் மேற்கண்டவற்றை உள்ளடக்கி இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

1987 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தியும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் செய்து கொண்ட ஒப்பந்தம் இன்னும் வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயமாக இருந்து வருகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு அந்த ஒப்பந்தம் உதவவில்லை. இன்று இனப்பிரச்சினை தீவிரமடைந்ததுக்கு, இலங்கை – இந்திய ஒப்பந்தமும் ஒரு காரணம். அன்று தமிழ் மக்கள் மீது பலாத்காரமாகத் திணிக்கப்பட்டது இந்த ஒப்பந்தம்.

1990 களின் முற்பகுதியில் இந்திய இராணுவம் இலங்கையில் இருந்து அவமானத்துடன் திரும்பிச் சென்றதை எந்த இந்தியரும் மறந்து விடமுடியாது.

தற்பொழுது புதுடில்லியில் கைச்சாத்திடப்படும் ஒப்பந்தம், இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் என்று கூறப்பட்டாலும் இதன் நோக்கம் நிச்சயமாக இலங்கைத் தமிழர் தரப்புக்கு ஏற்புடையதாக இருக்க மாட்டாது என்பது மட்டும் நிச்சயம்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இது உதவ மாட்டாது. இந்தியாவின் நோக்கங்களுக்கே இது உதவும். அதுமட்டும் அல்ல இலங்கையின் சமாதான முயற்சிகளையும்இது பெரிய அளவில் பாதிக்கும்.

ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷியின் வன்னி விஜயத்தின் போது இந்த ஒப்பந்தம் குறித்து புலிகள் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

ஆனால், அதன்பின்பு இந்த ஒப்பந்தம் குறித்து அகாஷி கொழும்பில் தெரிவித்த கருத்துக்கள்தான் வேதனை அளிக்கின்றன.

''உத்தேச இலங்கை – இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் வடக்கு – கிழக்கு பற்றியதல்ல என்பதால் அது குறித்து எச்சரிக்கை கொள்ள ஒன்றுமே இல்லை. இந்த ஒப்பந்தம் இரண்டு இறைமை உள்ள நாடுகளுக்கு இடையில் செய்யப்படுவதால் இதில் விடுதலைப் புலிகள் ஆட்சேபம் தெரிவிப்பதற்கு எதுவுமே இல்லை'' என்று அகாஷி தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கு உதவும் சர்வதேச நாடு என்ற முறையிலும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னணியில் இருக்கும் நாடு என்ற முறையிலும் இலங்கை விடயத்தில் ஜப்பானுக்கும் அதன் சார்பில் அதன் விசேட தூதுவர் அகாஷிக்கும் இலங்கை விடயத்தில் கணிசமான பங்கு உண்டு.

அவர் எட்டாவது தடவை தற்சமயம் இங்கு வந்து சென்றிருப்பது, அரசு – புலிகள் ஆகிய இரு தரப்பினருமே அவர் மீது வைத்துள்ள நம்பிக்கை காரணமாகத்தான். அதாவது நடுநிலைமையாக நின்று செயற்படுகிறார் என்ற நம்பிக்கை இரு தரப்பினருக்குமே இருந்து வந்தது.

இந்த நம்பிக்கையை குலைத்துவிட்டது. இலங்கை – இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக அகாஷி தெரிவித்த கருத்து.

# அகாஷி விஜயம் பயன் தருமா?

ஜப்பானிய சமாதானத்தூதுவர் யசூஷி அகாஷி எட்டாவது தடவையாக இலங்கை வந்து நாடு திரும்பி உள்ளார்.

அவரது இந்த விஜயம் முன்னைய விஜயங்களை விட முக்கியத்துவம் வாய்ந்தது. என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தமது ஆறுநாள் விஜயத்தை முடித்துக் கொண்டு அவர் புதுடில்லி புறப்படுவதற்கு முன் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் ''இருதரப்பினருமே பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருக்கின்றனர். யார் முதலில் காலடி எடுத்து வைப்பது என்பதே தற்போது எஞ்சி உள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

அகாஷி தனது வன்னிப் பயணத்தின் முன் கொழும்பில் ஜனாதிபதியையும் பிரதமரையும் எதிர்க்கட்சித் தலைவரையும் சந்தித்தார். கிளிநொச்சியில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனைச் சந்தித்து விட்டு கொழும்பு திரும்பி புதுடில்லி பயணமானார்.

இலங்கையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சியில் ஏற்பட்டுள்ள ஆகப்பிந்திய நிலமையை அவர் இந்திய தலைவர்களிடம் தெரிவித்து விட்டு நோர்வே புறப்பட்டுள்ளார்.


புதுடில்லி புறப்படுவதற்கு முன்னர் அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவைச் சந்தித்து, அவர் மூலம் வன்னியில் பேச்சுக்களின் பெறுபேறுகளை ஜனாதிபதியிடம் தெரியப்படுத்தியுள்ளார்.

''இருதரப்பினரும் - அதாவது அரசும் புலிகளும் - பேச்சுவார்த்தைக்குத் தயார், ஆனால் யார் முதலில் காலடி எடுத்து வைப்பது என்தே எஞ்சி இருக்கிறது'' என்று புதுடில்லி புறப்படுமுன் அகாஷி தெரிவித்திருப்பது மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பமாகலாம் என்ற நம்பிக்கையை ஊட்டி இருக்கின்றன.

கொழும்பில் ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது அகாஷியிடம் ஜனாதிபதி தெரிவித்திருந்த உறுதி மொழியே அகாஷிக்கு சமாதானத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் தடைப்பட்டுப்போய் உள்ள சமாதானப்பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு புலிகளினால் தெரிவிக்கப்பட்ட நான்கு அடிப்படை விடயங்களில் பிரதானமான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றிய யோசனைகளை அடிப்படையாக வைத்து பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே.

தன்னாட்சி அதிகார சபை பற்றிய பேச்சுக்களை நடத்தி அதனை செயற்படுத்திக் கொண்டு இறுதித் தீர்வுக்கான பேச்சுக்களை நடத்தலாம் என்பது புலிகளினது மட்டும் அல்ல தமிழ் மக்களின் அபிலாசையும்தான்.




ஜனாதிபதி இதற்கு ஆரம்பம் முதலே எதிர்ப்புத் தெரிவித்து வந்தார்.தற்போது ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் மாற்றம் ஒன்று தெரிகிறது. புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்த ஜனாதிபதி இணங்கி இருக்கிறார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அகாஷி மூலம் இது புலிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சமாதான அனுசரணையாளர்களான நோர்வே மூலம் இந்த அறிவிப்பு வெளிவர வேண்டும் என்கின்றனர் புலிகள்.

தன்னாட்சி அதிகாரசபை குறித்து முதலில் பேசவும் அதனை செயற்படுத்திக் கொண்டு இறுதித் தீர்வு குறித்துப் பேசவும் ஜனாதிபதி தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களுடனான சந்திப்பின் போது முன்பு ஒரு தடவை இணங்கி இருந்தார் . ஆனால் ஜே.வி.பி. போன்ற தென்னிலங்கைத் தீவிரவாதிகளின் நெருக்குதல் காரணமாக அடுத்த நாளே இதனை காற்றில் பறக்க விட்டுவிட்டார் ஜனாதிபதி.

தற்போது இரண்டாவது தடவையாக அவரது வாயில் இருந்து இப்படியான ஒரு வாக்குறுதி வெளிவந்திருக்கிறது.

ஆனால் ஜனாதிபதி தனது சொல்லைக் காப்பாற்றுவாரா என்பது இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

ஜனாதிபதி நேரத்திற்கு நேரம் ஒன்று கூறுவதில் வல்லவர். அவரை நம்ப முடியாது என்பது புலிகளின் நிலைப்பாடு.

இதனால்தான் நோர்வேயின் மூலம் இந்த உறுதிமொழியைப் பெற்றுக் கொள்வதில் புலிகள் அக்கறை காண்பித்து வருகின்றனர்.

புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார யோசனை குறித்து மட்டும் பேச்சு நடத்த ஜனாதிபதி தயார் என்றால் அதனை அனுசரணையாளர்களான நோர்வே மூலம் தெரியப்படுத்தலாம் தானே!

வடக்கு - கிழக்கில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வழங்கப்படுவதை ஜே.வி.பி. இன்றும் வன்மையாக எதிர்க்கிறது. ஆனால் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை அது இன்னும் பகிரங்கமாக நிராகரிக்கவில்லை என்றே கூறப்படுகிறது.

ஒஸ்லோவில் நடைபெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சுக்களின் அடிப்படையில் தீர்வு ஒன்றை எட்டத்தயார் என்ற உறுதிமொழியை புலிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளவும்-

இடைக்காலத்தீர்வுக்குமுன்பு இறுதித் தீர்வு எட்டப்பட்டுவிட்டது என்று ஜே.வி.பியினரை நம்ப வைக்கவும் - ஜனாதிபதி திட்டம் தீட்டி வருகிறார். இதன் மூலம் ஜே.வி.பியின் எதிர்ப்பை சமாளிக்கலாம் என்று ஜனாதிபதி நம்புகிறார்.

ஜனாதிபதியின் தற்போதைய நிலைப்பாட்டுக்கும் ஜே.வி.பி.இணங்கி வராவிட்டால் ஜனாதிபதி மீண்டும் குத்துக்கரணம் அடிக்க வேண்டியது தான் .அதே சமயம் ஒஸ்லோபிரகடனம்என்று எதுவுமே இல்லை என்று புலிகள் தரப்பு மட்டும் அல்ல நோர்வேயும் தெரிவித்து விட்டது.

ஆகவே, சமாதானப் பேச்சுக்களுக்கு இரு தரப்பினரும் தயார், முதலில் காலடி எடுத்து வைப்பது யார் என்பதே எஞ்சி இருப்பதாக அகாஷி தெரிவித்தாலும் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கு முன்பு இன்னும் பல படிகளைக் கடக்க வேண்டி இருக்கிறது.

# சபாநாயகரை அகற்றுவது அடுத்தகட்ட நகர்வு

மிகவும் நெருக்கடியான காலகட்டம் ஒன்று உருவாகி இருப்பதாக கொழும்பில் நடைபெற்ற சர்வதேச ரீதியிலான கருத்தரங்கு ஒன்றில் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசமைப்புக்கு முரணாக அரசமைப்பை மாற்றவும் தனது பதவிக் காலத்தை நீடிக்கவும் ஜனாதிபதி காய்களை நகர்த்தி வருவதே தற்போதைய அரசியல் நெருக்கடிக்குக் காரணம் ஆகும்.

தனது பதவிக்காலத்தின் பின்னரும் ஆட்சி அதிகாரத்தில் தொடர ஜனாதிபதி விரும்புகிறார். அதைச் செய்ய தற்போதைய அரச மைப்பு இடமளித்துள்ளது.

அரசமைப்பை மாற்ற விரும்புகிறார்.

இதற்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை. அந்த பெரும்பான்மையை பெறுவதிலேயே கடந்த ஏழு மாதங்களும் செலவிடப்பட்டிருக்கின்றன.

1. அரசை ஆதரிக்க மறுத்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலும், ஜாதிக ஹெல உறுமயவிலும் பிளவுகளை ஏற்படுத்தியது.

2. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் உள்ள மூவருக்கு அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர் பதவி வழங்கியது.

3. இ.தொ.கா.வுக்கு இரு அமைச்சர் பதவிகளை வழங்கி அவர்களை அணிமாறவைத்தது.

இவற்றின் மூலம் [illegible] அரசின் தடுமாற்றத்தை தன்னாட்டத்தைக் களைந்து ஜனாதிபதி அதன் ஸ்திரத்தன்மையை ஓரளவு உறுதிப்படுத்தி இருக்கிறார்.

பதவிகளுக்காகவும், சலுகைகளுக்காகவும் நாக்கைத் தொங்கப்போட்டுக்கொண்டு அலைவோர் நாடாளுமன்றத்தில் இருக்கும் வரை ஜனாதிபதிக்கு கவலை இல்லை.

கடந்த பொதுத் தேர்தலின் போது, 35 அமைச்சர்களுக்கு மேல் நியமிக்கப்போவதில்லை என்று ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஆனால், இன்று 80பேர் அமைச்சர்களாக உள்ளனர். ஜனாதிபதியின் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 62பேரில் ஒருவர் தவிர ஏனைய அனைவரும் அமைச்சர்கள்.

100கோடிக்கு மேல் மக்கள் தொகையைக் கொண்ட இந்தியாவில் 27 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் உட்பட 65 அமைச்சர்கள் மட்டுமே உள்ளனர்.

ஆனால், இரண்டு கோடி சனத்தொகை கூட இல்லாத இலங்கை 80 அமைச்சர்களை நியமித்து சாதனை நிலைநாட்டி இருக்கிறது. நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதற்காக ஜனாதிபதி கையாண்ட குறுக்கு வழிகள் இவை.

தற்பொழுது ஜனாதிபதியின் அடுத்த நடவடிக்கை சபாநாயகரை மாற்றுவது தான்.

நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணய சபையாக்கி அதன் மூலம் அரசமைப்பை மாற்றுவதற்கு சபாநாயகர் ஜனாதிபதியின் ஆளாக இருப்பது அவசியம்.

தனக்கு இசைவான ஒருவரை தேர்தல் ஆணையாளர் பதவிக்குக் கொண்டு வந்து தனது பதவிக்காலத்தை 2006 டிசம்பர் வரை நீடிப்பதற்கும் ஜனாதிபதிக்கு சபாநாயகரின் உதவி தேவை.

தனக்கு ஆதரவான தேர்தல் ஆணையாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமானால் தேர்தல் ஆணைக்குழு படிமானம் உள்ளதாக இருக்க வேண்டும். அதற்கு தேர்தல் ஆணைக்குழுவை அமைக்கும் அரசியல் கவுன்ஸில் ஜனாதிபதியின் சொல்லுக்கு இணங்கியதாக இருக்க வேண்டும்.

அரசியல்கவுன்ஸிலைவழிக்குக்கொண்டு வர வேண்டுமானால் அதன் தலைவராகச் செயற்படும் சபாநாயகர் ஜனாதிபதியின் ஆளாக இருக்க வேண்டும். இவற்றை எல்லாம் அரங்கேற்றத்தான் சபாநாயகர் ஜே.எம். லொக்கு பண்டாரவை அகற்றும் முயற்சிகள் தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்றன.

அணி மாறியும், கட்சி தாவியும் அரசுக்குப் பெரும்பான்மை பலத்தை உறுதி செய்திருக்கும் எம்.பிக்களின் கையிலேயே தற்பொழுது சபாநாயகரின் எதிர்காலம் தங்கி இருக்கிறது. இவர்களை அச்சுறுத்தி வழிக்குக் கொண்டு வரும் தந்திரத்தை ஜனாதிபதி கையாளக் கூடும்.

-சஞ்சாரன்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புஷ் வெற்றி!

மீண்டும் ஒருதடவை புஷ்ஷை வரவேற்க வெள்ளை மாளிகை தயாராகிக் கொண்டிருக்கிறது.

பதவி விலகிச்செல்லும் அமெரிக்க அதிபர் ஒருவர் வெள்ளை மாளிகைக்குப் புதிதாக வரும் அதிபருக்கு மாலைவேளை தேநீர் விருந்துபசாரம் வழங்குவது சம்பிரதாயம். அப்படியே பேசியபடி வெள்ளை மாளிகையைச் சுற்றிக்காட்டி அதன் சிறப்புக்கள் பற்றியும் புதியவருக்கு பழையவர் விளக்குவார். இது மரபு. இந்தத் தடவை அவற்றுக்கெல்லாம் அவசியம் இருக்காது. புதிதாக ஒருவர் வெள்ளை மாளிகைக்கு வரப்போவதில்லை என்பது உறுதியாகிவிட்டது. இன்னும் 4 வருடங்களுக்கு புஷ்ஷின் அசைக்க முடியாத ஆட்சிதான்.

உலகம் முழுவதும் எதிர்பார்க்கப்பட்ட அமெரிக்கத் தேர்தலின் நீண்ட ஓட்டம் புஷ்ஷின் வெற்றியுடன் முடிவுக்கு வந்துள்ளது. 2000 தேர்தல் போன்று சர்ச்சைகளையும், பரபரப்புக்களையும் முதுகில் சுமந்தபடியே இந்தத் தேர்தல் முடிவுகளும் வந்துள்ளன.

காரசாரமான விவாதங்கள், பிரசாரங்களுக்குப் பின்னர் உலகெங்கும் பயங்கரவாதத்துக்கு எதிராக புஷ் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு — அவை அடாவடித்தனமானவையாக இருந்தபோதும்— அமெரிக்க மக்கள் அங்கீகாரம் வழங்கிவிட்டனர்.

கெரியை விட அதிகமாக 35 லட்சம் மக்கள் புஷ்ஷுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். தீவிரவாதத்துக்கு எதிரான போரில் புஷ் கதாநாயகன்தான் என்று அவர்கள் தீர்ப்புக் கூறிவிட்டனர். ஆப்கானிஸ்தான் மீதான போரும் ஈராக் ஆக்கிரமிப்பும் நியாயமானவையாக அமெரிக்க மக்களுக்குத் தெரிந்திருக்கின்றன. விளைவு புஷ்ஷின் வெற்றி.

தீவிரவாதத்தில் இருந்து தங்களைக் காக்க புஷ்ஷைப் போன்ற ஒரு போர் வீரன் தேவை என்று அமெரிக்க மக்கள் தீர்மானித்ததால் இன்னும் 4 வருடங்களுக்கு அவர்கள் புஷ்ஷை பதவியில் அமர்த்தியுள்ளனர்.

இந்த வெற்றி புஷ்ஷுக்குப் புதுத் தெம்பு தரும். அவருக்கு எதிரான கண்டனங்கள் கொஞ்சம் அடங்கிப் போகும். தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்ற போர்வையில் அமெரிக்க ஆதிக்கம் இன்னும் சில ஆண்டுகளுக்குக் கொடி கட்டிப் பறக்கும். அதற்கான ஆணையை, ஈராக்மீது போர் தொடுத்தது தவறு என்று வாய் கிழியக் கத்திய கெரியை ஓரங்கட்டியதன் மூலம் அமெரிக்க மக்கள் புஷ்ஷுக்கு வழங்கி விட்டார்கள்.

புஷ்ஷின் வெற்றி, அதனால் உலக ஒழுங்கில் ஏற்படப் போகும் மாற்றங்கள் என்பன பற்றிப் பார்ப்பதற்கு முன்னர் அமெரிக்க அதிபர் தேர்தல் முறை பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வது அவசியம்.

இலங்கை, ரஷ்யா போன்ற நாடுகளில் நடக்கும் அதிபர் தேர்தல் போன்றதல்ல அமெரிக்க அதிபர் தேர்தல். பிரசார முறைகளும் வாக்களிக்கும் முறைகளும் தேர்தலில் ஊடகங்களின் பங்கும் கூட நம் நாட்டைவிட அமெரிக்காவில் மிக



வும் வித்தியாசமானவை.

அதிபர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் மக்கள் பிரதிநிதி குழு மூலம் தெரிவு செய்யப்படுவார். அவர்தான் தேர்தலில் போட்டியிட முடியும். அவரைத்தான் பின்னர் கட்சி அதிபர் வேட்பாளராக அறிவிக்கும்.

தேர்தலுக்கான மக்கள் வாக்களிப்பின்போது (கடந்த 2ஆம் திகதி நடந்தது) மக்கள் தமது அதிபரை நேரடியாகத் தேர்ந்தெடுப்பது கிடையாது. இலங்கையில் ஜனாதிபதி மக்களால் நேரடியாகவே தேர்ந்தெடுக்கப்படுகிறார். தேர்தலில் தேர்தல் சபைக்கான (எலக்டோரல் கொலிஜ் — Electoral College) உறுப்பினர்களைத்தான் நேரடியாகத் தெரிவு செய்கிறார்கள். அப்படித் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள்தான் பின்னர் அதிபரைத் தெரிவு செய்கிறார்கள்.

அமெரிக்காவில் 51 மாகாணங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாகாணத்துக்கும் அதன் மக்கள் தொகைக்கு ஏற்ப தேர்தல் சபை உறுப்பினர்கள் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது 3 முதல் 55 வரை மாகாணத்துக்கு மாகாணம் வேறுபடும். தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் தவிர நியமனம் செய்யப்படும் உறுப்பினர்களும் உள்ளனர். தேர்தல் சபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 538 ஆகும்.

இத்தகைய தேர்தல் முறை சற்று வித்தியாசமானது. சில நேரங்களில் சிறிய மாகாணங்கள் கூட அதிபர் தேர்தலில் பெரிய மாற்றங்களைக் கொண்டு வரக்கூடியவை. 2000 இல் புளோரிடா மாநிலம் அதிபரைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகித்தது. இந்தத் தடவை ஒஹியோ மாகாணம் தீர்மானிக்கும் சக்தியாகி இருக்கின்றது.

அதிபர் தேர்தல் முறையை நிர்ணயிக்கும் சட்டம் இயற்றப்பட்டபோது, அமெரிக்க நாடாளுமன்றமான காங்கிரஸ் உறுப்பினர்கள் வாக்களித்து அதிபரைத் தேர்ந்தெடுக்க வேண்டாம் என்று பல தலைவர்கள் கருதினார்கள். மக்கள் தமது அதிபரை நேரடியாகத் தேர்ந்தெடுக்கட்டும் என்று சில தலைவர்கள் தெரிவித்தனர். ஆனால், அதிபரை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுப்பது மட்டுமே பிரச்சினைகளுக்கு முழுத் தீர்வாக அமையாது என்று பல தலைவர்கள் கருதினார்கள்.

இதனால் இரண்டுக்கும் இடைப்பட்ட ஓர் அமைப்பை ஏற்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதுதான் இந்தத் தேர்தல் சபை முறைமை. தேர்தல் சபை பதவிக்காலம் கொண்ட அமைப்புக் கிடையாது. மக்கள் வாக்களித்துத் தேர்வு செய்யும் இந்தச் சபை தாம் வாக்களித்து அதிபரைத் தேர்வு செய்துவிட்டுக் கலைந்துவிடும்.

அமெரிக்க அரசமைப்பின்படி இந்த அமைப்பு மக்கள் கருத்தைப் பிரதிபலிப்பதாகவே கருதப்படுகின்றது. சிறிய மாகாணங்களுக்கும் இதனால் பெரிய மதிப்பும், கௌரவமும் ஏற்பட்டுள்ளது.

தேர்தல் சபைக்குத் தெரிவாகும் உறுப்பினர்கள் தமக்குப் பிடித்த அதிபர் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும். சில மாகாணங்களில் அப்படிச் செய்ய முடியாது. அவர் எந்த வேட்பாளருக்காகத் தெரிவு செய்யப்பட்டாரோ அவருக்கு மட்டுமே வாக்களிக்க முடியும். போட்டி கடுமையாக இருக்கும் போது யாராவது மாறி வாக்களித்தால் பின்னர் அந்த விவகாரம் நீதிமன்றம் வரைக்கும் சென்றுவிடும்.

ஒரு மாகாணத்தில் தெரிவு செய்யப்படும் தேர்தல் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை எந்தக் கட்சிக்கு அதிகமாக இருக்கிறதோ அந்தக் கட்சி அந்த மாகாணம் முழுமைக்குமான தேர்தல் சபை பிரதிநிதிகளின் எண்ணிக்கையை வென்று விடுகின்றது.

அதாவது ஒரு மாகாணத்தில் தேர்தல் சபை உறுப்பினர்கள் எண்ணிக்கை 10 என்று வைத்துக்கொள்வோம். அதில் 6 இடங்களை ஒரு கட்சி வென்றுவிட்டால் , அந்த மாகாணம் முழுவதும் வென்றதாக அறிவிக்கப்படும். ஆனால், ஏனைய 4 இடங்களையும் வென்ற கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அதிபர் தேர்தலில் இவருக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்று மாகாணத்துக்கு மாகாணம் வேறுபட்ட சட்ட வழிமுறைகள் இருக்கின்றன. அதன்படி அவர்கள் செயற்படுவர். சில மாகாணங்களில் எந்தக் கட்சி வேட்பாளர் வென்றாரோ அவருக்கு அந்த மாகாணத்தின் தேர்தல் சபை உறுப்பினர்கள் அனைவரும் வாக்களிக்கவேண்டும் என்பது கட்டாய நியதி.

ஒவ்வொரு தேர்தலின் பின்னரும் டிசெம்பர் மாதம் இரண்டாவது புதன் கிழமைக்கு 2 நாள்கள் முன்னதாக திங்கட்கிழமை (இந்த ஆண்டு டிசெம்பர் 13ஆம் திகதி) தேர்தல் சபை உறுப்பினர்கள் அதிபரைத் தேர்ந்தெடுக்க வாக்களிப்பார்கள். ஒவ்வொரு மாகாணத் தலைநகரிலும் கூடி அவர்கள் அதிபரைத் தேர்ந்தெடுப்பார்கள். ஜனவரி மாதம் 6ஆம் திகதி முடிவுகள் உத்தியோகபூர்வமாக முடிவுகள் அறிவிக்கப்படும். ஜனவரி 20 ஆம் திகதிக்குள் புதிய அதிபர் பதவியேற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தத் தேர்தல் சபை முறையினால் பெரும்பாலான மக்கள் வாக்களித்த கட்சி வேட்பாளர் தோற்றுப் போய்விடும் நிலை கூட இருக்கிறது. 2000 தேர்தலில் இப்படி நடந்தது.

கடந்த தேர்தலில் புஷ் பெற்ற வாக்குகள்
(25 ஆம் பக்கம் பார்க்க..)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5** "26 பேருக்கும் தூக்கு கொடுத்துட்டாங்க!" சொல்லும் போதே கண்கலங்கியது, குரல் கம்மியது....

மேலும் சொல்லிக் கொண்டே போனார் அந்த நிருபர்.

"பெரிய அதிகாரி சொல்றாரு, சத்தியம் ஜெயிக்கும்னு நிரூபிச்சாச்சாம். தேசியத் தலைவர் கொலைக்குப் பழி வாங்கியாச்சாம்...!"

எதுவும் மனதில் விழவில்லை. மெதுவாகக் கையை விடுவித்துக் கொண்டு வெளியே வந்தார். மோசமா இருக்கும் என்று எதிர்பார்த்ததுதான். ஆனா இத்தனை மோசமாவா.....?

உள்ளுக்குள் கோபமும், வேகமும் பொங்கியது.

வெளியே வந்தவுடன் முதலில் எதிர்ப்பட்டது அற்புதமும், இராஜாவும்தான்.

"எப்பா... என்னப்பா? நம்ம அறிவுக்கு என்னாச்சுப்பா!"

இறைஞ்சினார் அந்தத் தாய்.

## மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

"அம்மா தீர்ப்புப் பத்தி என்னம்மா சொல்றீங்க....?"

எங்கிருந்துதான் ஆவேசம் வந்ததோ.... சடாரெனப் பத்திரிகையாளர்கள் பக்கம் திரும்பினார்.

அவரது வேகம் பத்திரிகையாளர்களையே ஒரு நொடி திகைப்புக்குள்ளாக்கியது.

"அநியாயம்! ரொம்ப அநியாயம்! என் பிள்ளை எந்தத் தப்பும் செய்யல. இதுல சிக்கி இருக்கிறவங்க எல்லாமே அப்பாவிங்க. சி.பி.ஐ. சதி பண்ணிருச்சு. பெரிய அதிகாரி தான் இதற்குக் காரணம். பழி வாங்கும் நடவடிக்கை இது. அரசியல் சூழ்ச்சி."

அன்பு அம்மா கையைப் பிடித்தார். "போதும்மா! வாங்க போகலாம்!" வானில் ஏறினார். வான் நகர ஆரம்பித்தது.

"பெரிய அதிகாரி ஒழிக!"

"சி.பி.ஐ. ஒழிக!"

வெளியே கோஷங்கள் கேட்டன.

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும் நிறைத்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

"அம்மா உட்காருங்கம்மா முதல்ல...! நானும் உங்களை மாதிரித்தான்மா நினைச்சேன்... ஆனா.. சி.பி.ஐ. காறங்க நிறைய சதி பண்ணிட்டாங்களேம்மா. அறிவோட வாக்குமூலமே அவனுக்கு எதிரா இருக்கிறமாதிரி வலுவா அமைச்சிட்டாங்களே..."

அவர் தொடர்ந்து பல விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டே போனார்.

"வாக்குமூலம்" - இந்த வார்த்தையைக் கேட்டபிறகு அவர் பேசிய எதுவும் அற்புதத்தின் காதுகளில் விழவில்லை.

என்ன அநியாயம்! அடிச்சு உதைச்சு சித்திரவதை செஞ்சு, அவமானப்படுத்தி நீட்டின இடத்துல எல்லாம் கையெழுத்து வாங்கின சி.பி.ஐ.காறங்க, இப்ப அந்தக் கையெழுத்தையே அவனுக்கு எதிரியாக்கிட்டானுங்களே.

அதோட தடா சட்டம்னா என்ன எப்படின்னு வழக்கறிஞர் உட்பட யாருக்குமே சரியா புரியாத போது... பாவம் வழக்கறிஞரும் தான் சி.பி.ஐ. கிட்ட ஏமாந்து நிக்கிறாரு...

ஆனாலும், என்ன செய்ய நமக்குத் தான் வேறயாரு இருக்கிறார்கள். கிட்ட நெருங்கவே எல்லோரும் பயந்த நேரத்துல தைரியமா முன் வந்து வழக்கை எடுத்தவராச்சே.... இந்த எட்டு வருடமா எத்தனையோ பிரச்சினைக்கு இடையிலேயும் வழக்க நடத்தினவராச்சே. அந்த நன்றியை மறக்கவா முடியும். பலவாறாகச் சிந்தனை ஓடியது.

# தொடரும் தவிப்பு

"ஏதோ காபிடல்ன்னு சொல்லுறாங்களேப்பா.... அப்படின்னா என்னப்பா...?"

சட்டெனச் சுதாகரித்தார்.

"ஒண்ணுமில்லம்மா! நீங்க முதல்ல கிளம்புங்க... அன்பு அம்மாவைக் கூட்டிட்டுப் போ...."

அன்புக்கு கண்களில் நீர் திரண்டிருந்தது.

"அண்ணே...."

"நீ போன்னு சொல்றேன்ல! போ.... அம்மாவைக் கூட்டிட்டுப் போ." கத்தினார். குரல் பிசிறடித்தது.

கலங்கிய விழிகளுடன் வெறித்து நோக்கிய அன்பு கதறலாகப் புலம்பிக் கொண்டிருந்த தாயை இழுத்துக் கொண்டு சென்றாள்.

அவர்கள் நகர்ந்ததும் ராஜாவின் கையைப் பிடித்து மெதுவாக விசயத்தை சொன்னார்.

"ராஜா ஒண்ணும் கவலைப்படாதீங்க. இதை அப்படியே விட்டுறமாட்டோம். அடுத்து என்ன பண்றதுன்னு பார்ப்போம். நீங்க கிளம்புங்க. அம்மாவுக்குத் தைரியம் சொல்லுங்க... நாங்கல்லாம் இருக்கோம்.... கிளம்புங்க...."

ராஜா தளர்நடையுடன் கையை விடுவித்துக் கொண்டு நடந்தார்.

அற்புதமும் அன்பும் அவர்கள் வந்தவான் அருகில் நின்றிருந்தனர். அவர்களைச் சுற்றிப் பத்திரிகையாளர்களும் டி.வி. காரர்களும். உறவினர்களுள் ஒருவர் அவர்களை விலக்கி கொண்டிருந்தார்.

ராஜாவுக்கு அம்மாவிடம் எப்படிச் சொல்வதெனத் தெரியவில்லை. அவர் முகத்தை நிமிர்ந்து பார்க்கவும் துணிவில்லை.

அதற்குள் அற்புதத்திற்கு விடயம் ஓரளவு புரிந்துவிட்டது என்றே சொல்லலாம். ராஜவின் முகம் அவரது கணிப்பை உறுதிப்படுத்தியது. இருப்பினும் ராஜாவை உலுக்கினார்.

"சொல்லுப்பா.... என் அறிவுக்கு என்னப்பா?.... சொல்லுப்பா" பெற்ற தாயின் கதறல் ராஜாவை உடைந்து போகச் செய்தது.

"அம்மா...! அறிவுக்குத் தூக்குக் கொடுத்துட்டாங் கம்மா....!!! 26 பேருக்கும் தூக்கு கொடுத்துட்டாங் கம்மா...!!!"

"அப்பா ராஜா...ஸ என் கண்ணு.... என் பிள்ளை"

வார்த்தைகள் வரவில்லை அற்புதத்திற்கு

விலகி நின்ற பத்திரிகையாளர்கள் மீண்டும் சூழ்ந்தனர்.



எங்கிருந்து தான் ஆவேசம் வந்ததோ.....!

கூட்டத்தை விலக்கிக் கொண்டு வேன் நகர முடியவில்லை. பெரிய அதிகாரி "இசட்" பிரிவு பாதுகாப்பு வளையத்தோடு செல்வது தெரிந்தது.

அடுத்து வழக்கறிஞர்கள் வர ஆரம்பித்தனர்.

அதோ நம்ம வழக்கறிஞர். பாதுகாப்பு அதிகாரி அவர் அருகில் சென்று ஏதோ கேட்பதும் பின் கையசைத்தவுடன் அவரைச் சுற்றிலும் பொலிஸார் பாதுகாப்பு வளையம் அமைப்பதும் தெரிந்தது. தோழர்கள் வழக்கறிஞர் அருகில் சென்று ஏதோ பேச முயல அவர் தலையசைத்தவாறே சென்று விட்டார்.

" அம்மா நீங்க வழக்கறிஞர் வீட்டுக்குப் போங்க. அவர்கிட்ட சொல்லிட்டேன். நானும் அங்க வந்திடறேன்!" - என்றவாறே வானுக்கு வழி ஏற்படுத்தி அனுப்பி வைத்தனர். வான் நகர்ந்தது.

நீண்ட தூரம் வரை அவர்களின் முழக்கங்கள் மட்டும் கேட்டுக் கொண்டேயிருந்தன.

★★★

வழக்கறிஞர் வீடு வரை ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. அற்புதத்திற்கு மூளையே செயலிழந்தது போலிருந்தது. செய்தியைக் கேள்விப்பட்டவுடன் இருந்த பதற்றம் தணிந்திருந்தது. என் பிள்ளையைக் காப்பத்தணும். என் பிள்ளையை எப்படியாவது காப்பாத்தணும். நான் பெத்து வளர்த்து அருமையா ஆளாக்கினது, இப்படி தூக்கிக் கொடுக்கிறதுக்கு இல்ல..! காப்பாத்துவேன்! எப்படியாவது... எப்படியாவது....! - இது மட்டுமே அவர் மனதில் மீண்டும் மீண்டும் ஓடியது.

"அம்மா! வழக்கறிஞர் வீடு வந்தாச்சு."

மெதுவாக இறங்கி உள்ளே சென்றனர். வழக்கறிஞர் இறுகிய முகத்துடன் வரவேற்றார்.

அவரைப் பார்த்தவுடன் சுயநினைவுக்கு வந்த அற்புதம் "ஐயா! அறிவு கண்டிப்பா வெளிய வந்திருவான்னு சொன்னீங்களே! இப்படி ஆயிருச்சே! உங்களைத் தானய்யா நம்பி இருந்தேன். கடைசி வரைக்கும் வந்திடுவான் வந்திடுவான்னு சொல்லிட்டே இருந்தீங்களே..." கதறலாய் வந்தது குரல்.

அதற்குள் 26 பேரில் ஒருவரான இரும்பொறையின் அண்ணன்கள், மற்றொருவரான தனசேகரின் குடும்பம், விடுதலை இராசேந்திரன் அனைவரும் உள்ளே நுழைந்தனர்.

அவர்களிடமும் மீண்டும் சி.பி.ஐ. மீதான தனது குற்றச்சாட்டுக்களை அடுக்கினார் வழக்கறிஞர்.

இறுதியாக... "இதோடு எல்லாம் முடிஞ்சிரலை. நாம் உச்ச நீதிமன்றத்துக்குப் போகலாம்... அங்க இவங்க சதியெல்லாம் எடுபடாது. கண்டிப்பா ஜெயிப்போம்" என்றார்.

"உச்ச நீதிமன்றத்துக்குப் போறதுன்னா எக்கச்சக்கமா பணம் செலவாகுமே. அவ்வளவு பணத்துக்கு நான் எங்க போவேன்..... எப்படி வழக்க நடத்துவேன்...." அரற்றினார் அற்புதம்.

"ஏன்மா நாங்கல்லாம் இல்லையா... நீங்க என்ன ஒத்த ஆளா. இது உங்களுக்கு மட்டுமான பிரச்சினை இல்லம்மா. நம்ம தமிழ் இனத்துக்கே விடப்பட்ட அறைகூவல். எத்தனை தைரியமா 26 பேருக்கும் தூக்குத் தண்டனை கொடுத்து இருக்காங்க. சும்மா விடமாட்டோம்மா. நாங்க ஊர் ஊரா போறம்.... நிதி திரட்டுறோம். அதை வச்சு வழக்க நடத்தலாம். நீங்க கவலைப்படாம போங்கம்மா..... நாங்க இருக்கோம்...." என்றார் விடுதலை இராசேந்திரன். அந்த வார்த்தைகள் அந்தக் குடும்பங்களுக்குப் பெரும் ஆறுதலைத் தந்தன.

நிதி திரட்டி வழக்கை நடத்த முடியும் என்பதில் முழு நம்பிக்கை வரவில்லையெனினும், முதன் முதலாக வந்த அந்த ஆறுதல் வார்த்தைகள் அற்புதத்திற்கு பெரும் தெம்பளித்தன.

(தவிப்புத் தொடரும்....)

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

# காதல் கொண்டேன்

"இங்க பாருங்க மிஸ்டர் பாபு, நானும், நீங்களும் ஒண்ணா ஒரே வங்கியில வேலை செய்யிறதாலதான் நான் உங்களோட கொஞ்சம் உரிமையோட பழகினேன். ஆனா, நீங்க இதை காதல்னு நினைச்சு எனக்குக் கடிதம் எழுதிட்டீங்க. இந்தக் காதல், கத்தரிக்காயெல்லாத்திலயும் எனக்கு நம்பிக்கையில்லை. அதுவுமில்லாம என்னைக் காதலிக்க உங்களுக்கு என்னதான் தகுதி இருக்கு? நான் முகத்துக்குப் போடுற பவுடரிலிருந்து தினமும் உடுத்துற உடுப்பு வரைக்கும் எனக்குக் கிடைக்கிற சம்பளமே போதாது. பொழுது போகணும்னுதான் நான் இங்க வேலைக்கே வர்றேன். சுதந்திரப் பறவையா எந்தவித கவலையுமில்லாமல் சந்தோஷமா பறந்து திரியிற எனக்கு இந்தக் காதல் கல்யாணமெல்லாம் அநாவசியம். முதல்ல உங்க முகத்தை நல்லா கண்ணாடியில பாருங்க. என்னோட நிழலைத் தொடக்கூட உங்களுக்கு அருகதையில்ல. இனிமே இந்த மாதிரியெல்லாம் கடிதம் எழுதாதீங்க. இந்த நோக்கத்தோட பழகுறதையும் விட்டுடுங்க...."

கீதா படபடவென பேசி முடிக்க, பாபு முகத்தில் துளிர்த்த வியர்வையை துடைத்தவாறு தலை குனிந்த வண்ணம் அந்த இடத்தை விட்டு நடந்தான். அவனுக்கு அவமானமாக இருந்தது. கீதா இவ்வளவு கடுமையாக நடந்துகொள்வாள் என்று அவன் நினைக்கவில்லை. இதுவரை அவன் யாரையும் ஏறெடுத்தும் பார்த்ததில்லை. முதல் காதல் அவன் வாழ்வில் முற்றும் கோணலாக கானலாகிவிட்டது. ஆனாலும், அவள் அவனை இந்தளவு கேவலப்படுத்தியிருக்கக் கூடாது. நெருப்புத் துண்டங்களை தூக்கி நடு நெஞ்சிலல்லவா வீசிவிட்டாள்.

ஒரு மாதம் சென்றிருக்கும். கீதாவுக்கு வேறு ஒரு இடத்தில் திருமணம் நிச்சயமாகியிருந்தது. கீதாவின் தோழி சுமித்திரா அவளைப் பார்க்க வந்திருந்தாள். சுமித்ரா அவளுடன் ஒரே வங்கியில் தான் பணி புரிந்து வந்தாள். அண்மையில்தான் வேறொரு வங்கியில் மாற்றலாகிச் சென்றிருந்தாள். கீதா அவளை மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்.

"வாடி சுமித்ரா... என்ன திடீர் விஜயம்...?"

"ம்... அக்காவுக்கு கலியாணம் நிச்சயமாயிடுச்சில்லையா? அதுதான் ஒரு வாரம் லீவு. உடனடியா உ... துட்டேன். அது போகட்டும். உனக்கும் திருமணம் ஏற்பாடாயிடுச்சு போல. நேற்று பாபுவைச் சந்தித்தேன். ரொம்ப மனசு உடைஞ்சு போயிருந்தாரு. நீ அவரை ரொம்பவும் அவமானப்படுத்திட்டியாமே. பாபு மாதிரி ஒரு நல்லவர் கணவனா கிடைக்க நாமெல்லாம் புண்ணியம் செஞ்சிருக்கணும்.

**-பாலா சங்குப்பிள்ளை-**

எனக்கு மட்டும் அந்தப் பாக்கியம் கிடைச்சா நிச்சயம் சந்தோஷப்படுவன். ஆனா நீ அவரை தூக்கி எறிஞ்சது மட்டுமல்ல கடுமையான வார்த்தைகளால வாட்டியெடுத்திட்டியே..."

கீதா சலனமற்ற முகத்துடன் அவளைப் பார்த்தாள். "சுமித்திரா நான் வேணும்னே தான் அப்படிச் செஞ்சேன்...."

"ஏய் என்ன சொல்லுறே.. உனக்கென்ன பைத்தியமா...?"

"ஆமா.. பைத்தியம்தான். யாருக்கும் தெரியாத ... மையைச் சொல்லுறன்




கேளு. பாபு நல்லவரு. நேர்மையானவர். சுத்தமானவரு. ராமன் போல குணத்துல

(25 ஆம் பக்கம் பார்க்க..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணில் ஏற்படும் நோய்களும் அதனால் வரும் பாதிப்புக்களும்

**கேள்வி:— வயது 75, ஆண். 10 வருடங்களுக்கு முன்னர் கண்ணில் CATARACT லென்ஸ் வைக்காமல் ஆபரேஷன் செய்து பார்வை கிடைத்தது. இரண்டு வருடத்துக்கு முன்னர் மற்றக் கண்ணில் வந்து முற்றாகப் பார்வை இப்போதில்லை. இப்பொழுது இந்தப் பார்வையற்ற கண்ணை ஆபிரேஷன் செய்து பார்வை பெறலாமா?**

பதில்:— வயதான காலத்தில் எமக்கு எமது அலுவல்களை நாமே பார்த்துக்கொள்ள, பார்வையும் நடந்து திரியும் சக்தியும் இருக்க வேண்டும். மற்றவர்களின் உதவியை எமது நாளாந்த வாழ்க்கை நடைமுறைகளுக்கும், அலுவல்களுக்கும் கோரக்கூடாது என்ற கொள்கையில் நம்பிக்கையுள்ளவன் நான். அதனால் கண் பார்வையை நன்றாக வைத்துக்கொள்ள எத்தனை வயதானாலும் CATARACT சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்றும், வயதான காலத்தில் கீழே விழுந்து இடுப்பு எலும்பு உடைந்தாலும் உலோக சட்டம் வைத்தோ புதிய உலோக HIP JOINT இணைத்தோ— நடமாடித்திரியும் சக்தியைப் பெற வேண்டும் என்றும் வயதானவர்களுக்கு அறிவுரை வழங்குவேன். பார்வையும், நடமாடும் சக்தியும் இருக்குமானால் தொந்தரவு கொடுக்காமல் எம் வாழ்க்கையை நாமே பார்த்துக்கொண்டு சந்தோஷமாக வாழலாம். இதற்கு இன்றைய மருத்துவம் எத்தனையோ முன்னேற்றங்கள் கண்டுள்ளது.

எனவே, மற்றக் கண்ணையும் ஒரு கண் மருத்துவரிடம் காட்டி ஆபரேஷன் செய்ய முடியுமானால் செய்து கொள்ளுங்கள். நீரிழிவு, இரத்த அழுத்தம் எதுவும் இல்லையென்றால் பயமின்றி சத்திரசிகிச்சைக்கு உட்படலாம். அப்படி இருந்தாலும் அவற்றைக் கட்டுப்படுத்தி சிகிச்சை பெற்று ஆபிரேசன் பண்ணிக் கொள்ளலாம். வயதோ, நோயோ CATARACT சிகிச்சைக்கு ஒரு தடையல்ல. ஆனால், பலகாலம் Cataractரோடு வாழும்பொழுது— கண்ணுள் அழுத்தம் அதிகரித்து— பார்வை நரம்புகளையும் பார்க்கும் சக்தியையும் இழக்க வேண்டி வரும். அப்படி ஆன பின்னர் CATARACT சிகிச்சை எதிர்பார்த்த பலனைத் தராது. எனவே, உடனடியாகக் கண் வைத்திய நிபுணரைச் சந்தித்து ஆலோசனை பெறவும்.

**கேள்வி: வயது 48, ஆசிரியத்தொழில் பார்க்கிறேன். ஒரு தடவை பாடம் எடுத்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று கண் இருட்டி ஒன்றுமே தெரியவில்லை. இந்த நிலை ஒரு சில செக்கன்களே நீடித்திருக்கும்**



**அதன் பின்னர் எதுவித மாற்றமும் இல்லை. இதேபோல் ஓரிருமாதங்களின் பின்னர் கடந்த வாரமும் இதே போல் ஏற்பட்டு ஒரு சில செக்கன்கள் நீடித்தது. எமது ஊரில் இருந்த வைத்தியரிடம் சென்றேன். அவர் சோதித்துவிட்டு ''இரத்த அழுத்தம் எதுவுமில்லை. இது பித்தக்கொதிப்பு, எலுமிச்சம் பழம் கரைத்து குடியும்'' என்றார். உங்கள் அறிவுரை என்ன?**

பதில்: உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இந்நிலை எதனால் ஏற்பட்டது நன்றாகத் தெரிந்து கொள்ளும் வரை —பித்தக் கொதிப்பு— என்று எதுவும் செய்யாமல் இருக்காதீர்கள். நீங்கள் கூறிய குணம் குறிகள் எனக்கு TIA அல்லது TRANSIENT ISHAEMIC ATTACK எனப்படும் மூளைக்கு செல்லும் இரத்த நாடியில் ஏற்படும் அடைப்பினால் உண்டாகும் குறியாகும். இப்படியான கண்இருட்டல், தலைச்சுற்று, கை அல்லது கால்களில் திடீர் பெலவீனம் என்பவை TIAயின்



மற்றைய குறிகளாகும். இவை சிலவேளை 30 செக்கனிலிருந்து 24 மணி நேரம் வரை ஏற்படலாம். உங்களுக்கு ஒருசில செக்கன்கள் ஏற்பட்டுள்ளது. உடலில் கொலஸ்ரோல், கழுத்தில் உள்ள சிரசுக்கு போகும் நாடிகளில் ஏற்படும் குறுக்கம், SPASM எனப்படும் திடீர் சுருக்கம் என்பன இந்த TIAக்கு காரணமாகும். உடனடியாக ஒரு இதயநோய் நிபுணர் அல்லது விசேட வைத்தியரிடம் உங்களைக் காட்டி நன்றாக பரிசோதித்து வைத்தியம் செய்யவும். இல்லாவிடில் திடீரென்று ஒரு நாள் பாரிசவாத நோய்க்கு நீங்கள் ஆளாகுவீர்கள். உணவில் குறைந்த அளவு எண்ணைப் பொருட்கள், உடல் பயிற்ச்சி, என்பனவற்றைப் பின்பற்றுங்கள்.

**கேள்வி:— பெண். வயது 40. தொடர்ந்து 2 மாதமாக— எங்கும் அரிக்கிறது. சொறிந்தால் அந்த இடம் தடித்து விடுகிறது. அலர்ஜி என்று சொல்லி வைத்தியர் 'பிரிட்டோன்' 'செற்றிசெட்'(PIRITON) (CETRIZET) மாத்திரைகள் உபயோகிக்க தந்தார். உபயோகிக்கும்போது கொஞ்சம் சுகமாகின்றது. நிறுத்தியவுடன் திரும்பவும் ஏற்படுகிறது. இது என்ன நோய்?**

பதில்: நீங்கள் குறிப்பிட்டதுபோல் இது ஒவ்வாமை என்கின்ற காரணமாக ஏற்பட்டிருக்கலாம். அதேவேளை வேறு சில நோய்களின் வெளிப்பாடுகளினால் கூட இம்மாதிரி அரிப்பு ஏற்படுவதுண்டு. நீரிழிவு, ஈரலில் ஏற்படும் நோய்கள், பித்தப்பைவாசல் கற்களால் அடைபடுதல், நெஞ்சின் அறையில் ஏற்படும் புற்றுநோய்க்கட்டிகள் ஹொட்ஜ்கின் (HODGKIN) புற்றுநோய் என்பவை கூட தேகத்தில் அரிப்பை உண்டாக்கும். எனவே, விசேட வைத்தியர் ஒருவரின் ஆலோசனையை நாடவும்.

**கேள்வி:— வயது 42. ஆண். இருட்டுக்குள் இருந்து வெளிச்சத்திற்கு வெளியே வரும் போது கண்பார்வை மங்கித் தெரிகிறது. கூடவே கண்ணுக்குத் தாங்கிக்கொள்ளாத வலியும் ஏற்படுகிறது. எனக்கு என்ன வருத்தம்? பரிகாரம் கூறவும்?**

பதில்:— நீங்கள் உடனடியாக ஒரு கண் வைத்திய நிபுணரை சந்திக்கவும். உங்களுக்கு கண்ணுக்குள் அழுத்தம், அதிகமாகி — கிளக்கோமா (GLAUCOMA), என்ற நோய் உண்டாகியிருக்கலாம். இந்த நோய் ஆரம்பத்தில் தாங்கிக்கொள்ளாத கண்வலி, வெளிச்சத்தை பார்க்க கண் கூச்சம் என்று தொடங்கி — பின்னர் பார்வை மத்தியில் மட்டும் விளங்கும் சுற்று வட்ட (PERIPHERAL VISION) பார்வை தெரியாது — கண்ணுக்குள் அழுத்தம் அதிகமாக, அதிகமாக பார்வையையே இழக்க வேண்டி வரும். எனவே, உடனடியாக கண் விசேட பரிசோதனை அவசியம்.

**கேள்வி: வயது 25, பெண். யாராவது எனது கையை இறுக்கி பிடித்தால் அல்லது உறுப்புக்களில் எங்கேயாவது அடிபட்டால்—உடனே அவ்விடம் சிவந்து தோலின் கீழ் இரத்தம் கண்டுகிறது. இது நோயா?**

பதில்: தோலின் கீழ் இரத்தம் கண்டுவது பற்றி நிச்சயம் கவனம் எடுக்க வேண்டும். இரத்தத்தில் உள்ள PLATELETS என்ற சிறு குருதித்துணிக்கைகளின் எண்ணிக்கை குறையும் போது — இரத்தம் இரத்தகுழாய்களிலிருந்து வெளியேறி கண்டல் ஏற்படுவதுண்டு. இதற்கு பல காரணங்கள் உண்டு. உங்களுக்குச் சமீபத்தில் காய்ச்சல் வந்ததா? டெங்கு காய்ச்சல் மற்றும் வைரஸ் கிருமியினால் ஏற்படும் காய்ச்சல்களின் போது இந்த குருதி துணிக்கைகளின் எண்ணிக்கை குறையலாம். இது தவிர ஈரலில் ஏற்படும் நோய்கள் IDIOPATHIC THROM BOCYTO PAENIC PURPURA என்பன இரத்த கலங்கள் சம்பந்தமான நோய்களின் போது கூட இவ்வாறானநிலை ஏற்படலாம், எனவே, உடனடியாக ஒரு மருந்துவரை சந்தித்து இரத்தப் பரிசோதனை செய்யவும்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

## வாசகர் இதயம் பேசுகிறது

*ரீ.அஞ்சலோ — கல்முனை*

சுடர் ஒளிக்கு எனது வணக்கங்கள். தவறாமல் என் கரம் வந்து அருசலாகும் நீ தருகின்ற அம்சங்கள் அத்தனையும் சுகம்.

உன்பணி தொடரவும், அநேக வாசகர்களுக்கு பயனுள்ளதாய் அமையவும் என் வாழ்த்துக்கள்.

*பாபு — கொழும்பு.*

வாரந்தோறும் வலம் வரும் சுடர் ஒளியே; உன் வருகையை எதிர்பார்த்து ஆவலோடு காத்திருப்பவன் நான். உன் வருகை தான் என் வாசகத்திற்கு விருந்து; உன் வரவால் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். தொடர்ந்தும் தவறாமல் வரவேண்டும். உன் வரவை ஆவலோடு எதிர்பார்க்கின்றேன்.

*சத்தியா — ஏழாலை*

அன்பான சுடர் ஒளிக்கு என் வாழ்த்துக்கள். நீ தருகின்ற அம்சங்கள் அத்தனையும் நலம். கவிதை, பிததன், சிறுகதை, சிறுவர் என்பன பிரமாதம்.

உன் வரவுதான் என் சிறுநனைக்கு சிறகுகளாகின்றன. உன்வரவால் வாராந்தம் மகிழ்ச்சியாய் உள்ளேன். உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

*வி.கவிதா — வவுனியா*

வாரந்தோறும் வலம் வந்து என்னை வசீகரிக்கும் உன்பணி சிறப்பானது. உன் வரவு கண்டு நான மனமகிழ்ச்சி அடைகின்றேன். நீ தருகின்ற அம்சங்கள் அத்தனையும் தரமானவை. தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து பிரகாசிக்க என் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.


## உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எப்பேர்ப்பட்ட வியாதியானாலும் சரி,
உடனே என்னை வந்து சந்தியுங்கள்



**K. சிவசுப்பிரமணியம்**
**M.I.H.Ind-S.M.P.**

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ்க் கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத்தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

**RAJA BAJEEKARANA (Rasayana) LEGIUM**
**ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்**

(முஸ்லிம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)



சாலாமிசிரி, பாதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துத் தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி, புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப்பையும், தேகாந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச்சூடு தணியும், மூலச்சூட்டைப் போக்கும், இருமல், மார்பு, இடுப்பு வலி, கால், கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட்பிரஷர் உள்ளவர்களுக்கும் சிறுவர், சிறுமியருக்கும் சிறந்தது.

நாட்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.

**500 gram 300/-, 250 gram 150/-**
**வி.பி.பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.**

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் வைத்தியரைச் சந்திக்கலாம்.

**Ayur Dr. K. Sivasubramaniam,** முருகானந்தா வைத்தியசாலை
G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி)
கொழும்பு - 11. Tel: 2384645.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

## டேஸ்ட்கடை தணிகாசலம்

# அரசியல்வாதியின் ஆதரவுடன் வேலியே பயிரை மேய்கிறது

தணிகாசலம் அண்ணன் தனக்கு வந்த கடிதங்களை அவதானமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அதில் சூரியக் கண்ணன் என்பவர் எழுதியிருந்த கடிதம் நிலை குலையச் செய்து விட்டது.

அப்படி என்ன அந்தக் கடிதத்தில் எழுதப் பட்டிருந்தது என்பதை அறிய ஆவலாக இருக்கிறதா? கட்டாயமாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இதோ அக் கடிதம்

''அரசியல்வாதிகளினதும், தொழிற் சங்கவாதிகளினதும் ஆதரவுக்காக, அவர்கள் தூக்கி வீசும் எச்சில் எலும்புத்துண்டுகளுக்காக அந்த அரசியல்வாதிகளின் அடிவருடிகளாகவே மாறிவிடுகின்றனர் சில மலையக ஆசிரியர்கள்.

'தொழிற்சங்கத் தலைவர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்கிறோம்.தலைவர் இருக்க என்ன பயம்.அமைச்சர் இருக்கும் வரை என்னை யார் என்ன செய்ய முடியும்?'என்ற மமதையில் மலையகத்தில் சில ஆசிரியர்கள் மன்மதக் குஞ்சுகளாக மாறிவிட்டனர்.

இந்த தொழிற்சங்க அரசியல்வாதிகளின் பாதுகாப்புக் கவசத்துடன் தம்மிடம் படிக்கவரும் மாணவிகளுக்கே பள்ளி அறைப் பாடம் படிப்பித்துவிடுகின்றனர்.

இந்த மன்மத ராசாக்களுக்கு அதிபர்களும், சக ஆசிரியர்களும் சப்போட்டாக இருக்கின்றனர்.

சில அதிபர்கள் கொட்டகலைக்கு தமது பாடசாலை ஆசிரியைகளையே அனுப்பி தொழிற்சங்க அரசியல் தலைவர்களைக் குஷிப்படுத்துகின்றனர்.வெளிப்படையாகச் சொன்னால் கூட்டிக்கொடுத்து இலாபம் அடைகின்றனர். இடமாற்றங்களை ரத்துச் செய்து கொள்கின்றனர்.

இது கற்பனையும் அல்ல, வெறும் கதையும் அல்ல.இன்று உண்மையாகவே நடக்கின்றது.

இதற்கு ஒரு உதாரணம் அண்மையில் கினிகத்தேனையில் நடந்த உண்மைச் சம்பவம்.

கினிகத்தேனை நகரம் மலையகத்தின் நுழைவாயிலாக அமைந்துள்ளது.

இங்குள்ள ஒரு பாடசாலை முன்பு சிறப்பாக இயங்கி வந்தது.

இப் பாடசாலையில் கல்வி பயின்றவர்கள் இன்று அரச துறையில் பல்வேறு உயர் தொழில்களில் மிளிர்கின்றனர். இதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு உழைத்த அதிபர்களின் பணி இப்பாடசாலை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களும், பெற்றோர்களும் இப் பெரியார்களைப் பாராட்டினார்கள். பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

அன்பு, ஒழுக்கம், கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றில் இப் பாடசாலைக்கே முதலிடம்.

இன்றைய நிலை அப்படி அல்ல. 'அதிபர் ஒழிக, ஆசிரியரை இடம் மாற்று' என்று மாணவர்கள் போராட்டம் நடத்தும் அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அண்மையில் இங்கு நடைபெற்ற சம்பவம் ஒன்று சந்தி சிரிக்க வைத்துவிட்டது.

கடந்த காலங்களில் மாணவிகளின் கையைப்பிடித்து இழுத்துப் பதம்பார்த்த இளம் ஆசிரியர் ஒருவர் உயர் வகுப்பு மாணவி ஒருத்தியின் வாழ்க்கையுடனேயே விளையாடிவிட்டார்.

சில மாணவிகளின் கைகளைப்பிடித்துப் பார்த்த அந்த ஆசிரியருக்கு எதிராகப் பெற்றோர்கள், அதிபரிடம் முறையிட்ட போது, அரசியல்வாதியான அந்த அதிபர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதிபர், சம்பந்தப்பட்ட ஆசிரியரின் கைப் பொம்மை.

இது அந்த ஆசிரியரை ஒரு காதல் மன்னனாக்கிவிட்டது. மன்மதக் குஞ்சாக அவர் வலம் வந்தார்.

சில நாட்களின் முன் உயர் வகுப்பு மாணவி ஒருவரை அட்டனுக்கு விசேட வகுப்புக்கு அழைத்துச் செல்வதாக அழைத்துச் சென்று, போதை வஸ்து கலந்த குளிர் பானத்தைக் கொடுத்து அந்த மாணவி மயக்கமுற்ற நிலையில் தனது மிருக வெறிக்கு உள்ளாக்கி இச்சையைத் தீர்த்துக் கொண்டார்.



இந்த உடல்வெறி கொண்ட ஓநாய்க்கு ஒரு சக ஆசிரியையே உடந்தையாக இருந்ததோடு அந்த ஆசிரியையே வைத்தியரிடம் அழைத்துச் சென்று அம் மாணவி நெஞ்சு வலியால் மயக்கமுற்றார் என நாடகம் நடத்திவிட்டாராம்.வீட்டுக்கு வந்த மாணவி தனக்கு ஏற்பட்ட அவல நிலையை உணர்ந்தாள்.

தன்னறிவு அற்ற நிலையில் தான் கெடுக்கப்பட்டதை உணர்ந்தாள். மயிர் நீத்த கவரி மான் உயிர்வாழாது என்பது போல் தனது முடிவுக்குக் காரணம் யார் எனக் காட்டுகிறேன் என்ற ஆதங்கத்துடன் நஞ்சிடம் தஞ்சம் புகுந்தாள்.

விரிவாகக் கடிதம் ஒன்றை எழுதி தனது புத்தகப் பைக்குள் வைத்துக்கொண்டு, ஆட்டோவில் ஏறிப் பாடசாலைக்கே சென்றாள். தன்னைக் கெடுத்த காமுகனைப் பழிவாங்குகிறேன் எனப் பாடசாலை வளவில் கால் வைத்தாள்.

விதி யாரை விட்டது? பாடசாலைக்குள் செல்லும் முன் மயக்கமுற்றாள். அப்படியே தரையில் வீழ்ந்தாள்.

அதிபரோ கண்டும் காணாதது போல் இருந்தார். தரையில் விழுந்த மாணவியைக் கண்ட பழைய மாணவர் ஒருவர் மற்றும் சிலரின் உதவியுடன் வைத்திய சாலையில் சேர்த்தனர்.

ஆனால் இந்த அதிபர் என்ன செய்தார்? மாணவியின் புத்தகப் பையை பத்திரமாக எடுத்துக் கொண்டார். அங்கே தனது சகா மீது மாணவி எழுதிய புகார்க் கடிதத்தைக் கண்டார். அதை அப்படியே அழித்து விட்டார்.

உயிருக்குப் போராடும் மாணவியைக் காப்பாற்றவோ, உண்மை அறியவோ அவர் முயற்சிக்கவில்லை. ஓட்டமாக ஓடினார் தனது சகாவை அழைத்துக்கொண்டு.

அட்டன் வலையக் கல்விப் பணிமனை இருப்பவரும் ஒரு அரசியல் பின்னணியைக் கொண்டவர். சில மணி நேரங்களில் காதல் மன்னனுக்கு மஸ்கெலியா பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுக்கொடுத்து சகாவைக் காப்பாற்றிவிட்டார்.

மாணவியின் கடிதத்தை மறைத்துவிட்டோம், ஆசிரியரை இடம் மாற்றம் செய்துவிட்டோம் என்று இறுமாப்புடன் இருக்கின்றார் அதிபர்.

விதி யாரை விட்டது? வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட மாணவி டொக்டரிடமும், பொலிஸாரிடமும் வாக்கு மூலம் கொடுத்துவிட்டார். இதில் இருந்து எப்படி இவர்கள் தப்புவார்கள்?

பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டும், அவர்களை ஆளாக்க வேண்டும் என்ற கனவுகளுடனேயே பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புகின்றனர்.

ஆனால், பெற்றோர் போல் பாதுகாக்க வேண்டிய ஆசிரியர்கள் தமது காம இச்சைக்குப் பலியாக்குகின்றனர். தாயின் நிலையில் இருக்க வேண்டிய ஆசிரியைகள் அதற்குத் தூபம் பிடிக்கின்றனர்.

இப்பொழுது பெற்றோர்களும் நலன் விரும்பிகளும் கேட்கும் கேள்விகள் இவை தான்.

1. ஏற்கனவே குறிப்பிட்ட ஆசிரியர் மீது பல புகார்கள் சமர்ப்பிக்கப்பட்டபோதும் அதிபர் என்ன நடவடிக்கை எடுத்தார்?

2. பெற்றோர்கள் நேரடியாக வந்து புகார் செய்தும் அதை அசட்டை செய்தது ஏன்?

3.வயது வந்த மாணவிகளை வகுப்பு என்று கூறி ஒரு இளம் ஆசிரியர் அழைத்துச் செல்ல எப்படி அனுமதித்தார்?

4. இட மாற்றம் கோரி விண்ணப்பித்த ஆசிரியர்கள் வருடக்கணக்காக காத்திருக்கும்போது குறிப்பிட்ட ஆசிரியருக்குமட்டும் எப்படி இடமாற்றம் பெற்றுக்கொடுத்தார்?

5.புதிதாக அரசுக்கு முட்டுக்கொடுக்கும் ஒரு கட்சியின் அரசியல் பிரமுகரின் உதவியுடன் இடமாற்றம் பெறப்பட்டது எப்படி?

6. தவறு செய்யும் ஆசிரியர்களைத் தட்டிக்கேட்க வேண்டிய கல்வி அதிகாரிகள் இவ்விடயத்தில் ஒரு தலைப்பட்சமாக நடந்து கொண்டது ஏன்?

7. நீங்கள் அரசாங்க அதிகாரிகளா அல்லது அரசியல்வாதிகளின் அடிவருடிகளா?

இப்படியான அதிபர், ஆசிரியர்களினால் மலையகத்தில் எப்படி கல்வி அபிவிருத்தி அடையும்? மலையகம் எப்படி உருப்படும்?

மலையகக் கல்விமான்களே! அரசியல்வாதிகளே!இன்று ஒரு ஏழை மாணவிக்கு ஏற்பட்ட அவல நிலை நாளை உங்கள் பிள்ளைகளுக்கு ஏற்படாதா? நிச்சயமாக ஏற்படும். அதுவரை காத்திருக்காமல் உடனடியாக செயல்பட்டு மலை[illegible]தைக் காப்பாற்றுங்கள்.

சூரியக்கண்ணன்

# கூட்டு ஒப்பந்தத்தால் கிடைத்தது 198 ரூபா அல்ல 1 ரூபா 80சதம் மட்டுமே. இது தான் உண்மை.

சம்பள உயர்வுக்கான கூட்டு ஒப்பந்தம் என்ற பெயரில் தொழிலாளர்களுக்கு சுருக்குக் கயிறு மாட்டப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு சம்பள உயர்வு கேட்கமாட்டோம்.போராட்டம் நடத்த மாட்டோம்.நாடாளுமன்றத்திலோ, வெளிஇடங்களிலோ பேசக் கூடாது.சம்பள நிர்ணய சபையில் மூச்சுவிடக்கூடாது.வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கும் தோட்டத்தொழிலாளர்களுக்கும் தொடர்பே இல்லை.

தோட்டத்துரைமாரின் இந்தக் கட்டளைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் அடிமைச் சாசனத்தில் கையெழுத்தும் போட்டுவிட்டனர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் அதன் கூட்டாளிகளும்.

'இவ்வளவும் உண்மை இல்லை என்றால் மறுக்கட்டும்' என சவால் விடுகின்றார் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் .

தோட்டத் தொழிலாளர்களுக்கு 198 ரூபா சம்பள உயர்வு பெற்றுக் கொடுத்துவிட்டோம் எனத்தம்பட்டம் அடிக்கின்றனர். ஆனால், தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைத்திருப்பதோ ஆக ஒரு ரூபா எண்பது சதம் மட்டுமே.

முன்பு அடிப்படைச் சம்பளமாக இருந்த 21 ரூபாவையும், விலை உயர்வு அலவன்ஸாக வழங்கப்பட்ட 14 ரூபாவையும் சேர்த்து 35 ரூபா அடிப்படை சம்பளமாக உருமாற்றி உள்ளனர்.அவ்வளவுதான். முன்பு 14 ரூபாவுக்கு வழங்கப்படாத ஊழியர் சேமலாபநிதி இப்பொழுது வழங்கப்படும். அதுவும் ஒரு நாளைக்கு 1ரூபா 80 சத வீதம் இதைக் கூட 55 வயதில் ஒய்வு பெறும் போதுதான் பெற முடியும்.உடனடி நிவாரணம் எதுவும் இல்லை.வரவுக்கான போனஸ் 25 ரூபா எனக் கதை விடுகின்றனர்.

உதாரணமாக தோட்டங்களில் 25 நாட்கள் வேலை கொடுத்தால் கட்டாயமாக 18 நாட்கள் வேலை செய்தே ஆக வேண்டும்.

சுகவீனம் , இறந்த வீடு, பிறந்த வீடு, திருமணம் அல்லது தனிப்பட்ட தேவைகளுக்காக இதில் ஒருநாள் வேலைக்கு போகாவிட்டாலும் அதாவது 17 நாட்கள் வேலை செய்திருந்தாலும் அந்த 17 நாட்களுக்கான 17x25=425 ரூபாவை இழக்கின்றனர். அப்பணம் தோட்டத்துரைமாருக்கே போய்ச் சேருகின்றது. துரைமாருக்கு சாதகமாக இதை எழுதி உள்ளனர்.

தேயிலை விலை அதிகரிப்புக்கான போனஸ் 18 ரூபா என பம்மாத்து விடுகின்றனர். இதுவரை எந்த ஒரு நிர்வாகமும், 'நீங்கள் உற்பத்தி செய்த தேயிலையை கூடிய விலைக்கு விற்றுள்ளோம்' என்று கூறி பங்கு கொடுத்ததே இல்லை.இனிமேலும் கொடுக்கப்போவதில்லை.அதனால்,இந்த 18 ரூபாவும் துரைமாருக்கே. தொழிலாளர்களின் கைக்கு மொத்தமாகக் கிடைக்கும் அடிப்படைச் சம்பளம் ஆக 135 ரூபா மட்டுமே.

மேலும் கூடினால் விலை உயர்வு அலவன்ஸான 20 ரூபா கிடைக்கும். ஆனால், அதற்கும் கூட ஊழியர் சேமலாப நிதி கிடைக்காது.

ஊழியர் சேமலாபநிதி, நம்பிக்கைநிதியம்,பிரசவசகாயபணம், கோடைக் காலப் பணம்,வருடாந்த விடுமுறைச் சம்பளம், ஊக்குவிப்பு போனஸ் இவை அனைத்தும் இந்த 135 ரூபா என்ற அடிப்படையிலேயே கணிப்பிடப்படும்.

அதாவது 2002 ஆண்டு செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தத்தில் இணங்கினபடி அடிப்படைச் சம்பளம் 121 + விலை உயர்வு போனஸ் 14 ரூபா இவை இரண்டையும் இணைத்து இப்பொழுது மொத்தமாக வழங்கப்படும் 135 ரூபா மட்டும் தான் .ஆக ஒரு நாளுக்கு 1 ரூபா 80 சதம் ஊழியர் சேமலாப நிதி மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது என்பது தான் உண்மை. இ.தொ.காவினர் கூறும் 198 ரூபா ஒரு தொழிலாளிக்கும் கிடைக்காது.

இவற்றை எல்லாம் மூடி மறைக்க இ.தொ.கா வினர் இப்போது தோட்டம் தோட்டமாகப் போய் தொழிலாளர்களைத் திசை திரும்பு கின்றனர்.

தேர்தல் காலங்களில் அடிதடி குண்டர்களுடன் சாராயப்போத்தல்,சாப்பாட்டுப் பார்சல் கொண்டுபோய் தோட்டங்களை பயமுறுத்தியது போல் இப்போதும் செல்கின்றனர்.

'முன் எப்போதும் இல்லாதபடி தீபாவளிக் கடன் 2,000ரூபா வாங்கிக்கொடுத்துள்ளோம். உங்களுக்குக் கிடைக்கவேண்டிய பாக்கி சம்பளத்தில் 2,500 ரூபாவை தீபாவளிச் சம்பளத்துடன் பெற்றுக்கொடுத்துள்ளோம்.நீங்கள் மிகவும் சந்தோசமாக தீபாவளியைக் கொண்டாடலாம் என்று அப்பாவி தோட்டத்தொழிலாளர்களை ஏமாற்றுகின்றனர்.

(21ஆம் பக்கம் பார்க்க)

சராகோகுலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிக்கும் தீபாவளி

சைவ மக்களால் கொண்டாடப்படுகின்ற விசேட பண்டிகைகளுள் தீபாவளிப் பண்டிகை முக்கிய இடத்தைப் பெறுகின்றது. "ஆண்டிலோர் தீபாவளியாம் அதை ஆண்டியும் கொண்டாட வேண்டுமாம்" என்று அனைத்து மக்களும் ஆனந்தமாகக் கொண்டாடும் இந்தத் தீபாவளித் திருநாள் வருடந்தோறும் ஐப்பசி மாதத்தில் இந்துக்களால் மிகுந்த சந்தோஷத்துடன் வரவேற்கப்படுகின்றது.

தீபாவளிப் பண்டிகை இன்பத்துக்கும், மகிழ்ச்சிக்கும், சந்தோஷத்துக்கும், ஆனந்தத்துக்கும் உரிய ஒரு திருநாளாகும். எல்லா மக்களும் தங்களுடைய கஷ்டங்களை மறந்து குறைந்த அளவிலாவது கொண்டாடி மகிழ்வர்.

காலையில் எழுந்து நீராடி, புத்தாடை அணிந்து, ஆலய தரிசனஞ் செய்து, சுற்றத்தவர்களுடன் கூடி மகிழ்ந்து அளவளாவி, இனிப்புப் பதார்த்தங்களை உண்டு சந்தோஷங் கொண்டாடுவர். அது மாத்திரமன்றி ஏழை எளியவர்களுக்கு தான தர்மஞ் செய்து மகிழ்வர்.

மங்களகரமான இனிக்கும் இன்பத் தீபாவளிப் பண்டிகை பற்றி ஒரு வரலாற்றுச் சம்பவம் கூறப்படுகின்றது.

முன்னொரு காலத்தில் நரகாசுரன் என்று ஓர் அரக்கன் இருந்தான். அவன் கொடுமையே வடிவானவன். இறைவனிடத்திலே பல வரங்களைப் பெற்று தவவலிமையினால் ஆட்சியைக் கைப்பற்றி தேவரும் மூவரும் வியக்கும் வகையில் ஈரேழுபதினான்கு லோகங்களையும் ஆட்டிப்படைத்தான். அவனைக் கண்டாலே எல்லோரும் ஓடி ஒளிந்தனர். தேவர்கள் நடுநடுங்கினர் அந்த நரகாசுரன் கொடுமை தாங்க முடியவில்லை. துன்பத்தின் விளிம்பில் நின்ற தேவர்கள் அஞ்சி நடுங்கிப் புகலிடம் தேடி ஓடினார்கள்.



எல்லோரையும் துன்பத்துக்குள்ளாக்கும் இந்த நரகாசுரனிடமிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு காத்தற்கடவுளான ஸ்ரீ மகா விஷ்ணு மூர்த்தியிடம் முறையிட்டனர். அவர்களுடைய முறைப்பாட்டைக் கேட்ட விஷ்ணு மூர்த்தியானவர் நரகாசுரனைக் கொல்வதற்காகப் புறப்பட்டார். நரகாசுரன் தன்னுடைய ஆற்றல் எல்லாவற்றையும் ஒன்று திரட்டிப் போர் தொடுத்தான். மகாவிஷ்ணு தன்னுடைய சக்கராயுதத்தை ஏவி அவனைக் கொன்றொழித்தார்.

நரகாசுரன் இறக்கும் தறுவாயில் மகாவிஷ்ணு மூர்த்தியைப் பார்த்து "பிரவுவே! நான் அசுர குலத்தவன். அறியாமையினால் தீமை செய்துவிட்டேன். இற்றை நாள் வரை எல்லோரையும் ஆற்றொனாத் துன்பத்துக்கும், சொல்லொனாத் துயரங்களுக்கும் உள்ளாக்கினேன். நான் செய்த கொடுமையினால் அல்லற்பட்டு எல்லோரும் கண்ணீர் உகுத்தனர். ஆகவே, நான் உயிர்நீத்து இறந்திட்ட நாளாகிய இன்றைய தினத்தை மக்கள் எல்லோரும் தங்கள் துன்பங்களை மறந்து மகிழ்ச்சியுடன் களிக்கும் நாளாக ஒளிமயமான இன்பம் பிரகாசிக்கும் நாளாகக் கொண்டாடுமாறு தேவரீர் அருள்புரிய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

அவனது வேண்டுதலுக்கிரங்கிய விஷ்ணுவும் "அப்படியே ஆகட்டும்! நீ இறந்த இந்த நாளை எல்லோரும் தீபாவளி என்று கொண்டாடி மகிழட்டும்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அவ்வாறு அந்த நரகாசுரன் இறந்திட்ட நாள்தான் இன்றை தீபாவளித் திருநாள்.


ஆவளி என்றால் வரிசை. தீபாவளி என்றால் தீபவரிசை எனவே இந்துக்கள் தமது இல்லங்கள் தோறும் தீபங்களை ஏற்றி சந்தோஷமாக இறைவழிபாடியற்றி மகிழ்வர். எல்லோரும் சேர்ந்து புத்தாடை அணிந்து, இனிய தின்பண்டங்களை அருந்தி சுற்றத்தவர்களுடன் ஒன்றாக இணைந்து கூடிக்குலாவி குதூகலிப்பர். இதனால் இந்தத் தீபாவளித் திருநாள் இனிக்கும் நாள் என்று வர்ணிக்கப்படுகின்றது.

சிறுவர், சிறுமியர்களுக்கு இன்றைய தீபாவளி ஒரு மகிழ்ச்சிகரமான நாளாகும்.

-சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்-

ஒருவரோடு ஒருவர் உரையாடி, பல விளையாட்டுக்களை ஒன்று சேர்ந்து விளையாடி சிற்றுண்டிகளை உண்டு மகிழ்ந்து இன்புறுவர். தமது நண்பர்கள், உறவினர்கள் வீடுகளுக்குச் சென்று உறவுகொண்டாடி மகிழும் இன்பத் திருநாளாம் தீபாவளி மகிழ்ச்சி பொங்கும் மங்களகரமான ஒரு பொன்னாள்.

(15 ஆம் பக்கம் பார்க்க...)














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுபீட்சம் தரும் தீபாவளி

தீபங்களின் வரிசையை தீபாவளி என்று அழைப்பர். இப்பண்டிகை பல்வேறு மதத்தினராலும் பல நாடுகளில் கொண்டாடப்படுகின்றது. இதேபோன்றே தீபாவளி தொடர்பாக பல புராண ஐதீகக் கதைகளுமுண்டு.

ஞானவிளக்கை ஏற்றி, அறியாமையை அகற்றுவதே தீபாவளியாகும். மக்களையும், தேவர்களையும் கொடுமைப்படுத்தி வதைத்த நரகாசுரனின் ஆணவத்தை அகற்றி அழித்த நன்நாளாக இப்பண்டிகை கொண்டாடப்படுகின்றது.


இதுவரை இந்த ஐதீகக்கதைகள் பலவற்றுடன்; புதுவிளக்கமொன்றும் இந்த அணியில் சேர்ந்துள்ளது. பூமாதேவியுடன் தொடர்புபட்டதே இத் தீபாவளிப் பண்டிகை என்று இந்திய இந்துத்துவவாதிகள் கூறியுள்ளனர். நாம் உட்கொள்ளும் உணவு பூமாதேவி இட்ட பிச்சை. பூமியிலிருந்துநேரடியாகக்கிடைக்கும் உணவுசைவ உணவு என்பது தெரிந்ததே.

அவற்றை உட்கொண்டு தான் பெரும்பாலான விலங்குகள் வாழ்கின்றன. ஆகவே, அசைவ உணவிற்கும் பூமியே காரணமாகின்றது.

நாம் உண்ணும் உணவுதான் எமது வாழ்க்கையை தீர்மானிக்கின்றது.

இதேபோன்றுதான் எம்முள் நல்லகுணங்களும், தீயகுணங்களும் உள்ளன. அவற்றில் நாம் எதைக் கதைக்கின்றோமோ அதன்படி எமது பெயர், வாழ்க்கை அமைவதால் நம்மனம் ஒரு யுத்த பூமி. அதில் நல்ல எண்ணங்கள் தேவர்கள். தீய எண்ணங்கள் அரக்கர்கள்.

சில சமயம் பொதுநல எண்ணம், வலிமை பெற்றதாகத் தோன்றும். கீழான தீய எண்ணமான அசுரனை அழித்தது ஸ்ரீ கிருஷ்ணன் எனும் மேலான சிந்தனையே தீய எண்ணத்தை, — அகங்காரத்தை த அழிக்க வேண்டு



மென்ற அறிவின் சின்னமாக தீபம் ஏற்றப்படுகின்றது.

உளவியலாளர் சிக்மன் புரொயிட் மனதை மூன்று நிலையாக கூறியுள்ளார். இட், ஈ.கோ, சுப்பர் ஈ.கோ; என்று வகைப்படுத்தியுள்ளார்.

இட் எனும் சாதாரணமனமும், 'ஈகோ' எனும் அசுர குணமுடைய மனமும் பொருந்துகின்றபோது சுப்பர் ஈகோ அவற்றிடையே நீதிபதியாக இருந்து சமப்படுத்துகின்றது. சுப்பர் ஈகோ என்ற தீபச் சுடரை அவ்வப்போது ஏற்றுவன் மூலம் நல்ல குணமுள்ள மனிதராக வாழ வழியுண்டு. அப்படியானால் பூமாதேவிக்கு என்ன சம்பந்தம் என்ற கேள்வி எழுகின்றது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## இனிக்கும் தீபாவளி

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

சைவமக்களாகிய நாம் இந்தத் தீபாவளிப் பண்டிகை நாளில் பழைய துன்பங்களையும், வீட்டுக் கஷ்டங்களையும் மறந்து தெய்வத்தை வணங்கி, எமது வாழ்வில் சுபீட்சமும், மகிழ்ச்சியும், அமைதியும் நிலவ வேண்டுமென்று பிரார்த்தித்து எல்லாம் வல்ல ஆண்டவனின் அடிபணிந்து அவனின் கிருப கடாட்சத்தைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்வோமாக.

இன்பத் திருநாளாம் இந்தத் தீபாவளி நாளில்;
துன்பங்கள் நீங்கி தூய இறைவனை வணங்கி;
நாளும் பொழுதும் நன்மைகள் பெருகிவர;
கடவுளை வணங்குவோம்; சந்தோஷமாய் வாழ்வோம்.

மங்களகரமான மகிழ்ச்சி பொங்கும் நன்னாள்.
திங்களணி சேகரனை வணங்கி மகிழும் பொன்னாள்;
எங்களது வாழ்வில்; இனிக்கும் தீபாவளித் திருநாள்.
பொங்கிடும் இன்பம் துலங்கிடும் மகிழ்ச்சி.


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் உள்ளம் கனிந்த
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

UMAZAKI

18.10.2004 முதல் கிளிநொச்சி மண்ணில்
அறிமுகம் செய்யப்பட்ட UMAZAKI
மோட்டார் சைக்கிளின் ஏகபோக
விற்பனைமுகவர்களாக
நாமே தேர்வுசெய்யப்பட்டுள்ளோம்.

UMAZAKI மோட்டார் சைக்கிளின்
தரத்தினை அறிந்திட எமது காட்சியறைக்கு
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்



சிவகுரு மோட்டர்ஸ்
பரந்தன், கிளிநொச்சி.

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



மங்களகரமான நிகழ்வுகள் எதுவானாலும்
வீடியோ, போட்டோ அனைத்தினையும் சிறந்தமுறையில்
செய்து பெற்றிட நாடுங்கள்......



Kodak EXPRESS

கிளிநொச்சி மாநகரில்
புகைப்படத்துறையில்
தனக்கென தனியிடம் வகித்து
வீறு நடைபோட்டுக்கொண்டு
இருக்கும்.....

வண்ண முகில் சோலை
பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி, தொ.பே. 0777 6052579

அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்!

- கண்ணாடி வகைகள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- படம் பிறேம் போடுதல்
- வாழ்த்து மடல்கள்
- கணினியில் படம் பெரிதாக்கல்
- கணினியில் ஸ்ரிக்கர் வெட்டுதல்
- லெமனேற்றிங் செய்தல்
- அலுமினிய பிற்றிங்கிற்கான பொருட்கள் விற்பனை செய்தல்
- விளம்பரப் பலகை (பிளாஸ்ரிக்) செய்தல்
- வாகன இலக்கத் தகடுகள் செய்தல்



இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

ஈழவரன் அழகுப் படமாடம்
யாழ். சாலை, கிளிநொச்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்

# சுடர் ஒளி தீபாவளி சிறப்பிதழ்

## பேரானந்தம் தரும் தீபாவளி

தமிழர்கள் காண்கின்ற பண்டிகைகளில் தீபாவளிப் பண்டிகையும் ஒன்றாகும். தீபாவளி என்பது 'தீபாவலி' எனவும் அழைக்கபடுகின்றது. இது தீபங்களின் வரிசைஎனவும்பொருள்படும். அதிகாலையில் எண்ணெய் ஸ்நானம் செய்யக்கூடாது என்பது தமிழர் பண்பாடு. ஆனால், தீபாவளி தினத்தன்று ஆரியோதய நேரம் எண்ணெய்ஸ்நானம்செய்யவேண்டுமென்பதே விதியாகும்.

ஐப்பசி மாதமானது துலா மாதம் என்பதுபொருள். இம்மாதத்தில் வைகறைப் பொழுதில் சகல நீருற்றுக்களிலும் கங்கை சங்கமிப்பதாக சாத்திரங்கள் கூறுகின்றன.

ஐப்பசி மாதத்தில் அதிகாலையில் ஸ்நானம் செய்பவர்கள் கங்கா ஸ்நான பலனைப் பெறுவர் என இதிகாசங்கள் கூறுகின்றன. இவ்வாறு சிறப்புப்பெற்ற துலா மாதமான ஐப்பசி மாதத்திலேயே இத்தீபாவளித் திருநாள் அமைகின்றது.




ஐப்பசிமாத அபரபக்கத்து சதுர்த்தி திதியாக அமையும் அதிகாலை நேரமே தீபாவளி நாளாகும். அவ்வேளையில் துயில் விட்டு எழுந்து சப்த சிரஞ்சீவிகளின் பெயர் சொல்லித் தியானித்த வண்ணம் சிரசில் எண்ணெய்பூச வேண்டும். பின்பு நீரில் ஸ்நானம் செய்யவேண்டும்.

ஸ்நானம் செய்யும்போது, ''எனக்குப் பாவ விமோசனம் அளித்து பேரானந்தப் பெருவாழ்வு தரவேண்டும்'' என்றுகங்கையை பிரார்த்தித்தல் அவசியம்.

சப்த சிரஞ்சீவிகளாக குறிப்பிடப்படுவோர் பலி, பரசுராமன், மார்க்கண்டன், அஸ்வத்தாமா, விபூஷணன், கும்பகர்ணன், விக்கிரமாதித்தன் ஆகியோர் ஆவர். தீபாவளித் திருநாள் பற்றி வரலாற்றுக் கதைகளும் உண்டு. மகாவிஷ்ணு சக்திகளுள் ஒருவரான தேவிசத்தியபாமா, நரகாசுரனைச் சம்ஹாரம் செய்தார். நரகாசுரன் இறக்கும்போது ஒருவரம் கேட்டான். தான் அழிந்த தினத்தை மக்கள் பெருநாளாகக் கொண்டாடவேண்டும். அதனால், இத்தினம் 'நரக சதுர்த்தி' என அழைக்கப்பட்டது என்று புராண வரலாறுகள் எடுத்தியம்புகின்றன.

தன் சகோதரன் இரண்ய கசிபுவை நரசிம்ம அவதாரம் எடுத்துக்கொண்டார் மகாவிஷ்ணு. மகாவிஷ்ணு மீது கோபம்கொண்ட இரண்யாஷன், பூமியைப் பாயாகச்சுருட்டி பாதாள உலகில் மறைத்துவைத்தான். இதனால், தேவர்கள் மகாவிஷ்ணுவிடம் முறையிட்டனர்.

வராக அவதாரம் தாங்கி இரண்யாஷனைக் கொன்று பூமியை மீட்டார். தன்னை மீட்ட வராகமூர்த்தியிடம் பூமாதேவியார் தங்கள் அம்சமாக எனக்கு குழந்தை வரம் வேண்டும் எனக் கேட்டார். உக்கிரமான இந்த நேரத்தில் உனக்கு வரமளிப்பதால், உனக்கு அசுரக் குழந்தைதான் பிறக்கும் என்றார். குழந்தையும் பிறந்தது; மூர்க்ககுணம் கொண்ட அசுரக் குழந்தையாக அது இருந்தது.

(18 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி தீபாவளி சிறப்பிதழ்

## ஒளியேற்றும் தீபத்திருநாள்

''நல்லாரைக் காக்கவும் தீயாரை அழிக்கவும் நான் யுகந்தோறும் அவதாரமெடுப்பேன்'' என மொழிந்தவர் கிருஷ்ண பரமாத்மா. 'எங்கெல்லாம் நன்மைகள் மறைந்து தீமைகள் தாண்டவம் ஆடுகின்றனவோ அங்கே எனது பிரசன்னம் நிகழும்' என திருவாய் மலர்ந்தருளியவர் கிருஷ்ணன்.

உலகத்தோர் நன்மை பெற்று உய்யும் பொருட்டு தீய சக்தியொன்றைப் பரமாத்மா வதம் செய்த நாளே தீபாவளித் திருநாள். உலகில் உள்ள இந்துக்கள் அனைவரும் ஒளியேற்றி அகமகிழும் இன்பத் திருநாள் இதுவாகும். இத்தீபாவளித் திருநாளை இந்துக்கள் ஒளியேற்றி கொண்டாடுவதற்கு புராணக் கதை ஒன்றும் உண்டு.

பரமாத்மாவின் வராக அவதாரத்தின் போது, பரமாத்மாவிற்கும், பூமாதேவிக்கும் பிறந்தவன் நரகாசுரன். நரகாசுரன் என்றும் அழியாதவனாக வாழவேண்டுமென்ற வரத்தை பூமாதேவி நாராயணனிடம் வேண்டினாள். அச்சந்தர்ப்பத்தில் நாராயணன் அவ்வாறு ஒரு வரம் அருள முடியாதெனவும், நரகாசுரனை தானே சம்ஹாரம் செய்து தன் அருகில் வைத்துக்கொள்வதாகவும் உறுதியளித்தார்.



நாராயணனின் கண்ண அவதாரத்திலே, தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் தொல்லை கொடுத்து வந்தான் நரகாசுரன். இதனை அறிந்த கண்ண பிரான் நரகாசுரனை வதம் செய்யச் சித்தம் கொண்டார்.

கண்ணனுக்கும், நரகாசுரனுக்கும் போர் மூண்டது. தனது மிகப் பெரும் படைகளுடன் மோதினான் நரகாசுரன். நரகாசுரனை அழிக்கத் தனது சக்கராயுதத்தை ஏவினார் கிருஷ்ணன். அவ்வேளை அங்கு தோன்றிய பூமாதேவி "நரகாசுரன் வராக அவதாரத்தின்போது நம் இருவருக்கும் பிறந்தவன். எனவே அவனுக்கு ஞானஉபதேசம் புரிந்து முக்தியளிக்க வேண்டும்'' என வேண்டிக் கொண்டாள். மனமிரங்கிய கண்ணபிரான் நரகாசுரனுக்கு அருள் புரிந்தார்.

தனதுதீய செயல்களை எண்ணி வெட்கம் கொண்ட நரகாசுரன், தன் உள்ளத்து மமதை அழிந்தவனாக "கண்ணா தீயவனான எனக்கு அருள் புரிய வந்த கருணைக் கடலே! நான் மறையும் இந்த நாளை எல்லோரும் பண்டிகையாக கொண்டாட வேண்டும்'' என வேண்டிக் கொண்டான்.

அன்றிலிருந்து இந்துக்கள் அனைவராலும் தீபாவளித்திருநாள் கொண்டாடப்படுகிறது. நரகாசுரனுக்கு முக்தி வழங்கிய நாளாகையால் ''நரகசதுர்த்தி'' எனவும் இந்நாளை வழங்குவதுண்டு.

நரகாசுரனின் மனதில் உள்ள அறியாமை விலகிய நாள் இத்தீபாவளித்திருநாள். எனவே, இத்திருநாளில் உலகில் உள்ள இந்துக்கள் அனைவரும் தமது உள்ளத்தில் உள்ள அறியாமை விலகவும்,மலங்கள் அழிந்து போகவும் வேண்டித் தீபமேற்றி இத்திருநாளைக் கொண்டாடுவர். தீபாவளி என்ற பெயருக்கு


அனைவருக்கும்இனிய தீபாவளி வாழ்த்துக்கள்
பிறின்ஸி சில்க்ஸ்
PRINCI SILKS
அனைத்துத் தரப்பினருக்குமான சல்வார்கள், சாறிவகைகள் மற்றும் குழந்தைகளுக்கான பேபிசூட் போன்றவற்றைப் தெரிவு செய்திட நீங்கள் நாடவேண்டிய இடம்.
இல. 09, நவீன சந்தை உட்புறம்
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 4590083

அனைவருக்கும் எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!
கலையரசி நகை மாடம்
தங்க நகை தயாரிப்பும் வியாபாரமும்
உங்கள் அழகியதங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
பிரதான வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு

அனைவருக்கும் எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!
PROFESSIONAL COMPUTER COURSES
DIPLOMA IN MULTI MEDIA (With Video Mixing)
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN HARDWARE (Online)
DIPLOMA IN COMPUTER PROGRAMMING
DIPLOMA IN INTERNET TECHNOLOGY
DIPLOMA IN AUTOCAD ( With New South Wales University Syllabus And Guide Books)
அனைத்து மாணவர்களுக்கும்
FREE HANDOUTS
FOPPY DISKETTE
SOFTWARE CD & FREE COMPUTER CONSULTING
இவை அனைத்தையும் ஒன்றாகப் பெற்றிட நாங்கள் உதவுகின்றோம்
Touch COMPUTER SYSTEM
The right way to touch IT
UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA
T.P :- 021 4 590222

வாடிக்கையாளர்களுக்கு எம் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்...
உங்களின் இக்காலத் தெரிவுக்கு...
குமரகுரு
புடவை அழகுப்பொருள் வாணிபம்
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமண மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண், சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.
குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்
KUMARAKURU TEXTILE & FANCY HOUSE
யாழ் சாலை, கிளிநொச்சி Tel: 021 228 5971 Yarl Road, Kilinochchi.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேய்பிறைகள் அல்ல, நிரந்தர சூரியன் வேண்டும்.

அச்சம் தரும் காரிருளில் – ஒன்றும்
அறியாத நாம்,
அர்த்தம் இல்லாத சொற்களாய்
ஆண்டுதோறும் தீபாவளிகள்.

கரியமேகங்கள்
காற்றலைகள் இல்லாததால்



செறிந்த கூட்டமாய்
சுற்றி இந்தக் குடாநாட்டை

ஒளிக்கீற்றுக்களுக்கு
ஒரு சந்தர்ப்பமும்
வழங்கப்படவில்லை
இருண்ட இதயங்களுடன்
இருள் அற்ற தீபாவளி
எப்படிச் சாத்தியம்?

அவை எனவே அடித்த
காற்றுக்கு
அகன்றன மேகங்கள் –
ஆனாலும்
தெரிந்த வானத்தில்
இருந்ததுவும் வெண்ணி
லவு என்னவோ?

கிடைத்த ஒளியில் நாம்
கிளுகிளுப்பாய் இருக்
கின்றோம்,
வந்ததற்காய் கொண்டாடிய
தீபாவளிகளுள் கொண்
டாடுவதற்காய் ஒன்று.

வளர் பிறை எனவே

பல சுற்று வளர்ந்தாலும்
நாம் வேண்டுவது அடுத்த தேய்பிறையில்
அழிந்து போகும் சந்திரன் அல்ல.

மீண்டும் மீண்டும்
கொண்டாடு வதற்கான தீபாவளிகள் வர
வேண்டும் வேண்டும்
நிரந்தர சூரியன் ஒன்று.

– பேரின்பன் –

தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்தல் என்பது பொருள்.

நரகாசுரனுக்கும், கண்ணபிரானுக்கும் இடையே மூண்ட போர் அதிகாலை வேளையில் இடம் பெற்றது. இதனால் இந்துக்கள் அனைவரும் அதிகாலையிலேயே எழுந்து எண்ணெய் தேய்ந்து, வெந்நீர் குளித்து, புத்தாடை அணிந்து கண்ணனை வழிபடுவர். அநீதி மறைந்து தர்மம் தலை தூக்கியதாகக் கருதப்படும் இத்திருநாளில் பட்டாசுகள் வெடித்தும் கொண்டாடப்படுகிறது.

நல்லாரைக் காக்கும்பரமாத்மா யுகந்தோறும் நல்லாரைக் காக்க அவதாரமெடுப்பான் என்ற நம்பிக்கையில் ஆண்டு தோறும் இத்தீபாவளித் திருநாளை இந்துக்கள் தம் இல்லந்தோறும் சிறப்பாகக் கொண்டாடுவர். நாட்டில் சாந்தி, சமாதானப் பெருகி, இன்பம் செழித்தோங்க பரமாத்மாவின் திருவடிகளைப் பணிந்துதேத்துவர்.

-தர்ஷனா-


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

நியூ சோபனா ஆடையகம்

இன்றைய நலநாகரீகத்துக்கேற்ப அனைத்து ஆடைகளையும் தெரிவு செய்திட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

NEW SHOBHANA TEXTILES

16, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 0777 574027





வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், அனைவருக்கும் எமது இனிய தீபாவழி வாழ்த்துக்கள்!

யுத்தத்தால் பாதிக்கப்பட்டம் எமது மக்களின் கட்டட நிர்மான வேலைகளை உடன் நிறைவு செய்ய மக்களின் சேவையில் வைரமாளிகை.

மிற்சுயி, ஹினோடே சீமெந்து வகைகள், மக்ஸன் நெற் வகைகள், எஸ்லோன் பீ.வீ.சி. பைப் வகைகள், கெவில்ட்டன் மின்னியல் பொருட்கள், ஆகியவற்றுடன் கட்டட நிர்மாணத்திற்கான அனைத்துப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

உலகின் முதற்தர சீமெந்து : வடபகுதிக்கான முகவர்
மிற்சுயி, மக்சன் நெற் : வன்னிக்கான முகவர்
எஸ்லோன் : வன்னிக்கான முகவர்

வழமையாளர்களுக்கும், ஒப்பந்தகாரர்களுக்கும் விற்பனையின் பின் சேவையும், வியாபார சிறப்புச் சலுகையும் வழங்கப்படுகிறது

வைரமாளிகை கட்டடப் பொருள் வாணிபம்







கரடிப்போக்குச் சந்தி ..., ... சாலை, கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நட்புடன் நாமுறவாடும் தீபாவளி!



மழைகாலப் பண்டினையார்,
மனங்குளிரும் நாளிதுவே,
ஏழையும்கொண்டாடுமின்னாள்,
என்றென்றுமினிய தீபாவளியே!

நரகாசுரனொழிந்த நானில்
நல்லெண்ணமுதித்த வேளையில்
நான் கோரிய வரமதால்
நாரயணினளித்தான் தீபாவளியை!

நான்மறை முழங்குவது தீபாவளியில்,
நல்லமைதி திளைக்குமித் தீபாவளியில்,
நானிலம் கொண்டாடும் தீபாவளியில்,
நட்புடன் நயமுறவாடும் தீபாவளியே!



*மாருதி, ஆவரங்கால்.*

## பேரானந்தம் தரும் தீபாவளி......

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதைக்கண்ட பூமாதேவி கலக்கம் அடைந்தாள். மகாவிஷ்ணுவைப் பிரார்த்தித்து இக்குழந்தையைத் தானே அழிக்க வேண்டுமென வரம் கேட்டுப்பெற்றாள்.

வளர்ந்த நரகாசுரனின் கொடுமைகள் தாங்கமுடியவில்லை - அச்சமடைந்த தேவர்கள் மகாவிஷ்ணுவை வேண்டினர். பூமாதேவியின் அம்சமான சத்தியபாமாவுடன் போருக்குச் சென்றார் கிருஷ்ணபகவான்.

போரின் இடைநடுவே கிருஷ்ணர் மயக்க முற்றார். ஆத்திரமடைந்த சத்தியபாமா தானே வில்லெடுத்து நரகாசுரனுடன் போர் புரிந்து அவனைச் சம்ஹாரம் செய்தார்.

நரகாசுரனால்துன்பப்பட்ட மக்கள் அவன் அழிந்ததும் மகிழ்ச்சியடைந்தனர். அந்த நாளைத் திருநாளாகக் கொண்டாடினர்.

புத்தாடை அணிந்து, இனிப்புப் பண்டங்கள் செய்து நண்பர்கள், உறவினர்களோடு கூடிக் களிப்புற்றனர்.

கொடுமைகள் பல புரிந்த அரக்கன் நரகாசுரன் இறந்த துலாமாதத்திலே நம்மிடையே இருக்கும் ஆணவத்தை அழித்து நல்லவர்களாக இருக்கும் ஏனை யோருடன் இணைந்து செயற் படதிடசங்கற்பம் பூணுவோம். நாட்டிலே இனங்களிடையே சாந்தியும், சமாதானமும் நிலவ பிரார்த்திப்போம்.









### தீபத்திருநாளே...... வா!

வா..... தீபத்திருநாளே.... வா!
வாழ்த்துப் பூத்தூவி
வசந்தப் பா இயற்றி
வரவேற்கின்றோம் உனை இன்று!
வரலாற்றுப் புத்தகத் தாள்களிலே...
நிகழ்வுகள் வரையப்படும் காலமிது!

இருபது ஆண்டுகளாய்...
இருண்ட நம் வாழ்வில்....
ஒளி பிறக்கும் நேரமிது!
திடமான முடிவோடு களமாடி...
தீர்வு பெறும் வேளையிது!
கொடுமைகள் கருகிட — இங்கு
பெருகிய இன்பத்தால் — முகங்களில்...
புன்னகை பூத்துக் குலுங்க.....
சமாதானம் மலர்ந்திட்ட பொழுதிது!

ஓ... தீபத்திருநாளே.....!
தமிழர்களுக்கு வளமான வாழ்வுடனே...
தரணியில் சம(ா)தானமும் கிடைத்திட — நீயும்
பூபாளம் பாடி — நல் தீபமேற்றி..
என்றும் தித்திப்பைத் தந்துவிடு!

—சி.சிவகௌரி, மட்டுவில் வடக்கு—




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி தீபாவளி சிறப்பிதழ்

## தித்திக்கும் தீபாவளியே!

தித்திக்கும் தீபாவளியே!
தத்திவரும் மழலை கூட – உன்
நாமம் கேட்கையிலே
மத்தாப்பாய் சிரிக்கிறது.

பட்டாடை கட்டிய
பருவச் சிட்டுக்கள் – இன்று
புத்தாடை கட்டி
புதுப்பொலிவுடன் ஜொலிக்கிறது....
நெற்றி முத்துப் போல்
பொட்டு வைத்துக் கொள்ளும்
கூந்தல்களில்
மல்லிகை வாசம் வீசுகிறது

குடும்பங்கள்
பூஞ்சோலையாக மாறி
இன்பப்பந்தத்தில்
லயித்துக் கிடக்கின்றன..

பலகாரத் தட்டுக்கள்
பரிமாறப் படுகையிலே
பகைமை மறந்து – மனம்
பாகாய்க் கரைகிறது...

பட்டாசு வெடிச்சத்தம்
பாரெங்கும் கேட்கிறது – இது
"தப்பான" சத்தமில்லையென
எல்லோருக்கும் புரிகிறது.

கடந்தகால நினைவுகளை
கத்தரித்து விட்டு – ஒரு
புதுயுகத்தை அனுபவிப்பது
போல்
உள்ளங்கள் உணர்கின்றன

இத்தனை மாற்றங்களும்
உன்னால்தான் வந்த
தென்றால்,
தித்திக்கும் தீபாவளியே – நீ
நித்தமும் வந்தாலென்ன?

–அழியூர், சி.ஏ.யசீகரன்.

## சுபீட்சம் தரும் தீபாவளி.........

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

மகாவிஷ்ணுவாக அவதாரத்தில் பூமாதேவியை மணந்து கொண்டார்.

விஷ்ணுவிற்கும் பூமாதேவிக் கும் நரகாசுரன் பிறந்தான். துவாபரயுகத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் சத்தியபாமாவை மணந் திருந்தார். எனவே சத்தியபாமா பூமாதேவியின் அவதாரம்.

நரகாசுரனின் கொடுமைகளை ஸ்ரீ கிருஷ்ணர் அறிந்து, அவனை வதம் செய்யத் தீர்மானித்தார்.

அதற்கு சத்தியபாமாவின் உதவியை நாடினார் ஸ்ரீ கிருஷ்ணர். அவளும் உதவினாள்.

சத்தியபாமா (பூமாதேவி அவதாரம்) என்ற ஒரு தாய், உலகம் உய்யவேண்டி அரக்கனான தன் மகனை அழிப்பதற்கு உதவினாள்.



அந்த அழிவின் நிகழ்வே தீபாவளி என்ற புதிய விளக்கமொன்றைக் கூறியுள்ளனர்.

கிழக்காசிய நாடுகளிலும் தீபாவளியை குபேர பூஜையாகக் கொண்டாடுவர்.

இந்திரனின் பொக்கிஷதார ரான குபேரனைத் தீபாவளியன்று வழிபட்டால் அந்த ஆண்டு சுபீட்சமாக விளங்கும் என்பது நம்பிக்கை.

குபேர வழிபாடு இலங்கை, ஜப்பான், யாவா, இந்தோனேஷியா, சீனா தென் அமெரிக்கா, போன்ற நாடுகளில் நடைபெறுகிறது.

குபேரனை ஜப்பானியர் 'குபேரா' என்றும் கிரேக்கர்கள் 'கமெராஸ்' என்றும் குறிப்பிடுவது வழக்கமானது.

வல்கானத்தில் தீபாவளியைத் துர்க்கைக்குரியதாகக் கொண்டாடுகிறார்கள். உத்தரபிரதேசத்தில் தீபாவளி என்று அன்னபூரணி வழிபாடு நடத்துவர்.

தீபாவளியன்று வைணவர்கள் 'கோவர்த்தன பூஜை' செய்வர். ஜைனர்கள் தமது மதத் தலைவரான மகா வீரர்; மகா நிர்வாணம் அடைந்தநாளாக தீபாவளியைக் கொண்டாடுவர்.

சீக்கியர்கள் தமது மதகுருவான குருநானக் பிறந்த நாளை தீபாளியாகக் கொண்டாடி வருகின்றனர்.

மகாராஷ்டிரத்தில் 'நகர சதுர்த்தசி' என்று 4 நாட்கள் கொண்டாடுவர். ராஜஸ்தானில் தீபாவளியன்று மார்வாடியர்கள்; அன்று சாயங்காலமே சுமிபூஜையை நடத்தத் தொடங்கிவிடுவர். தீபாவளியன்று இளம் பெண்கள் தீபங்களை ஆறுகளில் மிதக்கவிடுவர்.

தீபங்கள் அணையாமலும், மூழ்காமலும் மிதந்து சென்றால் அந்த ஆண்டு சுபீட்சமாக இருக்கும் என்பது நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை இன்றும் இந்தியாவில் சில மாநிலங்களில் நடைபெறுவதை நாம் காணக் கூடியதாக உள்ளது.

## தீபாவளி வந்தது

தீபாவளிவந்தது! தீபாவளிவந்தது!
தீபாவளி வந்ததெடா!
அசுரன் அழிந்த தினமென
ஆடிப்பாடி மகிழ்ந்திடுவோம்.

தீபாவளிவந்தது! தீபாவளிவந்தது!
தீபாவளி வந்ததெடா!
வேற்றுமைபேய் தன்னையே
வேருடன் ஒழித்துக்கட்டிடுவோம்!

தீபாவளிவந்தது! தீபாவளிவந்தது!
தீபாவளி வந்ததெடா!
வாழ்வில் சமாதானம் மலரவே
வாலறிவன்தாழ்வணங்கிடுவோம்.

சமூகஜோதி,
கா.கணேசதாசன்.

## வாசு தேவன் கண்ணன்!

இருட்டினில் வாழ வேண்டும்!
இனிப்புக்களுண்ண வேண்டாம்!
கோடியுடுத்த வேண்டாம்!
கூடி வாழவேண்டாம்!
கொண்டாட்டங்கள் வேண்டாம்!
பாழுமரக்க நரகன்
வாழுமுரிமை பறித்தான்! வதைத்தான்!

கேட்டவுடன் ஓடிவந்தான்
நாட்டமுடன் கண்ணன்!
கொடியவன் நரகனை யழித்தான்!
விடிவை யெமக்குத் தந்தான்!
கோடியை யுடுத்துங்கள்!
வடிவா யேற்றுங்கள் தீபம்!
வாய் மலர்ந்தருளினான்
பேசும் மொழியால்
'தீபாவளி' யென்றான்
வாசுதேவன் கண்ணன்!

– மாருதி, ஆவரங்கால்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்



# KODAN
## SERVICE STATION

யாழ். சாலை, பரந்தன் சந்தி, கிளிநொச்சி.



வன்னி, யாழ். ஊர்தி உரிமையாளர்களின் நீண்டகால கனவை நனவாக்க உங்கள் காலடியில் ஊர்திகளின் அனைத்துப் பணிகளையும் கணினி மயப்படுத்தப்பட்டு, பொறியியல் வல்லுநர்களின் பணி உறுதிப்படுத்தலுடன் ஒரே கூரையின் கீழ் செய்துகொள்ள பரந்தன் சந்தியில் புதுப்பொலிவுடன் உதயமாகியுள்ள

## கோடன் தானியங்கி பொறியியல் நிறுமம்

எம்பணியில் என்றும் நீங்கள் மனம் மகிழ்ந்திட நாம் வழங்கும் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவைகள்

- எவ்வகை ஊர்திகளையும் மிகச்சிறந்த முறையில் தூய்மிப்பி செய்யலாம்.
- ஊர்திப்பொறியியல்
- கீரோ கொண்டா பிறீ சேவிஸ்
- ஊர்தி வர்ணப்பூச்சு
- இன்ஜெக்ரர் பம் சேவீஸ்
- அனைத்து வகையான போறிங் வேலைகளும்
- கிராங் வெட்டுதல்
- கடைச்சல்
- மின்னிணைப்பு
- வில்லுத்தகடு பொருத்துதல்
- றேடியேற்றர்
- ரிங்கர்
- சீற் தையல் வேலை

**கணினிமயப்படுத்தப்பட்ட பணிகள்**


- வீல் எலமன்
- வீல் வலன்ஸ்
- குளிரூட்டி பொருத்துதல்
- சொக்கச் சோபர் ரெஸ்ரல்
- ஸ்கானிங் மெசின்
- ஏ.ரி.எவ். சேஞ்சர்
- கெற்லைற் செற்றிங்
- டிஜிட்டல் முறையில் காற்று சீர்செய்தல்
- ரயர் மாற்றுதல்

அனைத்து ஊர்தி உதிரிப்பாகங்களை மிகவிரைவில் பெற்றுக்கொள்ள
MITSUBISHI, TOYOTA, ISUZU, MAZDA, NISSAN, LEYLAND, TATA, TAFE, MAHENDRA, MF240
இரும்பிலான அனைத்துக் கூரைவேலைகளும், கிறில், கதவுவேலைகள் கட்டடம் நிர்மாணிக்கப்படும் பகுதியில் வந்து பொருத்திக் கொடுக்கப்படும்.

*"உங்களது தேவையே எங்களது சேவை"*

# KODAN
## Auto Mobile Engineering Company

Jaffna Road,
Paranthan Junction,
Kilinochchi.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானத்தில் திருட்டு

அமெரிக்காவின் சென் லூயிஸ் நகருக்கும் துல்ஸா நகருக்கும் இடையில் உள்ளூர் விமானப் பயணச் சேவையை நடத்திவந்த அமெரிக்க விமானக் கம்பனிக்குச் சொந்தமான B727 விமானம் சென் லூயிஸ் விமான நிலையத்தில் காத்துக்கிடந்தது.

நேர சூசியின்படி விமானம் காலை 10.30 மணிக்குப் புறப்படும். அப்போது நேரம் காலை 10 மணியாகவிருந்தது. விமானம் புறப்பட இன்னும் அரை மணி நேரமே இருந்தது.

விமானநிலைய ஒலிபெருக்கி அறிவிப்பு, அதை அடிக்கடி ஞாபகப்படுத்தியது.

பிரயாணிகளும் அவசர அவசரமாக முண்டியடித்துக்கொண்டு விமானத்துக்குள் நுழைந்து தங்கள் தங்கள் ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர்.

நேரம் 10.30 மணியை அடைந்ததும் விமானம் மேலெழுந்து துல்ஸா நகர் நோக்கிப் பறக்கத் தொடங்கியது.

நேரம் நண்பகல் 12 மணியைத் தாண்டிய வேளையில் D20 என்ற ஆசனத்தில் அமர்ந்திருந்த ஒருவன் எழுந்து குளியலறைப் பக்கம் சென்றான். சிறிது நேரத்தில் அங்கிருந்து திரும்பியவன் பயணிகளின் ஆசனங்களுக்கு முன்பாக வந்து நின்றான்.

அடர்ந்த தாடியுடனும் காதில் வளையல்களுடனும் அவன் காணப்பட்டான். பார்ப்பதற்கு அறுபது வயது நிரம்பிய ஒருவன் போல் தோன்றினாலும் அவனது கண்ணில் இளமையின் வேகமும் ஒருவகையான வெறித்தனமும் தெரிந்தன.

பயணிகள் அவனை மிக உன்னிப்பாக அவதானிக்கத் தொடங்கிய வேளையில் யாரும் எதிர்பார்த்திராத வகையில் தனது ...டைப் பைக்குள் இருந்து கைத்துப்பாக்கியொன்றை எடுத்தவன்; எடுத்த வேகத்திலேயே அருகில் நின்ற ஓர் அழகிய இளம் விமானச் சிப்பந்தியை மடக்கிப் பிடித்தான்.

அவள் அலரத்தொடங்கினாள். ''அலராதே'' என்று அவளது தலையின் பின்புறத்தில் துப்பாக்கியை வைத்து மிரட்டினான். பயணிகள் செய்வதறியாது தடுமாறினர்.

''எவரும் அசையக் கூடாது. அசைந்தால் உங்கள் அனைவரையும் இந்தப் பெண்ணையும் சுட்டுக்கொன்று விடுவேன். உங்களுக்கு உங்கள் உயிர்மீது ஆசை இருந்தால், மரியாதையோடு உங்களிடம் இருக்கும் பணம், நகை எல்லாவற்றையும் கொண்டுவந்து என் முன்னே வைத்திருக்கும் இந்தப் பையில் போடுங்கள்.'' என்று மிரட்டினான்.

பயணிகள் இப்போது எதைக் கொடுத்தாவது தங்கள் உயிரைக் காப்பாற்றவேண்டும் என்ற நிலையில் இருந்தனர்.

ஒருவர் பின் ஒருவராக எழுந்து வந்து தங்களிடமுள்ள பணம், நகை போன்ற ...ற்றை அவன் முன் வைக்கப்பட்டிருந்த ...பையில் போட்டனர்.

எல்லாப் பயணிகளும் போட்டு முடித்ததன் பின்பு ஒரு பயணியை அழைத்து பணமும், நகைகளும் போடப்பட்ட பையை தன்னிடம் தரும்படி கோரினான். பின் அந்தத் திருடன் குனிந்து அந்தப் பையை எடுத்துத் தனது தோளில் போட்டுக்கொண்டு அந்த விமானச் சிப்பந்தியையும் இறுக்கி அணைத்தபடி விமானத்தின் கதவை நோக்கி நகர்ந்தான்.

அனைவரும் என்ன நடக்கும் எனத் தெரியாமல் திகைத்துப் போய் நின்றனர். எல்லோரது இதயங்களும் படபடத்தன.

கதவருகே சென்ற திருடன் அவசரகால கதவைத்திறக்குமாறு அந்தச் சிப்பந்திக்குக் கட்டளையிட்டான். அவளும் திறந்து கொடுத்தாள். அப்பொழுது விமானம் பூமியிலிருந்து 16,000 அடி உயரத்தில் மணிக்கு 175 மீட்டர் வேகத்தில் பறந்து கொண்டிருந்தது.

கதவு திறக்கப்பட்டதும் அச்சிப்பந்தியின் பிடியைத் தளர்த்தினான். ஏற்கனவே அவனது முதுகுப் புறம் பரசூட் தயாரான நிலையில் கட்டப்பட்டிருந்தது. குளியல் அறைக்குச் சென்று திரும்பும் போதே அவன் அந்த வேலையைச் செய்திருக்க வேண்டும்.

விமானப் பணிப்பெண் சற்றும் எதிர்பாராத நேரத்தில் அவளுடைய ஆப்பிள்போன்ற



கன்னத்தில் ''இச்'' என்று முத்தமொன்றை பதித்துவிட்டு மேலிருந்து கீழ் நோக்கி ஒரே பாய்ச்சலில் பாய்ந்தான். எறத்தாழ ஐந்து லட்சம் அமெரிக்க டொலர்களும் நகைகளும் பிரயாணிகளிடமிருந்து அவனால் அபகரிக்கப்பட்டிருந்தன.

இச்சம்பவம் தொடர்பாக் மறுநாள் செய்திவெளியிட்ட பத்திரிகைகளே மேற்குறிப்பிட்ட விவரங்களையும் தெரிவித்தன. இச்செய்தி காட்டுத் தீயாக முழு அமெரிக்காவுக்குமே பரவியது.

திருடனைக் கண்டுபிடிக்கும் வேட்டையில் குதித்த உளவுத்துறையினர் விசாரணைகளை முடுக்கிவிட்டனர்.

திருடன் எந்த இடத்தில் குதித்தான் என்பதைக் கண்டறியவே முதலில் முயற்சித்தனர். சம்பவம் இடம்பெற்றக் கொண்டிருந்த சமயம் விமானமோட்டிகளுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை.

திருடன் கீழே பாய்ந்த பின்புதான் விமானமோட்டிகளுக்கு சிப்பந்திகளால் இதுகுறித்து தெரிவிக்கப்பட்டது. அதன்படி நண்பகல் 12.30 மணியளவில்தான் அத்திருடன் தனது வேட்டையை முடித்துவிட்டுப் பாய்ந்திருந்தான்.

நண்பகல் 12.30 மணியளவில் விமானம் பறந்துகொண்டிருந்த இடத்தை விமானமோட்டிகள் உளவுத்துறையினருக்குத் தெரிவித்தனர். அது இன்டியானா என்றழைக்கப்படும் ஓர் இடம். உடனே உளவுத்துறையினர் அந்த இடத்துக்கு விரைந்து சென்று விசாரணைகளை நடத்தினர்.

சில நாட்கள் கழிந்தன. ஒருநாள் ஒரு சிறுவன் கிழிந்த நிலையில் காணப்பட்ட பரசூட் ஒன்றுடன் விளையாடிக்கொண்டிருந்ததை உளவுத்துறையினர் கண்டனர்.

உளவுத்துறையினர் அச்சிறுவனைப் பிடித்து ''இது எப்படி கிடைத்தது?'' என்று விசாரித்தபோது இதைத் தனது தந்தை தந்தார் என அவன் கூறினான்.

விமானத்திலிருந்து இறங்குவதற்காக பயன்படுத்தப்படும் தரமுயர்ந்த பரசூட் வகையைச் சேர்ந்தது அது. விமானத்தில் இருந்து குதித்த திருடன் கிழிந்த நிலையில் இதை விட்டுச் சென்றிருக்கலாம் அல்லது அச்சிறுவனின் தந்தைக்கு இதோடு தொடர்பிருக்கலாம் என்றெண்ணிய உளவுத்துறையினர் சிறுவனின் தந்தையை விசாரித்தனர்.



''1972 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26 ஆம் திகதி பின்நேரம் 5 மணியளவில் நான் வயலுக்குச் சென்றபோது வயலில் இது கிழிந்த நிலையில் கிடந்தது. இதைச் சாதாரண பலூன் என்று நினைத்து எனது மகனிடம் கொடுத்தேன்'' எனவும் அந்த விவசாயி கூறினான்.

1972 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26 ஆம் திகதிதான் இந்த விமானக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது. திருடன் பாய்ந்து தப்பிய இந்த இன்டியானா என்ற இடம் ஒரு விவசாயக் கிராமம்.

இதையடுத்து அந்த இடத்திலிருந்து சற்றுத்தூரத்தில் தேநீர்க்கடை ஒன்றிலும் உளவுத்துறையினர் விசாரணை செய்தனர். சம்பவத்தினத்தன்று முன்பின் தெரியாத அடர்ந்த தாடி வைத்த ஒருவன் இக்கடைக்கு வந்து சாப்பிட்டு விட்டுச் சென்றதாக அக்கடைக்காரர் தெரிவித்தார். பிரயாணப்பை ஏதும் அவனிடம் இருந்ததா எனக் கேட்டபோது வெறும் ஆளாகவே வந்திருந்தான் என அவர் மேலும் தெரிவித்தார்.

தற்பாதுகாப்புக்காக பணத்தை இங்கே தான் எங்கேயாவது மறைத்து வைத்துவிட்டுச் சென்றிருப்பான் என உளவுத்துறையினர் ஊகித்தனர். தேடுதலையும் நடத்தினர். ஆனால் பணமோ, நகையோ அகப்பட்வில்லை. இருந்தும் அந்த இடத்தை இரவும் பகலுமாக அவதானித்துக் கொண்டே வந்தனர்.

இச்சம்பவம் இடம்பெற்று 15 நாட்கள் கழிந்து ஒரு நாள் இரவு அந்த வயல் பகுதிக்கு ஒருவன் வந்துகொண்டிருந்தான். உஷாராகிய உளவுத்துறையினர் அந்த இருட்டில் அவனைப் பின் தொடர்ந்தனர்.

அவன் நாலா பக்கமும் பார்த்துவிட்டு அந்த வயல்காட்டின் ஒரு புதருக்குள் கையை விட்டுக் குழி ஒன்றைத் தோண்டினான். அதனுள் இருந்து கறுப்புப் பையொன்றை எடுத்தான்.

அதனை எடுத்துக்கொண்டு திரும்புகையில் உளவுத்துறையினர் அவனைச் சுற்றி வளைத்துவிட்டனர். பையைப் பிரித்துப் பார்த்தனர். அதனுள் பெருந்தொகையான பணமும், நகைகளும் காணப்பட்டன.

திருடன் கையும் மெய்யுமாக அகப்பட்டுவிட்டான். ஆனால் உண்மையில் அவன் வயது முதிர்ந்தவன் அல்லன். திருடுவதற்காக அவ்வாறு வேடம் பூண்டிருந்தான்.

அவனுக்கு வயது 40 இற்கு உள்ளேதான்.

மறுநாள் காலை நீதிமன்றத்தில் அவன் ஆஜர் செய்யப்பட்டான். இவ்விமானத் திருட்டு உட்பட இன்னும் பல சிறு சிறு கொள்ளைகளில் தான் ஈடுபட்டிருந்ததாகவும் அவன் கூறினான்.


நீதிமன்றில் நிறுத்தப்பட்டு அவன் 10 வருடத்துக்கு சிறையிலிடப்பட்டான்.

எம்.ஐ.முபாறக்

# கண்டங்கள் நகருகின்றன

கண்டங்கள் நகருகின்றனவாம். ஆம் ஆண்டொன்றுக்கு 2 முதல் 5 சதம மீற்றர்வரை கண்டங்கள் நகருகின்றன என்று நிபுணர்கள் கணித்துள்ளனர்.

ஒருவரின் காலத்திலே ஐரோப்பாவிலிருந்து வடஅமெரிக்கா ஏறக்குறைய இரண்டு மீற்றர் அளவு தூரத்துக்கு நகர்ந்து சென்று விடும். தென் அமெரிக்காவின் கீழ்க் காரையோரத்தை ஆபிரிக்காவின் மேற்குக்கரையோரத்துடனும் ஐரோப்பாவின் மேற்குக்கரையோரத்தை வட அமெரிக்காவின் கீழ்க்கரையோரத்துடனும் இணைக்க முடிவது போலக் காணப்படுகிறதல்லவா? உலகப் படத்தை அவதானித்தால் இவை தென்படும்.



200 மில்லியன் வருடங்களுக்கு முன் அனைத்துக் கண்டங்களும் இணைந்து பெரியதொரு நிலத்திணிவாக இருந்ததற்கான ஆதாரங்களையும் நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.

கண்ட நகர்வு சம்பந்தமாக 'தகடோட்டக் கொள்கை' (Place tectonic theory) முன்வைக்கப்பட்டுள்ளது. புவியின் மேலோட்டிலேயே (Crust) கண்டங்களும், சமுத்திரங்களும் அமைந்துள்ளன.

மேலோட்டுக்கு கீழே முடுபாறைப் (Mantle) பகுதி உள்ளது. அதன் கீழே புற, அக உள்ளீடுகள் (Outer core, inner core) அமைந்துள்ளன. புவியின் உள்ளே செல்லச் செல்ல பாறைப்பொருட்களின் அடர்த்தி அதிகரித்துச் செல்கிறது. இதனால் புவிமேலோட்டுப் பகுதி அதன் அடுத்த பகுதியாகிய அடர்த்தி கூடிய முடுபாறைப் படையின் மேல் மிதக்கிறது. மிதப்பவை யாவும் நகரக் கூடியவைதான்.

# கூட்டு ஒப்பந்தத்தால்....

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

2,000ரூபா கடனை நீங்கள்தான் கட்டவேண்டும், ப ாக்கி சம்பளத்துக்கும் ஊழியர் சேமலாபநிதி கிடைக்காது என்ற உண்மையை இவர்கள் தோட்டத் தொழிலாளர்களிடம் கூற இவர்களுக்கு தைரியம் இல்லை. இந்தக் கூட்டு ஒப்பந்தத்தால் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகளை விட தீமைகளே அதிகம்.

*அரசாங்கம் வழங்கும் சம்பள உயர்வுகளையோ அல்லது மானியங்களையோ இந்த இரண்டு வருட காலத்துக்கு தொழிலாளர்கள் கேட்க முடியாது.

*சம்பள நிர்ணய சபையின் முன் சென்று சம்பளம் கேட்க முடியாது.

*வாழ்க்கைச் செலவு அதிகரிப்புப் பற்றிப் பேசவே கூடாது.

*இப்பொழுதே யானைப்பசிக்கு சோளப் பொரி போன்று போட்டுள்ளனர். விலைவாசி விஷம் போல் ஏறிக்கொண்டே போகிறது. இன்னும் இரண்டு வருட காலத்தில் நிலைமை இன்னும் மோசமாகவே இருக்கும். அப்போதும் கூட பட்டினியால் வாடினாலும் வாய் திறக்க முடியாது நஞ்சு குடித்து இறக்க வேணும். சம்பள உயர்வு கேட்கக் கூடாது. அது தான் இ.தொ.காவின் ஒப்பந்தம்.

தொழிலாளர்களுக்கு துரோகம் இழைக்கும் இந்த கூட்டு ஒப்பந்தம் அவசியம் தானா? அதை கிழித்து எறிய வேண்டும். கட்சி பேதங்களை மறந்து ஒன்றுபடுவோம், வீதிப்போராட்டம் நடத்துவோம், சட்ட நடவடிக்கை எடுப்போம் என மலையக மக்கள் முன்னணித் தலைவர் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

மலையக தொழிற்சங்கவாதிகளே உங்களுக்கு எல்லாம் முதுகெலும்பு இல்லையா? இ.தொ.காவின் சர்வாதிகாரத்துக்கும், சண்டித் தனத்துக்கும் பயந்து அவர்கள் பின் மண்டி இடுவது ஏன்?

தனித்தனியாக சந்தாவை சேர்த்து வாயில் போட்டுக் கொள்கின்றீர்களே! உங்களுக்கு வாய்க்கரிசி போடும் தொழிலாளர்களுக்காக துணிச்சலாக வாய் திறக்கமாட்டீர்களா?

உங்களுக்கும் கொமிஷன் கிடைத்துவிட்டதா?

அவர் சொன்னார். இவர் சொன்னார் என்று அறிவிழந்து தடுமாறாமல் உங்களுடைய சுய சிந்தனையை தட்டி எழுப்புங்கள். தொழிலாளர்களின் வயிற்றில் எரியும் நெருப்பில் குளிர் காயாமல் அதனை அணைக்க நடவடிக்கை எடுங்கள்.

எங்களுக்கும் வெட்கம், மானம், ரோஷம் எல்லாம் உண்டு . நாங்கள் ஆறறிவு படைத்த மனிதர்கள்தான். மந்தைகள்போல் பின் செல்ல மாட்டோம் என்று நிமிர்ந்து நில், துணிந்து செய். அப்போதுதான் உழைக்கும் தொழிலாளர் சமூகம் உங்களை மன்னிக்கும். இல்லையேல் அவர்களுடைய சாபம் உங்களை எரித்து சாம்பலாக்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தன் பதில்கள்




எஸ்.எப்.சஜீனா– மருதமுனை.

**கேள்வி:-** பித்தனாரே வாழ்க்கைக்குப் பணம் தான் அவசியம் என்கிறேன் நான். ஆனால், எனது தந்தையோ, படிப்பறிவே அவசியம்என்கிறார். உங்கள் தீர்ப்பு என்ன?

**பதில்:–** படிப்பு இல்லாமல் பணத்தை எப்படிச் சம்பாதிப்பது, களவு எடுப்பது என்றாலோ, பிச்சை எடுப்பது என்றாலோ– எடுக்க– எடுத்ததைக் கணக்குப் பார்க்க– அவைகளைப் பாதுகாக்க–படிப்பு அவசியமல்லவோ... எனவே படிப்பறிவே வாழ்க்கைக்கு அவசியம் என்று கூறி எனது தீர்ப்பை முடிக்கிறேன்.

ச.சுமங்கலி–வெள்ளவத்தை.

**கேள்வி:-** பித்தா! கடைசியாக தனுசுக்கும் - ரஜினியின் மகள் ஐஸ்வர்யாவுக்கும் திருமணம் முடிவாகிவிட்டதே. ஏன் இப்படி திடீர் முடிவு?

**பதில்:–** ரஜனி மகள் கொஞ்சம் ஜாலிரைப்பாம். அடிக்கடி ஆண் நண்பர்களை மாற்றிக்கொண்டு ரஜினிக்குப் பெரும் தலையிடியாக இருந்தாராம். முன்னர் சிலம்பரசன். பின்னர் தனுஷ். இடையில் பலர் என்று தலையிடியாக இருந்தாராம். இதனால் ரஜினி சென்னைக்கு வெளியே வீடொன்றை வாங்கி அங்கே நாள் முழுவதும் தண்ணியிலே மிதந்தாராம். பார்த்தார்கள் பெரியவர்கள். தந்தையையும்–மகளையும் வழிக்குக் கொண்டு வர ஒரு வழி திருமணம் தான் என்று முடிவு செய்துவிட்டார்கள். மாட்டிக்கொண்டவர் தனுஷ். முளைத்து மூன்று படம் கூட இன்னும் ஒழுங்காக ஓடவில்லை. அதற்குள் திருமணம் செய்துகொள்ளப்போகிறார். என்னாகுமோ... ஏதாகுமோ.

தி.அமலன்– உடுத்துறைவடக்கு.

**கேள்வி:-** கஞ்சத்தனமாய்த்திரியும் கன்னியரைப் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

**பதில்:–** பெண்களுக்குக் கஞ்சத்தனம் இருக்க வேண்டியது தான். அது போடுகிற சட்டையிலே இருக்கக் கூடாது. பார்க்கிற பார்வையில், பேசுகிற பேச்சில் இருந்தால் போதும்.

மு.சிவரூபன்–பாலிநகர்.

**கேள்வி:-** பித்தா! நீர் நெடுகவும் தாய்க் குலத்தை தப்பாகப் பேசுகிறீரே? உம்மைப் பெற்றது யார்?

**பதில்:–** இல்லையே... நான் எப்போதும் தப்பாகப் பேசுவது மனைவி குலத்தையும், மகளிர் குலத்தையும் தான். தாய்குலத்துக்கு என்றும் நான் தலைவணங்கியவன் தான். மனைவி குலத்தையும், மகளிர் குலத்தையும் பற்றி அடிக்கடி தப்புப் பேச்சுப் பேசுவது எதனால்? அவர்கள் மீதுள்ள கோபத்தினால் அல்ல. தப்புப் பண்ணும் அவர்கள் இனி மேலாவது தப்பில்லாமல் நடக்க வேண்டும் என்ற ஆதங்கத்தில் தான்.

எஸ்.சங்கிலி–கிளிநொச்சி.

**கேள்வி:-** பித்தா பேனா நட்புக் காதலை நம்பலாமா?

**பதில்:–** பார்க்காமல்–பேசாமல் காதலிப்பது எல்லாம் சினிமாவுக்குத்தான் சரி. நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்துவர மாட்டாது என்பது எனது அபிப்பிராயம்.

ந.நவலோகன்– இராமநாதபுரம்.

**கேள்வி:-** பித்தன் சார்! திறமைகளுக்கு முத்திரை பதித்த பாடகர்கள் பலர் இன்றும் இருக்கிறார்கள். குறிப்பாக மதுரக்குரலோன் மனோ போன்றவர்களுக்கு இப்போ சந்தர்ப்பம் கொடுத்துப் பாடவிடுவதில்லையே ஏன்?

**பதில்:–** தனக்கென ஒரு பாணியை வகுத்து அதன்படி தமது திறமைகளை வெளிக்கொணர்பவர்களே வாழ்க்கையில் முன்னேற முடியும். பாடகர் மனோவைப் பொறுத்தவரையில் அவர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் குரலைப்பின்பற்றிப் பாடியவர். எஸ்.பி.பிக்கும், இசையமைப்பாளர் இளையராஜாவுக்கும் இடையில் மோதல் வந்தபோது, எஸ்.பி.பியை ஓரங்கட்டுவதற்காக மனோ அறிமுகப்படுத்தப்பட்டார். ஆனால், அந்த மோதல் நிலைக்கவில்லை. அதனால், மனோவாலும் நிலைக்க முடியவில்லை. இப்போதும் அவர் மேடையிலே இசை நிகழ்ச்சிகள் செய்து வருகிறார். அதிலும் எஸ்.பி.பி.யின் பாடல்கள் தான் பாடி வருகிறார். தனது பாணியை மாற்றினால் எதிர்காலம் உண்டு. ஆனால், அந்த நோக்கம், சிந்தனை மனோவிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

யோ. சசிகரன்– அச்சுவேலி தெற்கு.

**கேள்வி:-** பித்தா! விவாகரத்தை கொண்டாட்டங்கள் போன்று சிறப்பாகக் கொண்டாடும் பெண்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?



**பதில்:–** எங்களுக்கு இருந்த கட்டுப்பாடுகள் எல்லாம் விலகிவிட்டது. நாங்கள் இனி சுதந்திரப் பறவைகள். எனவே, இனி எதற்கும் நாங்கள் ரெடி...நீங்கள் யாராவது ரெடியா என்று அறிவிக்கும் காண்டமாக்கும்.

உ.ஜெயந்தினி–மருதங்கேணி வடக்கு.

**கேள்வி:-** அன்புடன் பித்தா! இங்கிருந்து வெளிநாடு சென்று திரும்பி வரும் எம்மவர்க்குக் கிடைக்கும் மதிப்பு - இங்கு எமது தாய்த்திருநாட்டில் தம் கையையே நம்பி இரத்தத்தை வியர்வையாக்கும் உழைப்பாளிகளுக்குக் கிடைப்பதில்லையே ஏன் பித்தா?

**பதில்:–** நம்மவர்கள் எவ்வளவு தான் மாய்ந்து மாய்ந்து உழைத்தாலும் ரூபாவையும், சதத்தையும் தான் கொண்டு வருகிறார்கள். ஆனால், வெளிநாட்டுக்காரர்கள்– டொலர்களையும்– பவுண்களையும்– யூரோக்களையும்– பிராங்குகளையும் அல்லவா கொண்டு வருகிறார்கள். ஆனால், ஒன்று தன் கைகையே நம்பி தமது இரத்தத்தையே வியர்வையாக்கும் உழைப்பு என்பது நம் நாட்டவர்களுக்கு மட்டும் சொந்தமல்ல. வெளிநாட்டவர்களுக்கும் இது பொருந்தும்.

சி.ஆதித்– ஆழியவளை.


**கேள்வி:-** ஒருவனுக்கு ஒன்றன் பின் ஒன்றாகச் சோதனைகள் வந்தால் அவனுக்கு தாங்கள் என்ன ஆறுதல் கூறுவீர்கள்?

**பதில்:–** சோதனைகள் தான் வெற்றியின் படிக்கட்டுக்கள். உளியின் வலியைத் தாங்கிக் கொண்டால் தான் அழகான சிலையாக ஒரு கல் மாற முடியும்.

தீட்டும்போது ஏற்படும் ரணங்களை தாங்கிக் கொண்டால் தான் ஒரு வைரம் ஜொலிக்க முடியும்.

இன்று உலகின் முன்னணியில் இருக்கும் எல்லோரும் பல சோதனைகள்– பல தோல்விகளைத் தாங்கித் தாண்டி வந்தவர்கள் தான். எனவே சோதனைகளும்– வேதனைகளும் எமது வாழ்க்கையில் ஒரு அங்கம் என்று நினைத்து துணிவோடு முகம் கொடுத்தால்– அவை வெற்றிப்படிக்கட்டுக்கள்.

**கேள்வி:-** அன்பின் பித்தா! எனது நண்பர் ஒவ்வொரு நாளும் வெள்வால் இறைச்சி சாப்பிடுகிறான். இது பற்றி



என்ன நினைக்கிறீர்?

**பதில்:–** இரவிலே தலை கீழாகத் தொங்கியபடியே தான் நித்திரை கொள்கிறாரோ உமது நண்பர்?

ஸ்ரீ.விஜி– புளியங்குளம்.

**கேள்வி:-** அன்பின் பித்தா! நீர் திருமணமானவரா? அல்லது திருமணமாகாதவரா? திருமணமானவராயின் உமது மனைவிக்கு அன்பால் அடிப்பீரா? அல்லது சொல்லால் அடிப்பீரா?

**பதில்:–** ஐயைய்யோ... நான் அடிக்க எல்லாம் போகமாட்டேன். வாங்கிக் கட்டுவேன்.

க. றமா– கரந்தாய்.

**கேள்வி:-** பித்தா! நீங்கள் இப்போது வந்த புதுப்படங்கள் பார்த்தீரா? உமக்கு எந்த நடிகையைப் பிடிக்கும்?

**பதில்:–** அண்மையில் வந்தவர்களில் எவரும் ஒட்டவில்லை.. வந்திருப்பவர்களில் ஆட்டோகிராப் கோபிகா பரவாயில்லை. மற்றபடி எல்லாம் ஒரு ஷேப்பாக இல்லையே!

க.ஜனார்த்தனன்– அன்புவழிபுரம்.

**கேள்வி:-** பித்தா, வாழ்க்கை ஒரு போராட்டமா? இல்லை பூந்தோட்டமா?

**பதில்:–** போராட்டங்கள் நிறைந்த பூந்தோட்டம். இதனை விலாவாரியாக விளங்கிக் கொள்ள வேண்டுமானால் 'ஆட்டோகிராப்' படத்தில் வரும் 'ஒவ்வொரு பூக்களுமே..' என்ற பாடலை வரிவரியாகக் கேளும். வாழ்க்கையின் போராட்டம்– அதனை வெற்றி கொள்ளும் வழி எல்லாம் கவிதையாக வருகிறது.

க.உஷா–கரந்தாய்.

**கேள்வி:-** பித்தா, பெண்களுக்குப்பின்னால் வால் பிடிக்கும் ஆண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

**பதில்:–** ஜொள்ளுப் பார்ட்டிகள். வழியல் மன்னர்கள். வேலை மினக்கட்டதுகள். தொழில் இல்லாததுகள்.

ச.சஙி– வட்டக்கச்சி.

**கேள்வி:-** ஒரு ஆளைக் காதலித்துக் கொண்டு இன்னொரு ஆளைக் காதலித்து அவரிடம் பணம் பறிக்கும் பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

**பதில்:–** ஆசைக்கு ஒன்று, ஆஸ்திக்கு ஒன்று என்று பிள்ளைகள் பெற்றுக்கொள்வதற்குக் கூறுவார்கள். இப்போ காதலுக்கும் அது பொருந்தும் போல் தெரிகிறது.



ஜெ.சுஜிதா– கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலை.

**கேள்வி:-** அன்புப் பித்து மாமா! எல்லா நாடுகளிலும் எவ்வளவோ சாதனைகளையும், கண்டுபிடிப்புகளையும் செய்கிறார்கள். ஏன் இலங்கையைப் பொறுத்தவரையில் விஞ்ஞானிகளே இல்லையா? அவர்கள் படைத்த சாதனைகள் ஒன்றும் விளம்பரத்துக்கு வரவில்லையே காரணம் என்ன?

**பதில்:–** மருமகளே சுஜிதா.. எம்மவர்களில் சாதனையாளர்கள் ஏராளம் பேர் இருக்கிறார்கள். வெளிநாடுகளில் மிகப் பெரிய நிறுவனங்கள் வெளியிடும் கிரடிட் கார்ட்டுக்கள் போல் போலியாகத் தயார் செய்கிறார்கள், ரெலிபோன்களில் போடும் நாணயங்களின் ஓரத்தில் நூலைக் கட்டி விட்டு அந்த நாணயத்தை போட்டுத் தொலைபேசி கதைத்துவிட்டு நூலைப்பிடித்து இழுத்து நாணயங்களை வெளியே எடுக்கிறார்கள். இது போன்ற ஏராளமான சாதனைகள் படைக்கிறார்கள். ஆனால், எல்லாவற்றையும் ஏதாவது தில்லு, முல்லுகளுக்குள் பயன்படுத்துகிறார்கள். எம்மவர்களுக்குப் புதிதாக கண்டுபிடிக்கும் மூளை இருக்கிறது. ஆனால், குறுக்கு வழியில் அதிகம் சம்பாதிப்பது எப்படி என்பதற்குத் தான் அதனைப் பயன்படுத்துகிறார்களே ஒழிய நல்ல வழிகளுக்கு அல்ல.

சி.நித்தியா– கனகாம்பிகைக்குளம்.

**கேள்வி:-** டியர் பித்தா! நீர் ஜோக் மன்னனாமே... எனது பெயருக்கு ஜோக் ஒன்று அவிட்டு விடும் பார்ப்போம்?



**பதில்:–** அவனுக்கு நீண்ட நாளாக விபத்து ஒன்றைப் பார்க்க வேண்டும் என்று ஆசை. ஒரு நாள் வீதி வழியாகப் போய்க் கொண்டிருந்தான். அந்த வீதியில் ஏதோ விபத்து நடந்து வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது. யாரோ அடிபட்டுக்கிடக்கிறார்கள் என்பதை அவன் புரிந்துகொண்டான். எப்படியாவது அந்தக் கூட்டத்துள் நுழைந்து விபத்தைப் பார்த்து விட ஆசைப்பட்டான். ஆனால், கூட்டத்துக்குள் நுழைய முடியவில்லை. அவனுக்குத் திடீரென்று ஒரு ஐடியா வந்தது. "சற்று ஒதுங்குங்கள்... ஒதுங்குங்கள்... அந்த விபத்திலே அடிபட்டு இரத்தம் கொட்டக் கொட்டக்கிடப்பது எனது தம்பி. அவனைக் காப்பாற்றுவதற்கு எனக்கு வழிவிடுங்கள்." என்று கத்தினான்.

அங்கேகூடி நின்ற கூட்டத்தினர் அவனை ஒருமாதிரியாகப் பார்த்தனர். ஆயினும், அவசரமாக வழி விட்டனர். கூட்டத்தை விலக்கிக் கொண்டு பார்த்த அவன் அதிர்ச்சியடைந்தான்.

அங்கே அடிபட்டு இரத்தம் ஒழுகக் கிடந்தது ஒரு நாய்.

கே.சந்திரா– கொடிகாமம்.

**கேள்வி:-** பித்துக் கண்ணா! தாய்க்குப்பின் தாரம் என்று சொல்கிறார்களே? தாரத்துக்குப் பின்?

**பதில்:–** சின்ன வீடு.

## பித்தனின் கேள்வி

**கேள்வி:–** அரசியல் கட்சி ஆரம்பிக்க எத்தணிக்கும் கருணாவைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

## வாசகர்கள் பதில்கள்

சதா– நல்லூர்.

விழுந்தவன் மீசையில் மண் ஒட்டாத கதையாக இருப்பதற்காக இவ்வாறு கருணா தரப்பு செயற்படுகிறது.

நவா– சாவகச்சேரி.

கருணா எதைச் செய்தாலும் அது மாற்றுக் கட்சியினருக்கு மட்டுமே சந்தோஷத்தைக் கொடுக்கும். வேறு எவரும் இதில் கவனம் எடுக்கப் போவதில்லை.

ரீ. அஞ்சலோ– கல்முனை.

மாரித்தவக்கைகள் போல் காலத்திற்கு காலம் கத்திவிட்டுப் போகும் ஜே.வி.பியினரைப் போலவே இவர்களும் இருக்கின்றார்கள்.

எஸ்.நிஷா– வவுனியா.

அரசியல் என்றால் என்னவென்று தெரியாவர்கள் எல்லோரும் அரசியலுக்கு வர எத்தனித்தால் நாட்டின் நிலை என்னாவது? இதைப்பெல்லாம் ஜனாதிபதி சிந்திக்காது செயற்படுவதுதான் கவலைதரும் விடயம்.

பாபு– கொழும்பு.

கனை எடுக்கப்படாது காணப்படும் சிலரது செயற்பாடுகள்தான் இது. விரைவில் அவை அடங்கிவிடும்.

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:–

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான – குறும்பான யதார்த்தமான – பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை நவம்பர் 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



**கேள்வி:–** பித்தா பெண்கள் ஆண்களை எப்படி நக்கல் பண்ணுவார்கள்?

**பதில்:–** சொட்டைத்தலையன்.. சோம்பேறி... பொம்புளைப் பொறுக்கி... என்று எத்தனை எத்தனையோ இருக்கே?

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு– 14.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# பேரினவாதிகளின் சலுகைகளுக்கு சோரம்போகும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள்!

முஸ்லிம் சமூகம் இன்று ஓர் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பலத்தை உடைப்பதற்காக பேரினவாத சக்திகள் மேற்கொண்டு வருகின்ற சதி முயற்சிகளுக்கு முஸ்லிம் அரசியல்வாதிகளே துணை போகின்றனர். இது மிகவும் ஆபத்தானது – முஸ்லிம்களின் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கியுள்ளது.

எலும்புத் துண்டுகளுக்காக நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு அலைவது போன்று, சிலர் பதவிகள், சொகுசுகள் மற்றும் சலுகைகளுக்காக பேரினவாதிகளின்


ஜனாதிபதி

காலடியில் மண்டியிட்டுக் கிடக்கின்றனர். அதற்காக சமூகத்தைக் காட்டிக் கொடுக்கவும் தயாராகிவிட்டனர்.

தனது அரசில் எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்வதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு, அந்த அரசியல் வாதிகளின் ஆதரவு ஓர் இன்றியமையாத அவசியத் தேவையாக இருக்கிறது. அதற்கான காய் நகர்த்தல்களை ஜனாதிபதி வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றார்.

அரசுப் பலத்தை அதிகரித்து – தனது அரசியல் இருப்பை உறுதிப்படுத்திக்கொள்வதில் ஜனாதிபதி காட்டி வருகின்ற அக்கறையும் அதற்கான திருகுதாள முயற்சிகளும் வெட்ட வெளிச்சத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன.

## மு.கா.ஆதரவு தேவை

கடந்த பொதுத் தேர்தல் முடிந்த கையோடு நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டுவதற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு கோரப்பட்டபோதிலும், அதற்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், சுதந்திரக் கூட்டமைப்பு அரசுடன் இணைவதில்லை என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார். அதற்கு சில காரணங்களும் இருந்தன.

பொதுத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் முஸ்லிம் காங்கிரஸ் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டமை, அதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருந்து முஸ்லிம் காங்கிரஸ் நான்கு தேசியப்பட்டியல் எம்.பிக்களைப் பெற்றுக்கொண்டமை, சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் தமது பரம விரோதிகளான பேரியல் அஷ்ரப், அதாவுல்லா ஆகியோர் முக்கிய அமைச்சுப் பதவிகளை வகிக்கின்றமை, ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் 11 ஆவது நாடாளுமன்றத்தில் தன்னை அமைச்சுப் பதவியிலிருந்து தூக்கி எறிந்தமை.

இவ்வாறான காரணங்களினால் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுடன் இணைவதை மு.கா.தலைவர் ஹக்கீம் தவிர்த்துக் கொண்டார். எனினும் மு.கா. எம்.பிக்களில் சிலர் அரசுடன் சேர்ந்து கொள்ள முன்வருமாறு தலைவர் ஹக்கீமை வற்புறுத்தி வந்தனர். ஆனால் அவர் இணங்கி வரவில்லை.

மு.கா. எம்.பிக்களான ஹுஸைன் பைலா, றிஷாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத், அமீரலி சிஹாப்தீன், பைஸால் காஸிம் ஆகியோரே அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொள்ள வேண்டும் என நெருக்குதல் கொடுத்து வந்தவர்கள் என கட்சி வட்டாரங்களில் பேசப்பட்டது. ஊடகங்களில் செய்திகளும் வெளிவந்தன.

## குமாரி குரே விவகாரம்

அரசுடன் இணைவதற்கு தலைவர் ரவூப் ஹக்கீமை அடிபணியச் செய்வதற்காக குமாரி குரே விவகாரமும் பயன்படுத்தப்பட்டது. அதன் பின்னணியில் அரசின் முக்கிய அமைச்சர்களும், மு.கா.எம்.பிக்கள் சிலரும் இருந்தனர் எனக் கூறப்பட்டது.

றிஷாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத் ஆகிய இருவரும் குமாரி – ஹக்கீம் விவகாரத்தை வைத்து அரசின் முக்கிய அமைச்சர்களுடன் சேர்ந்து கட்சித் தலைமைத்துவத்திற்கெதிராக சதி செய்தனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

அதனால் முஸ்லிம் அரசியல் அரங்கில் ஒரு பூகம்பமே வெடித்தது. முஸ்லிம் சமூகம் தலைகுனிந்தது. ஏட்டிக்குப் போட்டியாக வீடியோப் பதிவுகள் ஒளிபரப்பப்பட்டன. பரஸ்பரம் இரு தரப்பினரும் ஏசிப்பேசி – குற்றம் சுமத்திக்கொண்டனர்.

இறுதியில் றிஷாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத் ஆகிய இரு எம்.பிக்களையும் கட்சியிலிருந்து விலக்குவது என முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் பீடம் கூடித் தீர்மானித்தது. கட்சித் தலைமையைப் பலவீனப்படுத்துவதற்காக அரசுடன் சேர்ந்து இரு எம்.பிக்களும் சதி செய்தனர் என்பதற்குப் போதுமான சான்றுகள் இருக்கின்றன எனத் தெரிவித்தே அரசியல்பீடம் அத்தீர்மானத்தை மேற்கொண்டது.

முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி என்.எம்.சஹீட் தலைமையிலான ஒழுங்காற்றுக் குழுவே அதற்கான பரிந்துரையைச் செய்திருந்தது.

## ஜம்மியத்துல் உலமா முயற்சி

எனினும் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட எம்.பிக்கள் இருவரும் நீதிமன்றம் சென்று, கட்சியின் முடிவை செல்லுபடியற்றதாக்கி, கட்சி உறுப்புரிமையை மீள உறுதிப்படுத்திக் கொண்டனர். றிஷாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத் ஆகியோருடன் ஹுஸைன் பைலாவுக்கும் அதே தீர்ப்புக் கிடைத்தது. முஸ்லிம் காங்கிரஸ் கொள்கையை மீறி – அரசுடன் இணைந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே; ஹுஸைன் பைலா கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.


றிஷாத் பதியுதீன்

இந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும் போதே அகில இலங்கை ஜம்மிய்யத்துல் உலமா, முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கும், றிஷாத், நஜீப் ஆகியோருக்கும் இடையே சமரச முயற்சி ஒன்றை மேற்கொண்டது. அதன் பிரகாரம் இரு தரப்பினரும் பரஸ்பரம் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் கைவிட்டு சமூக நலன் கருதி ஒற்றுமைப்படுவதற்கு ஜம்மிய்யத்துல் உலமா முன்னிலையில் இணக்கம் காணப்பட்டிருந்தது.

ஆகஸ்ட் 16 ஆம் திகதி ஜம்மியத்துல் உலமா முன்னிலையில் இடம் பெற்ற நேரடிப்பேச்சுக்களின்போது இணக்கம் காணப்பட்ட விடயங்களை உள்ளடக்கியதாக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று தயாரிக்கப்பட்டு, ஹக்கீம், றிஷாத், நஜீப் ஆகிய மூவரும் அதில் கையெழுத்திட்டனர் றிஷாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத் ஆகியோரைக் கட்சியிலிருந்து விலக்குவது என மேற்கொண்ட தீர்மானத்தை முஸ்லிம் காங்கிரஸ் வாபஸ் பெற்றுக்கொள்ளும் எனவும், அதேபோன்று கட்சிக்கெதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தவழக்கை இரு எம்.பிக்களும் வாபஸ்பெறுவர் என்வும், தமக்கிடையிலான ஒற்றுமை குறித்த கூட்டறிக்கையை மறுநாள் (2004.08.17) நாடாளுமன்றத்தில் மூவரும் வெளியிடுவர் எனவும் அந்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## றிஷாதின் நயவஞ்சகம்

ஆனால மேற்படி ஒற்றுமைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டவர்கள் (றிஷாத், நஜீப்) மறுநாள் பொழுது விடிந்து நீதிமன்றம் செல்லாது, அரசின் முக்கிய புள்ளிகளைச் சந்தித்து மந்திராலோசனையில் ஈடுபட்டனர் எனக்கூறப்பட்டது.

''மு.கா.தலைவர் ஹக்கீமுடன் சேர வேண்டாம், வழக்கை வாபஸ்பெறவும் வேண்டாம் தங்களுக்கு சாதகமாகவே எல்லாம் நடக்கும். நிறையப் பணம் கிடைக்கும் அமைச்சுப் பதவிகளுக்கும் உத்தரவாதம் தருகிறோம்'' என அமைச்சர் மங்கள சமரவீர உறுதியாகத் தெரிவித்தாராம்.

அதனால் முஸ்லிம் காங்கிரஸ் – முஸ்லிம் சமூகம் என்பதை விட அவர்களுக்கு பதவி மோகம் மேலோங்கியிருந்தமையால் ஜம்மியத்துல் உலமாவின் சமரச முயற்சிகளை உதறித் தள்ளிவிட்டு, சுயநல அரசியல் பாதையில் பயணித்தனர்.

எந்த நோக்கத்திற்காக அரசுடன் இணைந்து கொள்ள வேண்டும் என்று றிஷாத் அணியினர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமை வற்புறுத்தி வந்தனரோ, அந்த நோக்கத்தை அடைந்து கொள்ள வேண்டும் என்பதில் அவர்கள் வெறியுடன் செயற்பட்டு வந்தனர்.

முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்து கொள்ளுமானால்; வன்னிப்புனர்வாழ்வு அமைச்சு தனக்குக் கிடைக்கும் என்பதனாலேயே; றிஷாத் பதியுதீன், தலைவர் ஹக்கீமை இணங்கச் செய்ய பிரயத்தனம் மேற்கொண்டார். அது கைகூடாதனாலேயே அவர் மாற்று வழிகளைக் கையாள முற்பட்டார்.

மு.கா.தலைவர் ஹக்கீமுக்கு; மங்கையருடன் தகாத உறவு இருந்து வருகிறது என்ற குற்றச்சாட்டு, இன்று நேற்று வந்த தொன்றல்ல; அது கடந்த பல வருடங்களாக இருந்து வருகின்ற ஒரு குற்றச்சாட்டாகும். ஆனால், றிஷாத் எம்.பி கடந்த ஏப்ரல் பொதுத் தேர்தலைத் தொடர்ந்தே குமாரி குரே என்ற பெண்ணுடன் ஹக்கீமைத் தொடர்படுத்தி – வீடியோப்பதிவை ஒளிபரப்பி பொதுவாக முஸ்லிம் சமூகத்தையே மானபங்கப்படுத்தியிருந்தார். அது பதவி ஆசையின் உச்சக் கட்ட வெளிப்பாடேயென்று கூறினால் மிகையாகாது.

முதலில் அன்பான வேண்டுகோள், பிறகு மிரட்டல், அதன் பின்னர் சதித்திட்டம் என்கின்ற அடிப்படையில் றிஷாத் பதியுதீன், தலைவர் ஹக்கீமை வழிக்குக் கொண்டுவர முயற்சித்திருக்கின்றார்.

## சந்திரிகாவின் சதி

ஹக்கீம் வழிக்கு வராதபோதிலும் தமது நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் இலக்கை அடைந்து கொள்வதற்கு றிஷாத் அணியினர் முனைப்புக்காட்டியே வந்திருக்கின்றனர். அவர்கள் தாம் அமைச்சுப் பதவிகளைப் பெற்று மு.கா.தலைவர் ஹக்கீமுக்கு பாடம் படிப்பிக்கவேண்டும் என்பதில் வெறியாகவே இருந்துள்ளனர்.

அதேவேளை இவர்களைப் பயன்படுத்தி முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பலத்தை சிதைக்கும் ஜனாதிபதியின் சதி முயற்சியும் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தனது ஆட்சியைக் கவிழ்த்த முஸ்லிம் காங்கிரஸையும், அதன் தலைவர் ரவூப் ஹக்கீமையும் பழிவாங்கி – அரசியலில் இருந்து ஓரங்கட்டுவதற்கான ஜனாதிபதியின் திட்டத்திற்கு றிஷாத் அணியினர், அரச தரப்பினரால் நன்கு பயன்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸை உடைத்து – முஸ்லிம் சமூகத்தைக் கூறுபோடுவதன் மூலம் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம் தனித்தரப்புவேண்டும் என்கின்ற கோரிக்கையை மழுங்கடிக்கச் செய்யலாம் என்பது ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் எதிர்பார்ப்பாகும்.

ஏனெனில் அரசுத் தரப்பில் இணைந்து அமைச்சுப் பதவிகளையும், சொகுசுகளையும், சலுகைகளையும் அனுபவிக்கும் முஸ்லிம் எம்.பிக்கள், சமூக நலன் கருதிய கோரிக்கைகளைக் கைவிட்டு அடக்கியே வாசித்து – அடங்கிப் போவர் என்பது ஜனாதிபதிக்கு நன்கு தெரியும். முன்னர் தனது ஆட்சியில் ஹக்கீம் அமைச்சராகப் பதவி வகித்தப்போதும், இப்போது அமைச்சர்களான பேரியல், அதாவுல்லா ஆகியோரும் தனக்கு எவ்வாறு சேவகம் செய்தனர் – செய்து வருகின்றனர் என்ற அனுபவத்திலேயே ஜனாதிபதி தனது காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றார்.

## சந்திரிகாவின் இலக்கு

ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் இன்றைய முக்கிய இலக்கு, முதலில் சபாநாயகரை மாற்றுவது, பின்னர் தனக்கு வேண்டியவரைத் தேர்தல் ஆணையாளராக நியமிப்பது. அதன் மூலம் 2005 டிசம்பர் மாதம் இடம்பெற வேண்டிய ஜனாதிபதித் தேர்தலை நடத்தாது 2006 டிசம்பர் வரை தனது பதவிக்காலத்தை நீடிப்பது அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றுவது அதன் மூலம் அரசமைப்பை மாற்றி – நாட்டின் தலைவியாக தன்னைத் தொடர்ந்தும் பதவியில் அமர்த்திக் கொள்வது.

இந்த ஏற்பாடுகளுக்கு எல்லாம் நாடாளுமன்றத்தில் தனக்குப் போதிய பலம் தேவை என்பதால், இ.தொ.கா.வை அரசுடன் இணைத்துக் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.ஹுஸைன் பைலாவுக்கு பிரதி அமைச்சர் பதவியைக் கொடுத்து தனது முந்தானையில் பிணைத்


ரவூப் ஹக்கீம்

துக் கொண்டார். இப்போது றிஷாத் பதியுதீன் நஜீப்மஜீத் அமீரலி சிஹாப்தீன் ஆகிய மூவரும் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களாக நியமனம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

இம்மூவருக்கும் அவரவர் மாவட்டத்திற்கான புனரமைப்பு, அபிவிருத்தி அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே ஏ.எஸ்.எம். அதாவுல்லா, கிழக்கு அபிவிருத்தி அமைச்சராகப் பதவி வகித்து வரும் நிலையில், கிழக்கு மாகாணத்தை மாவட்ட ரீதியாகக் கூறுபோட்டு – முஸ்லிம் அமைச்சர்களுக்குள்ளேயே சண்டை சச்சரவுகளைத் தோற்றுவிக்கும் வகையில் அமைச்சுப் பதவிகள் பங்கிடப்பட்டிருக்கின்றன. முஸ்லிம் சமய, கலாசார அமைச்சை எவருக்கும் கையளிக்கவில்லை.

## எலும்புத்துண்டுக்கு முண்டியடிப்பு

முஸ்லிம் உரிமைகள் பற்றிப் பேசுவோர், அதற்காக மக்களால் வாக்களித்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டோர் பேரினவாதிகளின் எச்சில்களுக்கு சோரம் போயுள்ளனர். சமூகத்திற்குக் கிடைக்கவேண்டிய உரிமைகளைக் கேட்டுப்பெறாது, வெறும் எலும்புத்துண்டுகளுக்காக சமூகத்தைக் காட்டிக் கொடுத்திருக்கின்றனர்.

இவை எல்லாவற்றுக்கும் ஒட்டுமொத்தக் காரணம் மு.கா.தலைவர் ஹக்கீமின் புத்திசாதுரியமற்ற – சுயநலப்போக்கே. குரங்கின் கையில் பூமாலையைக் கொடுத்தது போன்று, ஹக்கீமிடம் தலைமைத்துவத்தை வழங்கிய முஸ்லிம் சமூகம் கைசேதப்பட்டு – நடுத்தெருவில் நிற்கிறது. முஸ்லிம் அரசியல் நாற்றமடிக்கிறது. ஏனைய இனத்தவர் முஸ்லிம் சமூகத்தை சந்தேகக்கண் கொண்டு பார்க்கின்றனர். முஸ்லிம் தலைவர்கள், சமூகத்தை சந்தி சிரிக்க வைத்துவிட்டனர்.

ரவூப் ஹக்கீம், முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப்பதவியைப் பொறுப்பேற்றதிலிருந்து சமூகம் பல்வேறு பிளவுகளைக் கண்டு வருகின்றது. பேரியல் அஷ்ரப் அணி, அதாவுல்லா அணி, றிஷாத் அணி என்று இப்போது சட்டத்தரணி சஹீட் தலைமையில் முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக்குழு என கிளர்ச்சிக்குழு ஒன்று உருவாகியுள்ளது.

நு:ஆ, து:ஆ, உம்மா, அஷ்ரப் காங்கிரஸ், தேசிய முஸ்லிம் காங்கிரஸ் போன்ற முஸ்லிம் கட்சிகள் வரிசையில் இப்போது இன்னுமொரு முஸ்லிம் கட்சிக்கான அடித்தளம் இடப்பட்டிருக்கிறது. முஸ்லிம் சமூகம் இனியும் தலைவர்களை நம்பி ஏமாறுமா? அல்லது விழித்துக்கொள்ளுமா?

– அஸ்லம் எஸ். மௌலானா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2008 இல் இந்தியாவில் மீண்டும் அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர்

இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை 'பார்டர் – கவாஸ்கர்' கிண்ணத்துக்காக இந்திய – அவுஸ்திரேலிய டெஸ்ட் நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்று அவுஸ்திரேலியக் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் பாப் மெர்ரிமன் தெரிவித்துள்ளார். 'ஆஷஸ்' தொடரைப் போல் 'பார்டர் — கவாஸ்கர்' தொடரும் நடைபெறவேண்டும் என்றும் மெர்ரி மன் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் அவர் தெரிவித்ததாவது:–

''தற்போது ஐ.சி.சி. பரிசீலனையில் உள்ள அட்டவணைப்படி டெஸ்ட் போட்டிக்காக அவுஸ்திரேலியா 2010இல் தான் இந்தியா வரும். இந்த அட்டவணைக்கு இந்தியாவும் – அவுஸ்திரேலியாவும் இதுவரை ஒப்புதல் தெரிவிக்கவில்லை.

''இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை ஒவ்வொரு அணியும் இன்னொரு அணியின் நாட்டுக்குச் சென்று விளையாட வேண்டும். அதன்படி 2008 இல் அவுஸ்திரேலிய அணி மீண்டும் இந்தியா வந்துவிளையாடும்.

''ஒவ்வொரு நான்கு ஆண்டு இடைவெளியில் நாங்கள் இந்தியா செல்ல வேண்டும். அதே இடைவெளியில் இந்தியா அவுஸ்திரேலியா வரவேண்டும். இதன்படி இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை போட்டிகள் நடைபெறவேண்டும்.

''இதுதான் கிரிக்கெட் ரசிகர்களுக்கு சரியாக இருக்கும். அவர்கள் இதைத்தான் எதிர்பார்க்கின்றார்கள். 2001 ஆம் ஆண்டு இந்தியாவில் இதே போன்ற வரவேற்பு இருந்தது. இதில் ரசிகர்களின் ஆர்வம் அதிகமாக இருப்பதால் நாம் அதற்கேற்ப செயல்பட வேண்டும். 2008இல் நாங்கள் மீண்டும் இந்தியா வருவது அதை உறுதி செய்வதாக இருக்கும்'' என் மெர்ரிமென் தெரிவித்தார்.

# கோல்வ் விளையாடுகிறார் கால்பந்து வீரர் மரடோனா

மரடோனா ஆர்ஜென்ரீனா கால்பந்து அணியில் இடம் பெற்று ஒரு கலக்கு கலக்கியவர். இவருடைய காலில் பந்துபட்டாலே அதை கோலாக மாற்றக்கூடிய தந்திரமிக்க திறமையான ஆட்டக்காரர்.

கால்பந்து போட்டியின்போது ஊக்க மருந்து சாப்பிட்டார் எனப் போட்டிகளில் விளையாட அவருக்குத் தடைவிதிக்கப்பட்டது.



ஆடிய காலும், பாடிய வாயும் சும்மா இருக்காது என்பதைப் போல கால்பந்தை மறந்து மரடோனா தற்போது கோல்வ் விளையாடி வருகிறார்.

கம்யூனிஸ நாடான கியூபாவில் கோல்வ் விளையாடி வரும் மரடோனா ''நான் இந்த விளையாட்டில் சாம்பியன் இல்லை. ஆனாலும் எனக்கு இந்த விளையாட்டு ரொம்பப் பிடிக்கும். இது ஒரு அழகான விளையாட்டு'' என்று புகழ்ந்து கூறுகிறார்.

விளையாட்டு மோகத்தால் மனைவியையும், 2 மகள்களையும் விட்டுப்பிரிந்து இருப்பது சற்று சங்கடமாகத்தான் இருக்கிறது என்று வருத்தப்பட்ட மரடோனா, கியூபாவில் தனது வாழ்க்கை அமைதியாக உள்ளது என்றார்.

20ஆம் நூற்றாண்டின் அமெரிக்காவின் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதும் மரடோனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருது மரடோனாவுக்கு வழங்கப்படுவதில் பொருத்தம் இருக்கத்தான் செய்கிறது. ஏனென்றால், 1986 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கால்பந்து தொடரில் இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா வெற்றிபெற்று உலகக் கிண்ணத்தை சுவீகரிக்க இவருடைய ஆட்டமே முக்கியமான காரணம்.

# விளையாட்டு பிரபலங்களின் நம்பிக்கைகள்

பிரபலங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான நம்பிக்கைகள் இருக்கின்றன. அதன்படி விளையாட்டுவீரர்கள் மூவரின் நம்பிக்கைகள் வருமாறு:–

டேவிட் பெக்காம்:

போட்டியில் கலந்துகொள்ள மைதானத்தில் இறங்கும்போது மைதானத்தின் நடுப் பகுதிக்குச் சென்று அங்குள்ள தரையை தொட்டு முத்தமிட்டுக் கொள்வது வழக்கம்.

டைகர் வூட்ஸ்:

உலகப்புகழ்பெற்ற கோல்வ் வீரர் டைகர் வூட்ஸ் தனக்குச் சிவப்பு நிறம் அதிர்ஷ்டம் தரக்கூடியது என்ற நம்பிக்கைக் கொண்டவர். எனவே போட்டியின் இறுதிச் சுற்று நடக்கும் நாளில் அவரது உடைகளில் ஏதாவது ஒன்று சிவப்பு நிறத்தில் இருக்கும். 8 வயதில் இருந்தே இந்தச் சிவப்பு நிற அதிர்ஷ்ட உடை பழக்கம் அவரிடம் உள்ளது.

ஜான் போர்க்:

சுவீடன் நாட்டு டெனிஸ் வீரரான இவர் விம்பிள்டன் சாம்பியன் போட்டியில் கலந்த கொள்ளும்போது வெற்றி பெறும் வரை ஒரே சட்டை அணிந்து கொள்வார். முகத்தை சவரம் செய்யமாட்டார்.


# ஐரோப்பாவின் சிறந்த வீரராக கார் ஓட்டும் புயல் ஷூமாக்கர்

மைக்கேல் ஷூமாக்கர் தனது 26 வயதிலேயே இரட்டையர் 'பார்முலா' கார் பந்தயத்தில் சாம்பியன் பட்டம் வென்றவர். அதற்கு முன்பாக 2000 முதல் 2003 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நான்கு முறை கார் பந்தயத்தில் உலகச் சாம்பியன் பட்டத்தையும் வென்றிருக்கிறார்.

அது மட்டுமல்ல, அவருடைய தொடர் வெற்றியைப் பாராட்டி மேலும் ஒரு பரிசு வழங்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவிலேயே சிறந்த விளையாட்டு வீரர் என்ற விருது தான் அந்தப்பரிசு. அந்த நாட்டில் உள்ள ஐரோப்பிய 'ஸ்போர்ட்ஸ்' பத்திரிகைதான் இந்த விருதை ஷூமாக்கருக்கு வழங்கி கௌரவித்து உள்ளது. இந்த விருதை ஷூமாக்கர் 4ஆவது முறையாக பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பிய நாடுகளில் மட்டுமல்லாமல் உலக அளவிலும் மைக்கேல் ஷூமாக்கருக்கு ஏராளமான ரசிகர்கள் உள்ளனர்.

இந்தப் பிரபலமான கார் பந்தய விளையாட்டை, உலகம் முழுவதும் பரப்ப வேண்டும் என்று கூறிய ஷூமாக்கர் பெங்களூரில் 'பார்முலா – 1' கார் பந்தய மையம் அமைக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் கூறினார்.

இவர் டெண்டுல்கரின் தீவிர ரசிகரும் கூட இவர் அன்பளிப்பாக டெண்டுல்கருக்கு அளித்த 'பெராரி' கார்தான் அண்மையில் வரிவிலக்குப் பிரச்சினையில் சிக்கிக் கொண்டது. பின்னர் அந்தப் பிரச்சினைக்கு சுமூகத் தீர்வு ஏற்பட்டுவிட்டது.




# குதிரைப் பனிச்சறுக்கு

பனி படர்ந்த பகுதிகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் ஒன்று பனிச் சறுக்கு. இந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் தங்கள் காலில் பனிச்சறுக்கு பலகையை மாட்டிக்கொண்டு பனி படர்ந்த பகுதியில் சறுக்கிச்செல்வது உண்டு.


பனிச்சறுக்கு போல தண்ணீரில் சறுக்கியபடி செல்லும் நீர்ச்சறுக்கு விளையாட்டும் உள்ளது. இதில் கலந்து கொள்பவர்கள் வேகமாகச் செல்லும் படகுடன் தங்களை இணைத்துக்கொண்டு தண்ணீரைக் கிழித்துக்கொண்டு சறுக்கியபடி செல்வது உண்டு.

இதே போல சாகசம் நிறைந்த விளையாட்டுக்களில் ஒன்றுதான் குதிரைப் பனிச் சறுக்கு விளையாட்டு. இந்த விளையாட்டில் பனி படர்ந்த பகுதியில் குதிரைகள் வேகமாக ஓட.... அதன் கடிவாளத்தை பிடித்தபடி பனியில் சறுக்கிச் செல்ல வேண்டும்.

சுவிட்ஸர்லாந்து நாட்டில் குளிர்காலத்தில் ஆறுகளும், ஏரிகளும் உறைந்துவிடும். அப்போது அந்த பகுதிகளில் குதிரைப் பனிச்சறுக்கு விளையாட்டுக்கள் நடைபெறும். குதிரைச் சவாரியைவிட இது கடினமானது என்கிறார்கள், இந்த விளையாட்டில் ஈடுபட்டுள்ள வீரர்கள்.

விளையாட்டுச் செய்திகள்! பிராங்

ஜெர்மனியில் டோர்ட்மட் நகரில் அண்மையில் 'ஸ்கேட்டிங்' சாம்பியன் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளில் பல்கேரியாவின் அல்பெனாடேல் கோவா (ஆண்), மெக்ஸிம் ஸ்டெவ்விக்ஸி ஜோடி நிகழ்த்திய ஸ்கேட்டிங்கின் ஒரு கட்டத்தையும், ஜெர்மனியின் கெட்டிவின் கிளர் (பெண்), ரெனி லோஹிஸ்ஸின் ஒய்யாரமாக தொங்கிகொண்டே ஸ்கேட்டிங் செய்வதையும் படங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஸ்டர் வேதாளம்



''சரக்கு வச்சிருக்கேன்... இறக்கி வச்சிருக்கேன்'' என்று பாட்டுச்சத்தம் கேட்டது. 'யாரது சீரியஸாக எல்லோரும் வேலை செய்து கொண்டிருக்கும் அலுவலகத்தில் இப்படி சினிமாப் பாட்டுப்பாடுவது?' என்று நிமிர்ந்து பார்த்தால், அருகே மிஸ்டர் வேதாளம் நின்று கொண்டிருந்தார்.

''அடடா... வாரும், எப்படி தீபாவளிக்கு ஆயத்தமா?'' என்றோம்.

''இல்லை...நான் தீபாவளி கொண்டாடுவதில்லை...'' என்றார்.

''ஏன்?''

''நாட்டிலே சமாதானம் மலர்ந்து எமது மக்கள் உளமாறச் சிரிக்கும் போது தான் தீபாவளி கொண்டாடுவதாக முடிவு'' என்றார் அழுத்தமாக.

''அடடா...! அப்படி என்றால் வாழ்க்கையில் தீபாவளி கொண்டாடும் சந்தர்ப்பமே இல்லை'' என்று சொன்னோம்.

சிரித்தார்...

விடயத்துக்கு வந்தோம். ''என்ன அம்மையார் திடீரென்று இடைக்கால சபை தொடர்பாக பேசலாம் என்று தடாலடியாக மாறிவிட்டாராம்...''

''ஓ... ஓ... ஜப்பானிய தூதுவரிடம் சொல்லி அனுப்பிய விடயத்தைச் சொல்கிறீரோ?'' என்றார்.

''ஆம்..'' என்றோம்.

''அதுதான் புலிகள் தரப்பிலும் கொஞ்சம் அதிர்ச்சி. ஜப்பானிய தூதுவர் திடீர் என 'உங்கள் இடைக்கால திட்ட வரைபு தொடர்பாக பேச ஜனாதிபதி சம்மதித்துவிட்டார்' என்றதும் புலிகள் முதலிலே ஷொக் ஆகிவிட்டார்களாம். 'நேற்று – முந்தநாள் எல்லாம் தமது புதிய வரைபை பற்றிப் பேசியவர் இதென்ன திடீர் மாற்றம், இது பற்றி எமக்கு நேர காலத்துடன் தகவல் எதுவும் இல்லையே! இதற்கு என்ன பதில் சொல்வது?' என்று குழம்பி தங்கள் தலைமையுடன் தொடர்பு கொண்டு விவரத்தை சொல்லி இருக்கிறார்கள்.''

''அப்படியா! சரிசரி.. தொடரும்'' என்றோம்.

''தலைமைக்கு தெரியாத சாணக்கியமா? தலைமை 'விடயத்தை விவரமாக விளக்கி, இந்த சதி வலையில் நாம் விழக்கூடாது.' எனவே இந்தத் தகவலை நோர்வே மூலம் அறிவிக்கும்படி சொல்லிவிட்டதாம்''

''என்ன சதி? ஏன் நோர்வே? புரியவில்லையே!''

''ஒன்று அம்மையாரின் அரசு தற்போது மிகவும் பாரிய நிதி நெருக்கடியில் இருக்கிறது. வரவு, செலவுத்திட்டத்தைத் தயாரிக்க படாதபாடு படுகிறது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் எல்லாம் கையை விரித்து விட்டன. சரி. அதை, இதைச் சொல்லி கொஞ்சம் நிதியைப்பெறுவதற்கு முயற்சித்தால் இலங்கைக்கு வந்ததும் வராததுமாக 'சமாதானப் பேச்சுக்கள் தொடங்காமல் ஒத்துக் கொள்ளப்பட்ட நிதியில் சல்லிக்காசு கூட கிடைக்கவே கிடைக்காது' என்று அறுதியிட்டு கூறிவிட்டார் ஜப்பானியத் தூதுவர்''

''அதனால்''

''அதனால் எப்படியாவது புலிகளின் கையைப்பிடித்து இழுத்து வந்து பேச்சு மேசையில் அமர வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் அம்மாவுக்கு. அடுத்து பேச்சுக்களை ஆரம்பித்து கொஞ்சம் இழுத்தடித்தால் தற்போது ஏற்பட்டிருக்கும் ஜனாதிபதி தேர்தல் 2005 இலா, 2006இலா என்ற பிரச்சினையையும் கொஞ்சம் அமுக்கலாம்''

''எப்படி''

''அதாவது, பேச்சுக்கள் நடக்கின்றன. எனவே நான் தொடர்ந்து அதிகாரத்தில் இருந்தால்தான் அதனை நல்லபடியாக முன்னெடுக்க முடியும்', என்று மக்களிடம் கூறி அரசியலமைப்பை மாற்றலாம். அல்லது தேர்தலை தள்ளிப்போடலாம் அல்லவா? அதற்காகத்தான் எதற்கும் சம்மதித்து புலிகளை பேச்சுக்கு இழுக்கப் பார்க்கிறார் ஜனாதிபதி என்பது தான் அந்த சதிவலை.''

''அப்படி என்றால் அதனை எழுத்து மூலம் வாங்கித்தரும்படி ஜப்பானியத் தூதுவரிடம் கேட்டிருக்கலாமே?''

''இல்லை. நோர்வேயின் கிடுக்கிப்பிடி அம்மையாரை கொஞ்சம் ஆட வைக்கிறதாம். எந்தவிதமான அட்ஜஸ்மெண்டும் செய்ய முடியவில்லையாம். நடுநிலைமை என்ற விடயத்தில் இறுக்கமாக நிற்கிறார்களாம். அதனால் அவர்களை நைஸாக கழட்டிவிட்டு ஜப்பானை இதற்குள் நுழைக்க முயற்சிக்கிறார் அவர். அதற்கு இடம் கொடுக்காமல் தான் புலிகள் தடாலடியாக நோர்வே மூலம் அறிவிக்கச்சொல்லிவிட்டார்களாம்.''

''இப்படியும் இருக்குமோ? ஜே.வி.பிக் காரர்களுக்கும் நோர்வேயை கண்ணிலே காட்ட முடியாது தானே! அதுவும் ஒரு காரணமாக இருக்கும் என்ன?'' என்றோம் நாம்.

பெரிதாகச் சிரித்தார் வேதாளத்தார்.

புரியாமல் பார்த்தோம்.

''ஐயா! முன்னர் தான் ஜே.வி.பி நோர்வேக்கு எதிர்ப்பு. நோர்வேக் கொடியை எரித்தது, நோர்வேத் தூதரகம் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தது, நோர்வேக்காரர்களை வெளியேறச் சொன்னது எல்லாம். ஆனால், இப்போ நிலைமையே வேறு''

''அப்படி என்ன மாற்றம்?''

''இப்போது ஜே.வி.பியின் உறுப்பினரான மீன்பிடித்துறை அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க நோர்வேக்காரர்களுக்கு பின்னாலும், முன்னாலும் அலையாக அலைகிறார்''

''ஏனாம்?''

''உள்ளூரிலே மீனவர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவி கோரி''

''அப்படி என்றால் இனி ஜே.வி.பிக்காரர்கள் நோர்வே எதிர்ப்பை அமுக்கி வாசிப்பார்கள் என்கிறீர்?''

''ஆம்.. ஆம்.. ஆம்..''

''சரி. கருணாவின் புதிய கட்சி நிலவரம் என்னவாயிற்று?''

''கருணா தரப்புப் பற்றி சத்தமில்லை. ஆனால், அவர்களுடன் கூட்டு சேர்ந்துள்ளதாக சொல்லப்படும் ஈ.என்.டி.எல்.எவ். காரர்கள் கொஞ்சம் மேடைகளில் தலைகாட்டத் தொடங்கிவிட்டனர்.''

''எங்கே? எப்போது?'' என்று கேட்டு வைத்தோம்.

''அண்மையில் ஜே.வி.பி, ஹெல உறுமயக் காரர்கள் புலிகளுக்கு எதிராக பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்திய கூட்டத்தில் மனோமாஸ்டர் இருந்தாரே... அதுவும் விமல் வீரவன்ஸவின் பக்கத்திலேயே! பேப்பர்களில் பார்க்கவில்லையா''?

''பார்த்தோம் பார்த்தோம். அதில் ராஜரட்ணம் என்றல்லவா போட்டிருந்தது?''

''அவர் தான் இவர். இவர் தான் அவர்.'' என்றவர்...'' இந்திய – இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடும் வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கைச்சாத்திடுவதற்கு முன்னர் அந்த ஒப்பந்தத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்து அவர்களின் அனுமதிக்குவிடும் ஐடியா ஒன்றிருக்கிறதாம்'' என்றார்.

''அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் இலங்கைக்கு அநுகூலங்கள் அதிகம் இருக்குமோ?'' என்று கேட்டோம்.

''இதுவரை காலமும் இலங்கைக்கு இந்தியா இரகசியமாகச் செய்து வந்த இராணுவ உதவிகளை இனிமேல் பரகசியமாக செய்ய முடியும் என்பதை தவிர பிரதிகூலங்கள் தான் அதிகம் என்று பேசிக்கொள்கிறார்கள்'' என்றார்.

''என்ன பிரதிகூலங்கள்?'' அதாவது இப்போ இலங்கைக்கு பல நாடுகள் இராணுவ உதவிகளை வழங்கி வருகின்றன. ஒப்பந்தம் கைச்சாத்தானால் அவை அனைத்தும் தமது உதவிகளை நிறுத்திக்கொள்ள வாய்ப்பு இருக்கிறதாம்'' என்றார்.

'' அப்படி என்றால் இனிமேல் வெளி நாடுகளில் ஆயுதங்கள் வாங்கி கொமிஷன் வைக்கும் ஊழல் நடைபெறுவது கஷ்டம் என்கிறீரோ?'' என்று கேட்டோம்.

''இல்லை, அவைகள் தொடர்ந்து நடந்து கொண்டு தான் இருக்கின்றன. இருக்கும். அண்மையில் கூட இராணுவத்துக்கு 1 லட்சத்து 59 ஆயிரம் சப்பாத்துக்கள் வாங்குவதற்காக 44 மில்லியன் ரூபாவுக்கு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றில் ஊழல் நடத்தியிருப்பதால், அந்த ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டிருக்கிறதே!'' என்றார்.

''அப்படியா?'' போர்க்காலத்தில் மட்டுமல்ல சமாதான காலமென்றாலும் கமிஷன் காரர்களுக்கு வாசி தான்'' என்று நாம் சொல்லிக்கொண்டிருக்க, அதனைக் கேட்க வேதாளத்தா[illegible] கேட்...

# புஷ் வெற்றி!......

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

50,456,002 இது ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அல்கோர் பெற்ற 50,999,897 வாக்குகளைவிட 543,895 வாக்குகள் குறைவானது. ஆனால், தேர்தல் சபையில் 271 வாக்குகளை புஷ் பெற்றார். அவரே அதிபராக அறிவிக்கப்பட்டார். அமெரிக்கத் தேர்தல் வரலாற்றில் இதற்கு முன்னரும் இப்படி நடந்துள்ளது.

இந்த முறை அதிபர் தேர்தலில் அத்தகைய நெருக்கடிகள் வருவதற்கு வாய்ப்பில்லை. ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கெரியைவிட 35 லட்சம் வாக்குகள் அதிகம் பெற்று வென்றுள்ளார் புஷ். இதன் மூலம் அவர் தேர்தல் சபையில் 270க்கும் அதிகமான பெரும்பான்மையை இலகுவாகப் பெறுவார்கள் என்று வெள்ளை மாளிகை அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்தத் தேர்தலின் ஆரம்பத்தில் ஒஹியோ மாகாண முடிவுகள் குறித்து கெரி தரப்பினர் ஆட்சேபம் தெரிவித்தனர். ஆனால், பின்னர் புஷ்ஷின் வெற்றியை அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இதன் மூலம் தனது இரண்டாவது பதவிக் காலத்திற்கான பயணத்தை எந்தத் தடையும் இன்றி ஆரம்பித்துள்ளார் புஷ். கடந்த முறை இவ்வளவு இலகுவாக அவர் வெற்றி பெறவில்லை. 36 நாட்கள் நீதிமன்றத்தில் போராடிய பின்னர் தான் அவர் தனது வெற்றியை உறுதிப்படுத்த முடிந்தது.

அமெரிக்காவில் ஆட்சியில் இருக்கும் அதிபர்கள் தமது இரண்டாவது பதவிக் காலத்திலும் நீடிப்பது ஒன்றும் புதிய விடயம் அல்ல. கிளின்டன், றேகன் உட்படப் பலர் இரண்டு தடவைகள் அதிபராகப் பதவி வகித்துள்ளனர். அவர்கள் வழியில் ஜூனியர் புஷ்ஷும் இடம்பிடித்துள்ளார்.

புஷ்ஷின் இந்த வெற்றி அவரது வெளி விவகாரக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி என்கிறார்கள். இந்தத் தேர்தலில் தீவிரவாதத்துக்கு எதிரான போரும் ஈராக் மீதான ஆக்கிரமிப்புமே மிக முக்கிய விவகாரங்களாயிருந்தன.


ஈராக் ஆக்கிரமிப்புக்கு எதிரான ஒருவராகத் தன்னை இனங்காட்டிக் கொண்டார் கெரி. தீவிரவாதத்தை எதிர்ப்பதே முக்கியமானது என்றார் புஷ். இப்போது அவரது வாதத்தை அமெரிக்க மக்கள் அங்கீகரித்து விட்டனர்.

''ஈராக் போரை ஆரம்பித்தாகி விட்டது. இனி அதிலிருந்து வெளியே வரவேண்டும். அதற்கு யார் வெற்றிகரமான திட்டத்தை வைத்திருக்கிறார்கள் என்பதே முக்கியம்'' என்று சிந்தித்த அமெரிக்கர்களுக்கு புஷ் சிறந்தவராகத் தெரிந்தார் என்று சொல்கிறார்கள் ஆய்வாளர்கள்.

அமெரிக்கர்களின் இந்தத் தீர்ப்பு தீவிரவாதத்துக்கு எதிரான போர் குறித்த விடயத்தில் அவரை மேலும் உத்வேகத்துடன் செயற்படத் தூண்டும் என்பதில் ஐயமில்லை. உலகப் பொலிஸ்காரன் வேலையை அமெரிக்க கனஜோராகக் கொண்டு நடத்துவதற்கு இதுவரை இருந்துவந்த தடைகளும் இனி அகன்றுவிடும். உலக நாடுகள் விடயத்தில் தானாகவே மூக்கை நுழைத்து அதிகாரத்தனம் செய்யும் அமெரிக்காவின் குணமும் இனி வலுவடையும்.

செப்டெம்பர் 11இல் அமெரிக்கா மீது தீவிரவாதிகள் விமானங்களை மோதி தாக்குதல் நடத்தினார்கள். இந்தத் தாக்குதலினால் பாதிக்கப்பட்டவை நியூயோர்க், வாஷிங்டன் மற்றும் நவோடா மாநிலங்கள். இவற்றில் புஷ் தோல்வியையே தழுவிக்கொண்டார் என்பதும் இங்கு கவனிக்கப்படவேண்டிய மிக முக்கியமான விடயம்.

கெரியின் நிராகரிப்பும், புஷ்ஷின் வெற்றியும் உலகில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை மேலும் வலுவுள்ளதாக்கும் என்பதில் அச்சமில்லை. தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்ற போர்வையில் விடுதலை இயக்கங்களை அமுக்கும் பணிகளிலும் அமெரிக்கா இனி மேலும் தீவிரவாதத்துடன் செயற்படும். இலங்கைக்கு அடிக்கடி வந்த செல்லும் அமெரிக்க அதிகாரிகளின் விஜயங்களின் பின்னணியில் நாம் இவற்றையும் யோசிக்க வேண்டியே உள்ளது.




புஷ்ஷின் வெற்றியைக் கொண்டாடும் அவரின் ஆதரவாளர்கள்.

# காதல் கொண்டேன்.....

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

இருக்கிற அவருக்கு நான் நிச்சயம் பொருத்தமானவள் இல்லை. சுத்தமானவள் இல்லை...''

''கீதா... புதிர் போடாம விஷயத்தைச் சொல்லேன்...''

''சொல்லுறேன். பிறந்ததுல இருந்து அன்பு, பாசத்துக்காக ஏங்கினவள் நான். அப்பா அரசாங்க அதிகாரி. அம்மா பேங்க வேலை. நான் ஆயாக்கிட்ட பத்து வயசுல ஹொஸ்டல்ல இருந்தேன். மத்த பிள்ளைகள் அவங்க அப்பா, அம்மாவோட அன்புப் பிணைப்பில இருந்தப்போ நான் மட்டும் பிணைக்கைதியா ஹொஸ்டல்ல இருந்தேன். பிடிவாதம், வஞ்சம், கோவம் எல்லாம் என்னோட வளர்ந்துச்சு. படிச்சி முடிச்சு வேலைக்குப் போன போது நான் என் இஷ்டப்படி தான் இருந்தேன். என் பெற்றோரை பழி வாங்குறதா நினைச்சி நான் படுகுழியில விழுந்தேன். ஆண் நண்பர்கள் அதிகம். அதுல ஒருத்தன் குளிர்பானத்துல போதை மருந்தை கலக்கிக்கொடுத்து என் பெண்மையைப் பறிச்சுட்டான். அப்புறம்தான் நான் என் தவறை உணர்ந்தேன். கண் கெட்ட புறமா சூரிய நமஸ்காரம் செஞ்சி என்ன ஆவப் போகுது? அணில் கடிச்ச பழமாயிட்ட நான் எப்புடி பாபு மாதிரி நல்லவருக்கு மனைவியாக முடியும்? சாந்தமா அமைதியா அவர்கிட்ட நான் சொன்னா சரிவராதுன்னுதான் என்மேல அவருக்கு வெறுப்புவாற மாதிரி கடுமையா நடந்துகிட்டேன். வீட்டில வற்புறுத்தி எனக்கு மணம் பேசிட்டாங்க. எனக்கு மாலையிடப்போறவன் யோக்கியமானவன் இல்லை. அவனுக்கு எப்படிப்பட்ட பெண்ணாயிருந்தாலும் கவலையில்லை. இப்படித்தான் ஒரு பெண் இருக்கணும்னு நினைக்கிற பாபுவுக்கு மாலையிட நான் தகுதியானவள் இல்லை. எப்படி வேணும்னாலும் இருக்கட்டும். பணம் வந்தாப்போதம்னு நினைகிற இப்படியானவன் எனக்குப் பொருத்தமானவன். இப்ப சொல்லு நான் செஞ்சது தப்பா?''

கீதா கேள்விக்குறியுடன் அவளைப் பார்க்க சுமித்ரா பதில் ஏதும் சொல்ல முடியாமல் தலைகுனிந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் போட்டி இல.133

சொற்சிலம்பம் 133 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் நவம்பர் 14 ஆம் திகதி ஆகும். விடைகள் நவம்பர் 21ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் நவம்பர் 28ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.131க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.133

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | ■ | 11 | | ■ |
| | ■ | 12 | | 13 | | ■ | 14 |
| ■ | 15 | | | | ■ | 16 | |
| 17 | | ■ | 18 | | 19 | | |
| 20 | | 21 | | ■ | 22 | | |
| 23 | | | ■ | 24 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.131

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 ரு | ந் | 3 த | ப் | 4 பு | ■ | 5 யா |
| 6 ம | து | ■ | ரி | ■ | 7 த | 8 வி | ர |
| ரா | ■ | 9 ப | த் | 10 தொ | ன் | ப | து |
| 11 வ | 12 ச | ந் | த | ன் | ■ | ர | ■ |
| 13 தி | ரி | த | ல் | ■ | 14 க | ம் | 15 பு |
| ■ | 16 பா | ல் | ■ | 17 எ | டை | ■ | த் |
| 18 சா | தி | ■ | 19 வ | ழி | ■ | 20 உ | தி |
| வி | ■ | 21 கு | ட | ல் | வ | ள | ரி |

## சொற்சிலம்பம் போட்டி இல.133

**இடமிருந்து வலம்**

1. பாலுணர்வைத்தூண்டும்போக்கு.
4. மீளாத் துயில் இங்கு.
7. வாசம்.
8. அழகுப் பெண்.
09. கணவன்—மனைவி.
11. மறைவில் அடிப்பது.
12. கிடைக்க வேண்டியது.
15. அழுகை இடையே வரும்.
16. உயிர்ப்பின் ஆரம்பம்.
17. முக்கனிகளுள் ஒன்று.
18. இதனால் தான் இவ்வளவு அழிவும்; யுகத்தைச் சொல்வது இப்படி.
20. உங்கள்.
22. தவறு
23. பத உறுப்பில் ஒன்று.
24. சந்திரன்.

**மேலிருந்து கீழ்**

1. ஏட்டிக்குப் போட்டி பேசுதல்.
2. குடிக்கவும் உதவும்;சோறுடன் சேர்த்து உண்ணவும் உதவும்.
3. நிகழ்ந்த விவகாரம்.
4. தலைமுறை.
5. திங்கள்.
6. மூன்று.
10. இலட்சுமி.
13. மிளகாய்த் தூள் அரைக்க இதையும்சேர்த்துக்கொள்வர்.
14. தற்கொலைப் போராளி.
15. பாம்புக்கு வாலையும், மீனுக்குத்தலையையும்காட்டக்கூடிய வடிவமைப்புடைய மீன் இனம்.
16. சேர்த்ததால்/சேர்க்கையால் வருவது.
17. அதிகார ஆசை, போட்டி எல்லாம் இதை அடையத்தான்.
19. ஒரு தூர அளவை அலகு.
21. வேகம்.

## சொற்சிலம்பம்-130 பரிசு பெறுவோர்.

1. திருமதி.கிருஷானி றேமன்ட், 18/39, தர்ம சோக மாவத்தை, வட்டப்புளுவ ,கண்டி.
2. செல்வி.லக்ஷனா பரமநாயகம், மானிப்பாய் மகளிர் கல்லூரி.
3. எம்.எச்.எம்.இஸ்ஸதீன், 18/N, நவகம்புர தே.வீ.திட்டம், கிராண்ட் பாஸ், கொழும்பு– 14.

### பாராட்டுப் பெறுவோர்

1. திருமதி.லதாரஞ்ஜனி கிருஷ்ண மூர்த்தி, ஆலங்குழாய் வீதி, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்.
2. செல்வி.வ. இளநிதி, 19/ 26 மாரியம்மன் கோயில் வீதி, கல்லடி, மட்டக்களப்பு.
3. ச.கணேசமூர்த்தி, மூத்த விநாயகர் கோயிலடி, கரணவாய், கரவெட்டி.
4. பொ.பாலசுப்பிரமணியம், இல.10C, கிறெகரி றோட், தெகிவளை.
5. எஸ்.பிரபாகரன், 27/14, றஜமல்வத்த றோட், கொழும்பு–15.
6. த.ரஜிதரன், பி.மா.சுகாதார சேவைகள் பணிமனை, திருகோணமலை,
7. எஸ்.சிற்றம்பலம் , இல.7, பிரதான வீதி, கொட்டகலை.
8. ந.புவனகாந்தி, கறுவாக்கேணி, வாழைச்சேனை.
9. திருமதி.விக்னேஸ்வரி தயாபரன், 274/11, வலியமுன வீதி ஹேகித்த, வத்தளை.
10. எஸ்.நவரட்ணம், 203, முதலாம் மாடி,காலி வீதி, கொழும்பு–06.

# ராசி பலன்

**இவ்வார 'ராசிபலன்' 07–10–2004, 13 –10–2004**

**பொ. சந்திரன்**

### இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | சுக் | சூரியன் சனி |
| | செவ்வாய் ஆயிலியம் புதன் / சுக்கிரன் மிருகசிரிடம் செவ் / புதன் ஆயிலியம் புதன் / சூரியன் புனர்பூசம் குரு / குரு பூரம் சுக்கிரன் / சனி திருவாதிரை புனர்பூசம் | | செவ் புதன் |
| | | | குரு |
| | | கேது | |

ஆனி 28முதல் ஆனி 03 வரை

சந்திரன் மிதுனம் முதல் கடகம் வரை

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1.8) உரிய செவ்வாய் 7இல் இருப்பது நல்ல அம்சம் அல்ல. அடுத்து சூரியன் இதுவும் சரியிலலை. கேதுவும் அங்கு உண்டு. இந்தச் சேர்க்கை நன்மை செய்யாது. தன் சொந்த நட்சத்திரத்தில் இருப்பது ஒரு அளவுக்கு ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சிகள் நல்லமுறையில் பயன் அளிக்காது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். ராசியில் ராகு இருப்பதும் தோசமான நிலை. அமைதி இருக்காது.(2,7) உரிய சுக்கிரன் 6 இல் நீசமாவதால் கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் வீடு, வாகன சுகம் உண்டு. (10,11) உரிய சனி மூன்றில் இருப்பது விசேஷம். தொழில் யோகம் உண்டு. (9,12) உரிய குரு 6இல் மறைவது அதிஸ்டம் இருக்காது. சுகம் குறைவு. செலவு கட்டுக்கடங்காது.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசிரியம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் ஐந்தில் இருப்பது நல்லது. ஆனால், பலவீனமாக இருப்பதால் பலன் செய்யாது. மேலும், பகைக் கிரகமான சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பதும் குறை. குரு, புதன் ஆகிய கிரகங்கள் ராசியைப் பார்ப்பது நல்ல அம்சம். ராசிக்கு இருபுறமும் தீய கிரகங்கள் ராசியைப் பார்ப்பது குறை; எடுத்த கருமங்கள் தாமதமானாலும் நிறைவேறும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய புதன் 7இல் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டமாட்டார்கள். நாலுக்குரிய சூரியன் 6இல் இருப்பது நல்லது. ஆனால், நீசமாக இருப்பதால் வாகன சுகம் இருக்காது. இருக்கும் வீடுகளில் பிரசினை வர வாய்ப்புண்டு. (7,12) உரிய செவ்வாய் 6இல் இருப்பதால் திருமண பலன் உண்டு. சயன சுகம் உண்டு.தர்ம கர்ம அதிபதியான சனி இரண்டில் இருப்பதால் தொழிலில் முன்னேற்றம் இருக்காது.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 6இல் இருப்பது விசேஷம். மேலும் சனியின் நட்சதிரத்தில இருப்பது புதனுக்கு சனி பகையில்லாதபடியால் நன்மை செய்யலாம். ராசியில் சனி இருப்பது குறை. எடுத்த கருமங்கள் ஓர் அளவுக்கு வெற்றி பெறும். வீடு, வாகன சுகம் உண்டு. 2ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். போசன சுகம் உண்டு. (7,12) உரிய குரு நாலில் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். தொழிலில் முன்னேற்றம் இருக்காது. இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பதால் பாதகமான விளைவுகள் உண்டு. (6,11) உரிய செவ்வாய் ஐந்தில் இருப்பதால் உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவர்களாலும், திருடர்களாலும் பகை உண்டு.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிக்குரிய சந்திரன் சிங்கம் முதல் விருச்சிகம் வரை சஞ்சரிப்பது வார ஆரம்பத்தில் நல்ல பலனையும் இறுதியில் மத்திம பலனையும் கொடுக்கலாம். ராசியில் கிரகங்கள் இல்லாது இருப்பது பாதுகாப்புக் குறைவு, உதவி குறைவு இருப்பினும் அமைதியுண்டு. இரண்டுக்குரிய சூரியன் மூன்றில் இருப்பது நல்லது. ஆனால், நீசமாக (பலவீனமாக) இருப்பதால் கையில் பணம் இருக்காது. அடுத்து கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாது. (4,11) உரிய சந்திரன் இரண்டில் இருப்பது நல்லது. ஆனால், நீசப்பட்டு இருப்பதால் வீடு, வாகனம் சுகம் இருக்காது. நண்பர்களால் உதவி இருக்காது. மூத்த சகோதரத்துக்கும் நல்லதல்ல. (7,8) உரிய சனி 12 இல் இருப்பது திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. செவ்வாய் 4 இல் இருப்பதால் தொழிலில் முன்னேற்றம் இருக்காது.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன சூரியன் மூன்றில் இருப்பது நல்லது. இருப்பினும் நீசமாக இருப்பதால் பலன் இல்லை. நட்புக்கிரகமான குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது.சிறுபயணம்அதாவது குறுந்தூரப்பிரயாணம்அமையலாம். எடுத்த கருமங்கள் தடங்கினாலும் நிறைவேறும். சகோதரங்களுக்கு உதவக் கூடியகட்டப்பாடு உருவாகும். (2,11) உரிய புதன் நாலில் இருப்பதால் கையில் பணம் இருக்காது. நண்பர்களாலும் உதவி இருக்காது. மூத்த சகோதரத்துக்கும் நல்லபலன் இல்லை. (4,9) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பது பெற்றோருக்கு நல்லது. வீடு, வாகனம் சுகம் உண்டு. அதிஸ்டம் உண்டு. (3,10) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பதால் தொழிலில் முன்னேற்றம் உண்டு. இளைய சகோதரத்துக்கும் நல்லது.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் மூன்றில் இருப்பது நல்ல பலனைச செய்யாது. ஆனால், சனியின் சாரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. சுக்கிரன் ராசியில் இருந்தாலும் நீசமாய் இருப்பது நல்லதல்ல. குரு இருப்பதும் பிரச்சினைதான். எடுத்த கருமங்கள் தாமதமடையலாம்.தொழிலில் லாபம் குறையலாம். (2,9) உரிய சுக்கிரன் ராசியில் பலவீனமாக இருப்பதால் கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்லதல்ல. (4,7) உரிய குரு ராசியில் இருப்பதால் வீடு, வாகன சுகம் இருக்காது. மாதாவுக்கும் நல்லதல்ல. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. மேலும் இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பதால் பாதிப்புக்குள் வரவாய்ப்புண்டு. 6 க்குரிய சனி பத்தில் இருப்பதால் உடல் ஆரோக்கியம் உண்டு.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் பன்னிரண்டில் இருப்பது நல்லது. ஆனால், பகை நட்சத்திரமான சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பதால் பலன் செய்யாது. மேலும், நீசமாக இருப்பதால் பலன் செய்யவாய்ப்புக் குறைவு. எடுத்த கருமங்கள் தாமதமாகலாம். (2,7) உரிய செவ்வாய் ராசியில் இருப்பதும் கூடாது. கையில் பணம் இருக்காது. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். மேலும், 7 இல் இருப்பதும் குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,5) உரிய சனி 9 இருப்பது நல்ல பலனைச் செய்யாது. வாகன சுகம் இராது. இருப்பிடத்திலும் அமைதி இருக்காது. 10 ஆம் இடம் சுத்தமாக இருப்பதால் தொழில்வளம் முன்னேறும் (3,6) உரிய குரு 12 இல் மறைவது உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவிலகும் இளைய சகோதரத்துக்கு கூடாது.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை.**

(1,6) உரிய செவ்வாய் 12இல் இருப்பது பலன் செய்[illegible] எடுத்த கருமம் தடைப்படலாம். வீண் அலைச்சல் இருக்கும். ஆனால், உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய குரு 11இல் இருப்பது கையில் பணம் இருக்கும். குழந்தைகள் சிறப்படைவர். (3,4) உரிய சனி அட்டமத்தில் இருப்பதால் வீடு, வாகன சுகம் இருக்காது. மேலும், இதனால் செலவு இருக்கும். இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7,12) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது நல்லது. ஆனால், நீசமாக இருப்பதால் பலன் செய்யாது. குரு நல்ல நிலையில் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. 10க்குரிய சூரியன் 12இல் நீசமாவதால் தொழிலில் முன்னேற்றம் இருக்காது.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு பத்தில் இருப்பது மத்திமபலன். மேலும் நட்புக்கிரமான சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பதால் நல்ல பலனைச் செய்யலாம். எடுத்த கருமத்தை கடும் பிரயத்தனத்தால் நிறைவேற்றலாம். வீடு, வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இராது. (2,3) உரிய சனி 7 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (6,9) உரிய சுக்கிரன் 10 இல் நீசமாக இருப்பதால் பிதாவுக்கும் கூடாது. பகைவிலகும். உடல் ஆரோக்கியம் உண்டு. (7,10) உரிய புதன் 12 இல் இருப்பதால் திருமணவாயப்புப் பாதிக்கலாம். தொழில் துறையிலும் முன்னேற்றம் இருக்காது. ராசியைச் சனி பார்ப்பது சங்கடமான நிலை.

**மகரம்: உத்தரடாம் 2,3,4,. திருவோணம், அவிட்டம் 1,2**

(1,2) உரிய சனி 6 இல் இருப்பது நல்லது. மேலும், குருவின் நட்சத்திரத்தில் சஞ்சரிப்பது சிறப்பானது. எடுக்கும் செயல் நல்லமுறையில் அமையும். கையில் பணம் இருக்கும். பிரயாணவாய்ப்பு உண்டு. (4,11) உரிய செவ்வாய் 10 இல் இருப்பது மத்திம பலன். வீடு, வாகன சுகம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. நண்பாகளால் பிரச்சினைவர இடமுண்டு. (5,10) உரிய சுக்கிரன் 9 இல் இருப்பது நல்லது. ஆனால், நீசமாக இருப்பதால் பலன் செய்யாது. தொழிலில மந்தநிலைதெனபடும். பிள்ளைகளின் செயல்பாடு திருப்திதராது. 7 ஆம் வீடு சுத்தமாக இருப்பதும், குரு சுகம் இருப்பதாலும் திருமணவாய்ப்பு உண்டு. (6,9) உரிய புதன் 11இல் இருப்பதால் உடல் ஆரோக்கியம உண்டு. பகை நட்பாகலாம். பிதாவுக்கும் நல்ல பலன் உண்டு.

**கும்பம்: அவிட்டம்3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி ஐந்தில் இருப்பதை நஞ்சுச் சனியென்பர். இருப்பினும் குருவின் சாரத்தில் இருப்பதால் அதிக தீங்கு செய்யாது. தொடங்கும் வேலைகள் தாமதமாகலாம். பிரயாண வாய்ப்புக்கள் பாதிக்கலாம். வீண் அலைச்சல் ஏற்படலாம். (2,11) உரிய குரு எட்டில் இருப்பதால் கையில் பணம் இருக்காது. நண்பர்களால் செலவு உண்டு. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. (3,10) உரிய செவ்வாய் 9 இல் இருப்பதால் தொழிலில் இலாபம் குறையலாம். இளைய சகோதரத்துக்கும் நல்லதல்ல. (4,9) உரிய சுக்கிரன் 8 இல் இருப்பது நல்லது. ஆயினும் நீசமாக இருப்பதால் நல்ல பலன் செய்யவாய்ப்பு இல்லை. வீடு, வாகன சுகம் இருக்காது. 7க்கு உரிய சூக்கிரன் 9 இல் நீசமாவதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி நிலவாது.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7 இல் இருப்பது விசேஷம். மேலும் நட்புக்கிரகமான சந்திரனில் நட்சத்திரத்தில் இருப்பது மேலும் பலன் சேர்க்கும். எந்த வேலையைத் தொடர்ந்தாலும் நல்ல முறையில் நிறைவேறும். தொழில் முன்னேற்றம் உண்டு. பதவி உயர்வு உண்டு. (2,9) உரிய செவ்வாய் 8 இல் இருப்பது கூடாது. கையில்பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்லதல்ல. அதிஸ்டம் இல்லாமல் போகலாம். (4,7) உரிய புதன் 9 இல் இருப்பது நன்மை செய்யாது.வீடு,வாகன சுகம் இருக்காது. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம் இருப்பினும் குரு 7 இல் இருப்பதால் பலனில் மாறுதல் வரலாம் 6க்குரிய சூரியன் 8 இல் நீசமாவதால் உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். திருடர் பயம் உண்டு. ராசியைச் சனி பார்ப்பதால் எதிர்பாராத சிக்கல் வரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலில் கருகிய நட்பு

நேற்று நடந்த அந்தச் சம்பவத்தை நினைத்துப்பார்க்கும்போது தர்ம சங்கடமாக இருந்தது. 'சீ... நான் அவசரப்பட்டுட்டன்... இல்லை இல்லை நான் அவசரப்படவில்லை. என்றைக்காவது சொல்ல வேண்டியதை இண்டைக்குச் சொன்னால் என்ன? நாளைக்குச் சொன்னால் என்ன?' இவ்வாறு பல கோணங்களில் மனதினில் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தான் தர்சன்.

தர்சனும், லொமியும் சிறு வயதில் இருந்தே ஒரே தரத்தில் படித்து வருபவர்கள். சிறு வயதில் இருந்தே இருவரும் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்துகொண்டு பழகி வந்தார்கள். இந்தப் பழக்கத்தால் நண்பர்களாகவே வலம் வந்தவர்கள்.


ஆனால், காலப்போக்கில் அந்த நட்புக் காதலாக மாறியது. தனது விருப்பத்தை எப்படியாவது லொமியிடம் சொல்ல வேண்டும் என தர்சன் தினமும் நினைத்துக் கொள்வான். இருந்தும் மனதில் ஒருவித அச்ச உணர்வு. 'அவள் சிலவேளைகளில் மறுத்துவிட்டால்..?'என்னுடைய நிலைமை மோசமாகிவிடும். களங்கமில்லாத எமது நட்பின் மேல் எனது காதலால் ஒரு கீறு விழுந்துவிட்டால்... என நினைக்கும் போது அவனது நினைப்பை இடைநிறுத்திக்கொள்வான்.

அவளைச் சந்திக்கும் பொழுதுகளில் எல்லாம் தர்சனுக்கு வார்த்தைகளின் வேகம் நாவோடு வந்து இடைநிறுத்திக்கொள்ளும். "லொமி உங்களிட்ட ஒண்டு கேக்கணும்." என அவன் கேட்கும்போதே "என்ன தர்சன் என்ன சொல்லுங்கோவன்" என அவசரப் படுத்துவாள். அப்பொழுதும் கூட ஒருவித தயக்கம் மேலோங்கிவிட...

"இல்லை லொமி அது வந்து...." என எதையாவது சொல்லி சடைந்துவிடலாம் என முயன்றபோது அதற்கு அவள் "இல்லை தர்சன் எதுவானாலும் பரவாயில்லை சொல்லுங்க, நீங்க எதையோ மறைக்கிறியள்" என அவள் அறிய முற்பட்டபோது தான் அன்று தன் மனதின் உள்ளக்கிடக்கைகளை சொல்லி விட்டான். "லொமி நீங்க என்ன நினைக்கிறியளோ தெரியல்லை. நான் என்ர மனசுல உங்களை நினைச்சுட்டன். என்னால உங்கள மறந்து வாழ முடியாது." என ஒரே வார்த்தையில் தனது ஆழ் மனதின் ஆசைகளை வெளிப்படுத்திவிட்டான்.

"நோ இடியட். நான் உன்னை நல்ல பிரண்டா தான் நினைச்சன். ஆனால், நீ அதைக் களங்கப்படுத்திட்டா. சீ உனக்கு வெட்கமாயில்லை. இப்படிக் கேட்க உனக்கு எப்படி மனம் வந்திச்சு? என் கண்ணிலேயே முழிக்காதே" எனப் பொரிந்து தள்ளிவிட்டு அவ்விடத்தை விட்டு விருட்டென போய்விட்டாள் லொமி.

வீடு திரும்பிய அவளுக்கு எதை நினைத்தாலும் வெறுப்பாக இருந்தது. அன்றிரவு படுக்கைக்குச் சென்றவளுக்குத் தூக்கமே வரவில்லை.'இந்த ஆண்களே இப்படித்தான்' என பலவாறு மனதுக்குள் திட்டிக்கொண்டிருந்தாள். இருந்தும் பெண்ணின் மனம் அல்லவா?நேரம் செல்லச் செல்ல இளகத்




தொடங்கியது. என்னதான் இருந்தாலும் நான் இப்படிப்பேசி இருக்கக் கூடாது. பாவம் தர்சன். என்ன நினைத்தாரோ? அவற்றை மனசில இருந்ததைத் தானே சொன்னார்? நான் அவசரப்பட்டு இப்படிப்பேசிவிட்டேனே என தன்னைத்தானே திட்டிக்கொண்டே தூங்கிவிட்டாள்.

பொழுது நன்றாக விடிந்துவிட்டிருந்தது. இன்று அவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு பாடசாலையில் ஏற்பாடாகி இருந்தது. முதல் வேலையாக தர்சனைச் சந்தித்து மன்னிப்புக் கேட்க வேணும். 'நட்ப வேணுமுன்னா இழந்திடலாம். ஆனா ஒரு மனசைப் புண்படுத்தக்கூடாது. அதுவும் என்னால புண்படுறதை நான் தாங்கிக்கொள்ள மாட்டேன்' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு நிகழ்வுக்குச் சென்றவளின் பார்வை அங்கே தர்சனையே துளாவிக்கொண்டிருந்தது. அங்கே தர்சன் வந்திருக்கவில்லை. அவனைக் காணாததால் பெரிதும் சஞ்சலப்பட்டாள். 'கடவுளே! ஏன் நான் இப்படி நடந்திட்டன். என்னால தானே இந்த இறுதி பிரியாவிடை நிகழ்வுல கூட தர்சன் கலந்துகொள்ளவில்லை 'என நொந்துகொண்டாள். நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போதும் அவளால் அதில் நிலைத்திருக்க முடியவில்லை. அவளது மனது அவளைப்போட்டு உறுத்திக்கொண்டிருந்தது. நிகழ்வுகள் முடிந்து எல்லோரும் விடைபெற்றுக்கொண்ட போது இவளும் விடைபெற்றவளாய் அவசர அவசரமாக தர்சனின் வீடு நோக்கி விரைந்துகொண்டிருந்தாள்.

அப்பொழுது இவளின் எதிரே வந்த நண்பி ஒருத்தி கடிதம் ஒன்றை நீட்டி "இதை தர்சன் உன்னிடம் கொடுக்கச் சொன்னான் எனக் கூறிவிட்டுச் சென்றுவிட அவசர அவசரமாக கடிதத்தைப் பிரித்தவள் பார்வையை தாள்களின் ஊடே விட்டாள்.

''அன்புடன் லொமிக்கு!

நாங்கள் இருவருமே நெடுங்காலமாகவே நல்ல நண்பர்களாக பழகிவிட்டோம். இருந்தும் நான் உன்மேல் ஒரு தலைக்காதலை என் மனதுக்குள்ளேயே வளர்த்துவிட்டேன். என்னால் என்றுமே அதை என் மனதை விட்டு அகற்றிவிட முடியாது. ஏன் எனில் அவ்வளவு ஆழமாக என்னிடத்தில் நீ இடம் பிடித்துவிட்டாய். ஆகையால் தான் என் மனதில் இருந்த விருப்பத்தை உன்னிடம் கூறினேன். ஆனால், நீ அதை ஏற்க மறுத்துவிட்டாய். உன்னிடம் இருந்து இப்படி ஒரு பதில் வருமென நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

உனது உண்மையான நட்பின் முன்னால் என்னால் இனியும் பழக முடியாத தர்ம சங்கடத்தில் தற்போது உள்ளேன். உன் மீது நான் கொண்ட காதல் இந்த ஜென்மத்திலே தீராத நான் செய்த பாவமாகவே நினைக்கிறேன். எனவே எனது தவறுக்கான தண்டனையை நானே எனக்கு வழங்கிக்கொள்கிறேன். நீ எங்கிருந்தாலும் நலமோடு வாழ வேண்டும். அதுவே எனது இறுதி ஆசை.

இப்படிக்கு
தர்சன்.

கடிதத்தைப் படித்து முடித்த லொமிக்கு தலை சுற்றியது. என்ன செய்வதென்றே புரியாமல் தவித்தாள். உடனே சுதாகரித்துக் கொண்டவள் நேரம் செல்லச் செல்ல நிலைமை மோசமாகிவிடும் என்பதை உணர்ந்தாள்.

நேராக தர்சனின் வீட்டை அண்மித்தவள் தாயிடம் தர்சனைப் பற்றி வினவினாள். காலையிலேயே வீட்டை விட்டுப்புறப்பட்டு விட்டதாகவும், கடற்கரை அண்மித்த பூங்கா வரை சென்று வருவதாக கூறிவிட்டுச் சென்றதாகவும் தாயிடம் இருந்து பதில் வந்தது.

கடவுளே தர்சனுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது என இறைவனை வேண்டிக்கொண்டு அவர்கள் இருவரும் பெரும்பாலும் சந்தித்துக்கொள்ளும் அந்தப் பூங்காவை அண்மித்தவள் அந்தப் பெரிய ஆலமரத்தின் கீழ் மறுபுறமாகத் திரும்பியபடி சாய்ந்துகொண்டிருந்த தர்சனை கண்டவுடன் அவளின் இதயத் துடிப்பு வழமைக்குத் திரும்பியது. பெருமூச்சொன்றை விட்டபடியே அருகில் சென்றவள். "தர்சன்... தர்சன்..." மீண்டும் கூப்பிட்டாள். "என்ன தர்சன் இதெல்லாம் என்ன? என் மேல் கோவமா?" எனக் கேட்டுக் கொண்டே அவனைப் பிடித்து உலுக்கினாள். அவன்வேரிழந்த ஆலமரம் போல் உயிரற்ற உடலாய் அவளின் மடியில் சரிந்து விழுந்தான்.

# தினமும் பன்னிரெண்டு

றொபட் லூயிஸ் ஸ்டீவென்சன் (1850 – 1894) என்பவர் ஸ்கொட்லாந்து நாவலாசிரியரும் கவிஞருமாவார். இவரின் Treasure Island (1883), Kidnapped (1886), The Strange case of Dr.Jekyll and Mr Hyde (1889) போன்ற நாவல்கள் உலகப்புகழ்பெற்ற நாவல்களாகும்.

பின்வரும் "தினமும் பன்னிரண்டு (Daily dozen) என்பது றொபேட் லூயிஸ் ஸ்டீவென்சனின் வாழ்க்கைத் தத்துவக் கோட்பாடாகும்.

1. மகிழ்ச்சியாக இருப்பதற்கு உங்கள் மனதைத் தயார் நிலைப்படுத்துங்கள். எளிமையான காரியங்களில் இன்பம் காணப் பழகிக்கொள்ளுங்கள்.

2. உங்களது சூழ்நிலைகளை சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். எல்லோருமே எல்லாவற்றையும் கொண்டிருப்பதில்லை. ஒவ்வொருவரும் வாழ்வின் இன்பத்துடன் கலந்து ஏதோ ஒரு வகை மனத்துயரையும் கொண்டுள்ளனர். கண்ணீரையும் விஞ்சும் சிரிப்பை உண்டாக்குவதே இதற்கான யுத்தி.

3.உங்கள் மீது அதிகூடிய அக்கறை கொண்டவராக இருக்காதீர்கள். மற்றவர்களுக்கு நிகழும் துரதிஷ்டங்களிலிருந்து உங்களை ஏதோ ஒரு வழியில் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் எண்ணாதீர்கள்.

4.ஒவ்வொருவரையும் நீங்கள் மகிழ்ச்சிப்படுத்த முடியாது. விமர்சனம் உங்களைக் கவலைப்படுத்த அனுமதிக்காதீர்கள்.

5.உங்களது அயலவர்கள் உங்களது வாழ்க்கை நியமங்களை நிர்ணயித்துக் கொள்ள அனுமதிக்காதீர்கள். நீங்கள் நீங்களாகவே இருங்கள்.

6. நீங்கள் செய்வதில் மகிழ்ச்சியடையும் காரியங்களைச் செய்யுங்கள். ஆனால் கடனிலிருந்து விலகி விடுங்கள்.



7.தொல்லைகளை வலிந்து பெற்றுக் கொள்ளாதீர்கள் கற்பனையான சுமைகள் உண்மையான சுமைகளை [illegible] மானவையாக உள்ளன.

8.வெறுப்பானது ஆத்மாவை நச்சுத்தன்மையாக்குவதால் பகைமைகளை அல்லது விரோதத்தை நினைவில் பேணாதீர்கள். உங்களைத் துன்பப்படுத்தும் மனிதர்களை விலக்கிக் கொள்ளுங்கள்.

9. அதிகளவு ஆர்வங்களைக் கொண்டிருங்கள். உங்களால் பயணம் செய்ய முடியாவிடின்புதிய இடங்களைப் பற்றி வாசித்து அறிந்துகொள்ளுங்கள்.

10.நடந்து முடிந்தவற்றைக் கிளறாதீர்கள். மனத்துயரங்களையும், தவறுகளையும் நினைத்துநினைத்து ஏங்கி உங்களது வாழ்க்கையை வீணடித்துவிடாதீர்கள்.

11.உங்களை விடவும் குறைந்த செல்வச் செழிப்புடையவர்களுக்கு நீங்கள்செய்யமுடிந்ததைச் செய்யுங்கள்.

12.ஏதாவது ஒன்றில் அலுவலாக இருங்கள். அலுவலாக இருக்கும் ஒருவருக்கு கவலையாக இருப்பதற்கு நேரமே கிடையாது.

தகவல் மூலம்: The speaker's Quote Book by Roy B.Zuck.
தமிழாக்கம்: மார்க்கண்டு கண்ணன் [illegible]ம்.

## மக்களை மகிழ்விக்கும் கரடி

அமெரிக்காவில் உள்ள சன்டிகோ மிருகக்காட்சிச்சாலையில் மக்களைக் கவர்ந்த கரடி ஒன்று உள்ளது.இந்தக் கரடி



அங்குள்ள நீச்சல் குளத்தில்செய்யும் விளையாட்டு அனைவரையும் கவர்ந்துள்ளது. பிளாஸ்டிக்கில் செய்யப்பட்ட பரங்கிக் காயை தண்ணீருக்குள் தள்ளிவிட்டு அது விளையாடுவது கண்கொள்ளாக் காட்சியாகும். கரடியின் இந்த விளையாட்டை ரசிக்க ஏராளமான மக்கள் படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

சுவிஸில் உங்கள் அபிமான
சுடர் ஒளி
விளம்பர முகவர்
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவர்ச்சிக்கு எதிரி - சினேகா





**தீபாவளி ஷொப்பிங் முடிந்துவிட்டதா சினேகா?**

முடிந்தது. பதினைந்தாயிரம் ரூபாவில் ஒரு பட்டுப் புடைவையும் ஒரு மார்டன் டிரேஸும் எடுத்தேன். தீபாவளி அன்று பட்டுப்புடைவை சரசரக்க, பட்டாசு வெடித்துக் கொண்டாடும் சுகமே தனி.

**எந்த நிலமையிலும் கவர்ச்சி காட்டி நடிக்க மாட்டேன் என்று உறுதியாக இருக்கும் காரணத்தால், உங்களைத்தேடி நிறையப் படவாய்ப்புக்கள் வராது அல்லவா?**

கவர்ச்சி காட்டி நடிக்க மாட்டேன் என்று சொல்லும் காரணத்தால் என்னைத்தேடி குறிப்பிட்ட படவாய்ப்புக்கள் மட்டுமே கிடைக்கின்றன. நிறையப் படங்களில நடிக்க வேண்டும் என்பதற்காக கவர்ச்சி காட்டி நடிக்க முடியுமா என்ன? நான் சினிமாத் துறைக்கு வந்தபோது எடுத்த ஒரு உறுதிமொழி என்ன தெரியுமா? எந்தச் சூழ்நிலையிலும், யார் வற்புறுத்தினாலும் சரி, துளி அளவு கூட கவர்ச்சி காட்டி நடிக்க மாட்டேன் என்பதுதான். வலுக் கட்டாயமாக நான் கவர்ச்சி காட்டியாக வேண்டும் என்று என்னை யாரும் வற்புறுத்தியது இல்லை. எனது கொள்கையில் கண்டிப்பாக இருப்பதால், என்னைத் தேடி வரும் படவாய்ப்புகள் எல்லாமே கண்ணியமான கேரக்டர்கள் கொண்டதாகவே இருக்கின்றன. இதை விட ஒரு நடிகைக்கு வேறென்ன பெருமை வேண்டும்?



புடைவையில் கூட கவர்ச்சி காட்டி நடிக்க முடியும் என்பதை பல படங்களில் நிரூபித்து இருக்கிறேன். கவர்ச்சி என்பது என்ன? ஒரு முறை பார்த்தால் மீண்டும் பார்க்கத் தூண்டும் அந்த ஈர்ப்புத்தானே? இப்போது ஆயுதம் படத்தில் முதன்முறையாக மடிசார் புடைவை கட்டிக் கொண்டு நடித்து இருக்கிறேன். அந்தப் படத்தில் நான் எவ்வளவு அழகாக இருக்கிறேன் பாருங்கள்.

**போஸ், அது ஆகிய இரு படங்களும் வெற்றிகரமாக ஓடிவருகின்றன. பேய் படத்தில் நடித்த அநுபவம் எப்படி?**

அது ஒரு வித்தியாசமான அனுபவமாகத்தான் இருந்தது. நிஜமாகவே அது படத்தில் நடித்து முடித்து வீட்டுக்குச் செல்லும்போது, யாரோ என்னைப் பின் தொடர்ந்து வருவது போலத்தோன்றும். உடனே நடுங்குவேன். பிறகு என்னை நானே தேற்றியபடி இது வெறும் பிரமை என்று நிம்மதிப் பெருமூச்சு விடுவேன். இந்தப் படத்தில் முதன்முறையாக மேக்அப் போடாமல் நடித்து இருக்கிறேன். பார்வையில் வித்தியாசம் தெரிய வேண்டும் என்பதற்காக, கண்களில் காண்டாக்ட் லென்ஸ் அணிந்து நடித்தேன். ஒரே சமயத்தில் போஸ், அது ஆகிய படங்கள் வெற்றிகரமாக ஓடுவதை நினைத்து மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

**ஆங்கிலப் படத்தில் நடிக்கப்போவதாக ஒரு செய்தி கேள்விப்பட்டோமே? நிஜமா?**

அந்த ரகசியம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது? ஆங்கிலப் படவாய்ப்பு என்னைத்தேடி வந்துள்ளது நிஜம்தான். லாஸ்ஏஞ்சல்ஸ் ராம் என்பவர் இயக்குவதாக கதை அனுப்பி வைத்துள்ளார். அந்தப் படத்தில் நடிக்கப்போகும் நல்ல செய்தியை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

# சர்ச்சைகளின் நாயகன்



பிரச்சினைகள் கமலுக்குப்புதிதல்ல. பிரச்சினைகளை கடந்து படம் பண்ணுவதும் கமலுக்குப்புதிதல்ல.

எனது அடுத்த படம் மும்பை எக்ஸ்பிரஸ் என்று அறிவித்தாரோ, அன்றே தொடர் வண்டி போல் பிரச்சினைகள். மாதுரி தீட்சித் படத்திலிருந்து ஜகா வாங்கினார். தபுவும் இடவலமாக தலையாட்டி விட்டார். சாதிக் கட்சிகளிடமிருந்து பெயரை மாற்று என்று மிரட்டலும் வந்து விட்டது.

இது தவிர கர்நாடக சினிமாவினருடனும் கமல் சிலம்பம் ஆடி ஜெயிக்க வேண்டியிருக்கிறது. காரணம் மும்பை எக்ஸ்பிரஸ் தமிழ்,இந்தி, கன்னடம் என மூன்று மொழிகளில் தயாராகிறது.

தீவிர யோசனைக்குப்பின் இந்தப் படத்தில் இந்தி மற்றும் கன்னட படவுலகைச் சேர்ந்த முன்னணி நடிர்களில் தலா ஒருவரை நடிக்க வைக்க தீர்மானித்திருக்கிறார் கமல். இதனால் கன்னட படவுலகினர் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவார்கள் என்பது கமலின் கணக்கு.

படம் பண்ண ஸ்கிரிப்டை ஒழுங்குசெய்தால்மட்டும்போதாது கன்னடர்களையும் காக்கா பிடிக்க வேண்டியுள்ளது.

இப்படியே போனால் கலைஞர்களும் கட்ட பஞ்சாயத்துக்காரர்களாக அவதாரம் எடுத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# எனக்கு எதிரியாய் இருக்க உனக்குத் தகுதி இல்லை

## - அஜித் பாடலில் விஜய்க்கு சாட்டை



விஜய்யைப்பிடிதது உலுக்குமளவுக்கு பாட்டுப்போட்டு பகிரங்கமாகச் சீண்டியிருக்கிறார் அஜித்.

அட்டகாசம் படத்தில் உனக்கென்ன என்றொரு ஆக்ரோஷமான பாட்டு.இதை ஆவேசமாகப் பாடியிருக்கிறார் அஜித்.

பாட்டில் வரிக்கு வரி சாட்டையடிகள் தெறிக்கின்றன. ஏற்றி விடவோ தந்தையுமில்லை. என்னை நானே சிகரத்தில் வைத்தேன். அதனால் உனக்கென்ன? என்ற வரிகள் விஜய்க்கான கேள்விகள் என்றே தெரிகிறது.

இது மட்டுமல்ல. எனக்கொரு எதிரியாய் இருப்பதற்கு உனக்கொரு தகுதியில்லை என்று எச்சரிக்கை விடுக்கிறார் அஜித். இளைய தளபதி ரசிகர்களும் இதனால் சூடேறிப்போய்த் திரிகிறார்கள். ஆனால், விஜய்யோ, அந்தப் பாடல்களையெல்லாம் கேட்பதில்லை என்று உதடு பிதுக்கிவிட்டாராம். அதுமட்டுமல்லாத தனக்கும் அஜித்துக்கும் இடையில் எதுவித சண்டையும் இல்லை என்றும் கூறுகிறார். நம்பினால் நம்புங்கள்.



# நெறஞ்ச மனசு - விஜயகாந்

படு உற்சாகமாக இருக்கிறார் இயக்குனர் சமுத்திரகனி. 'உன்னைச் சரணடைந்தேன்' படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமான இளைஞர். இரண்டாவது படமாக விஜயகாந்தை வைத்து ஜி.ஜே. சினிமா பேனரில் 'நெறஞ்ச மனசு' படத்தை இயக்கி முடித்திருக்கிறார். தீபாவளி வெளியீடாக இப்படம் வருகிறது.

நூற்றி நாற்பது படத்தில் ஒரு நூறு படமாவதுகிராமத்துக்கதையா இருக்கும். இப் படத்தில் அப்படியென்ன தான் கதை? அரசாங்கத்தாலும், அதிகாரிகளாலும் ஒதுக்கப்பட்ட ஒரு கிராமத்துக்கு அங்கீகாரம் கிடைக்க போராடற ஐயனார் கேரக்டர் கப்டனுக்கு. மதுரை மண்ணில் நடக்கிற கதை. எப்பவோபொழப்புக்காகதிருடப்போன ஒருசமூகத்தைகுற்றப்பரம்பரையாசித்திரிச்சு கைநாட்டுகளாக்கிவிட்ட ஜனங்களை, படிக்க வைத்து பாதை காட்டுற கடவுள். அவருக்கு ஏற்படுகிற பிரச்சினை என்று ஒரு வாழ்க்கையின் பதிவை எந்தப் பாசாங்குமில்லாமல் அதன் போக்கில் இயல்பாய் சொல்லியிருக்கிறார் இயக்குனர் சமுத்திரக்கனி.

# தனுஷின் முடிவால் சந்தோஷத்தில் சூர்யா!


சூர்யா– ஜோதிகா நிஜமாகவே டூயட் பாடுகிறார்களாம். எல்லாம் தனுஷ்– ஐஸ்வர்யா காதல் கல்யாணம் தந்த தைரியம் தான்.

நீண்ட நாட்களாகவே பதுங்கிப் பதுங்கிக் காதலித்து வருகிற ஜோடி சூர்யா– ஜோதிகா சமயங்களில் பகிரங்கமாகக் கூட இணைந்து திரிவார்கள். ஆனால், இதைப்பற்றிக் கிசுகிசுத்தால் மட்டும் கோபத்தில் கொந்தளித்துப்போவார்கள். இனிமேல் இதெல்லாம் பழைய கதைாகிவிடும் போலும்.

ஆம். உச்ச நடிகரின் மகளையே அச்சமில்லாமல் காதலித்து, கல்யாணத்துக்கு அட்சதை தூவ வைத்துவிட்ட மச்ச நடிகர் தனுஷைப் பார்த்து சூர்யாவும் துணிந்து முடிவெடுத்துவிட்டாராம். அநேகமாக வருகிற ஆங்கிலம் அல்லது தமிழ்ப்புத்தாண்டுக்குள் அடுத்த நட்சத்திர திருமணம் பற்றிய நல்ல செய்தி வரும் என்கிறார்கள். இனிமேல் கிசுகிசு எழுதாதீங்கப்பா.

# தனுஷ் - ஐஸ்வர்யா 18ஆம் திகதி திருமணம்

## இத்தனை அவசரம் ஏன்?



கோடம்பாக்கத்தின் இளம் கதாநாயகனான தனுஷ்ஷுக்கும் சுப்பர் ஸ்ரார் ரஜினியின் மகள் ஐஸ்வர்யாவுக்கும் இடையில் எதிர்வரும் 18ஆம் திகதி திருமணம்.தமிழ்த்திரையுலகத்தையே ஆச்சரியத்தில்ஆழ்த்தியுள்ளது இந்த விடயம்.

அண்மைக் காலமாகவே தனுஷ்–ஐஸ்வர்யா காதல் விவகாரம் காரசாரமாக அலசப்பட்டு வந்தது. ஆனால் "ஐஸ்வர்யா எனது அக்காவின் நண்பி. அவருக்கும் எனக்கும் இடையே அப்படி ஏதும் கிசுகிசு கிடையாது" என்றார் தனுஷ். இப்போது என்டாவென்றால் திடீரெனத் திருமண அறிவிப்பு வந்துள்ளது.

பத்திரிகைகளில் வந்த கிசுகிசுக்கள் காரணமாகத்தான் இந்தத் திருமணத்தை செய்யவேண்டி வந்தது என்று, சொல்லி வைத்தாற்போல் ரஜினியும் தனுஷும் அறிக்கை விட்டுள்ளனர். ஆனால் 24 வயதான ஐஸ்வர்யாவை 21 வயதேயான தனுஷுக்கு கட்டிக்கொடுக்க வதந்திகள் மட்டுமே காரணம் என்பதை நம்ப மறுக்கின்றது கோடம்பாக்கம்.

தனுஷ் – ஐஸ்வர்யா காதல் விவகாரம் தெரிந்ததும், முதலில் ஓடிச்சென்று ரஜினியுடன் பேசி காரியத்தைச் சாதித்து விட்டார்





தனுஷின் அப்பா கஸ்தூரிராஜா. முதலில் இந்த விவகாரத்தால் கொஞ்சம் 'அப்செட்' ஆகிப்போன ரஜினி பின்னர் சமாதானமாகிப் போய்விட்டாராம். ஐஸ்வர்யாவைத் தனது நெருங்கிய நண்பரும் மலையாள நடிகருமான மோகன்லாலின் மகனுக்கு கட்டிவைக்கும் நோக்கம் அவருக்கு இருந்ததாம்.

இப்போது எல்லாம் போய் டும்டும் கொட்டும்ஷனுக்குவிவகாரம் வந்து விட்டது. இந்தத் திடீர் திருமணம்சிம்புவுக்குத் தான் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. ஐஸ்வர்யாவுடன் முதன் முதலில் கிசுகிசுக்கப்பட்டவர் சிம்புதான். சினிமாவில்தான் இருவருக்கும் போட்டி என் றால் வாழ்க்கையிலுமா என்றுஇப்போது கிசுகிசுக்கிறது சினிமா வட்டாரம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்மலானை இந்துக் கல்லூரியின் முத்தமிழ் விழா

இரத்மலானை இந்துக் கல்லூரி சமீபத்தில் இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் முத்தமிழுக்கான விழாவை நடத்தியது. தமிழர் பண்பாட்டிற்கு அமைய பிரதம அதிதி கம்பவாரிதி ஜெயராஜ், சிறப்பு அதிதிகள் க.வி.விக்னேஸ்வரன், சு.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் மங்கள வாத்தியம் முழங்க பெருந்திரள் மக்களுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு, விழா நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்த முத்தமிழ் விழாவில் பொருத்தமானவர்களுக்கு



பொருத்தமான முறையில் விருதுகளும், கௌரவங்களும் வழங்கப்பட்டன. 1983 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடர்களுக்கு உள்ளான இந்த தமிழ்ப் பாடசாலையைக் கட்டிக்காப்பதில் முக்கிய இடத்தை வகித்த உச்ச நீதிமன்ற நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.

இப்பாடசாலையின் பழைய மாணவர், இன்று உயர் நீதிமன்ற நீதியரசராக பதவி வகிக்கும் ஸ்ரீகாந்தராஜாவை கௌரவித்தது மாணவர்களுக்கோர் ஊக்கு விப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை. மேல் மாகாண முதல் அமைச்சரும், கல்வி அமைச்சருமான ரெஜினோல் குரே, கூட்டுறவு, சுகாதார, போக்கு வரத்து, கலாசார அமைச்சர் கெற்ற பத்மகே, சட்டத் தரணியும் மாகாணசபை அங் கத்த வருமான கீர்த்தி உடவந்த, போன்றோர் விழாவில் கௌரவிக்கப் பட்டதுடன் முதல் அமைச்சரும், கல்வி அமைச் சருமான ரெஜினோல் குரே தமிழ்ப் பாடசாலை ஆசிரி யர்களின் சேவையைப் பாராட்டி கௌரவித்தது மிகப் பொருத்தமாகவும், சிறப் பாகவும் அமைந்தது. இது இன ஐக்கியத்தையும் உலகுக் கெடுத்தியம்பியது. இதனை ஏற்பாடு செய்த கல்லூரி முதல்வரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.



உயர் நீதிமன்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், உயர் நீதிமன்ற நீதியரசர் சு.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோக்கு சுவாமி ஆத்மகனானந் தஜியால் கௌரவம் வழங்கப்படுகிறது. அருகில் கல்லூரி அதிபர் ந.மன்மதராஜன்.



கம்பவாரிதி ஜெயராஜ் தனது உரையில், தமிழர் எத்தனை பேர் தமிழை உணர்ந்து செயற்படுகிறார்கள். யாரோ செய்த செயல்களையும், தியாகங்களையும் பேசிக் கொண்டே இருக்கிறோம் என்று கூறியது சிந்திக்கவேண்டிய விடயமே. கலைநிகழ்வுகள் அத்தனையும் சிறப்பாக அமைந்தன என்றார். கவியரங்கு, நாடகம், நாட்டிய நாடகங்கள் போன்றவை நிகழ்வுகளில் சிறப்பானவையாகத் திகழ்ந்தது குறிப்பிடத்தக்கது. முத்தமிழ் விழாவின் நினைவாக வெளியிடப்பட்ட 'இந்து சாகரம்' என்ற மலர் பல நல் ஆக் கங்களைத் தாங்கி வந்தது போற்றுதற்குரியது.

யனேஸ்வரன்

கலை அமுதம்

மானா மக்கீன் எழுதிய 25 ஆவது நூல் 'வரலாற்றில் வள்ளல் ஹபீபு முஹம்மது அரசர்'. இதன் வெளியீட்டு விழா சமீபத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நடைபெற்றது. இந்தியாவின் கீழ்க்கரையைச் சேர்ந்த கலாநிதி றஹ்மத்துன் நிஸா, பி.எஸ்.அப்துல் ரகுமான், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், இந்திய தேசிய காங்கிரஸ் மாநில பொறுப்பாளர் எஸ்.எம். கிதாயதுல்லா, நாடாளுமன்ற உறுப்பினர் ஹசனலி ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம்.



அறிவிப்பாளரும், கவிஞருமாகிய எஸ்.ரபீக் எழுதிய 'எழுத மறந்த கவிதைகள்' நூல் வெளியீட்டு விழா அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தில் நடை பெற்றது. வித்யாஜோதி எம்.ஏ. உதுமாலெப்பை அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா கலந்து கொண்டார்.

அறிமுக உரையை கவிஞர் அன்புமுஹினும், கவிவாழ்த்தினை கவிஞர் பாலமுனை பாறூக்கும், சிறப்புரையை ஏ.ஆர்.எம்.ஜிப்ரியும், விமர்சன உரையை மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத்தும் நிகழ்த்தினர்.

எஸ்.ரபீக் அவர்களின் 'எழுத மறந்த கவிதைகள்' நூலுக்கு முன்னுரை வழங்கியுள்ளார் மு.மேத்தா.




# பாரிஸில் தேர்த் திருவிழா

பாரிஸ் நகரில் 9 ஆவது தடவையாக பஞ்சமுக விநாயகப் பெருமான் தேர்ப்பவனி இடம் பெற்றுள்ளது. ஸ்ரீ மாணிக்க பஞ்சமுக விநாயகப் பெருமான், வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமான் சகிதம் அழகிய திருதேர்களில் பாரிஸ் மாநகர வீதிகளில் பவனி வந்த கண்கொள்ளாக்காட்சியை பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டு களித்தனர்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இத் தேர்ப்பவனியை பல பிரெஞ்சுத் தொலைக்காட்சிகள் மற்றும் செய்தி ஊடகங்கள் முக்கியத்துவம்கொடுத்து பிரசுரம் செய்தன. பிரான்ஸிலிருந்து வெளிவரும் தினசரி பத்திரிகையான 'பரீஸியன்' 20ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டதாக வியந்து எழுதியிருந்தது.

உலகின் வேறுபல நாடுகளின் தொலைக்காட்சி சேவைகளும் பாரிஸ் தேர்த்திருவிழாவிற்கு முக்கியத்துவம் கொடுத்து ஒளிபரப்புச் செய்திருந்தன. வானொலி நிலையங்கள் 4 மணிநேர தேர்த்திருவிழா நிகழ்ச்சியை நேரடி அஞ்சல் செய்தன. பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்த மண்ணில் மாபெரும் இந்துக்கள் கலாசார நிகழ்வாக இதனைக் கொண்டாடி மகிழ்ந் தனர். பல லட்சம் மக்கள் கண்டும், கேட் டும் பெருமிதம் அடைந்தனர்.

பாரிஸின் புற நகர்ப் பகு







திக ளி லி ருந்தும் அமெரிக்கா, கிறிஸ் போன்ற நாடுகளில் இருந்தும் பல்லினதேசத்தவரும் தேர்த் திருவிழாவில் கலந்து சிறப்பித்தனர். இலங்கை, இந்தியா தூதராலயங்களைச் சேர்ந்த முக்கியபிரமுகர்களும் இத்தேர்ப்பவனியில் கலந்து ஆதரவு நல்கினர்.

குறிப்பாக இந்தியாவின் ரிஷிகேஷ் கீதபவன் ஆச்சிரமத்தைச் சேர்ந்த டாக்டர் சியாம்தாஸ்ஜி சுவாமிகள், றெனியோன் நாட்டைச் சேர்ந்த அட்வஜானந்த சுவாமிகள் ஆகியோர் தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டு பக்தர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கினர்.

வழமையைவிட இன்னும் சிறப்பாக, வீதி மருங்கும், வர்த்தகர்களும், பக்கத்தர்களும் வீதியை மஞ்சள் நீரால் கழுவி சுத்தம் செய்து மாவிலை தோரணங்களால் அலங்கரித்து பக்தர்களுக்கு சிற்றுண்டி வகைகள் மற்றும் தாகசாந்தி வழங்கி சிறப்பித்தனர். மதிய உணவு இலவசமாக வழங்கப்பட்டது. தேர்பவனியின் போது பல ஆயிரக்கணக்கான தேங்காய்கள் சிதறி அடிக்கப்பட்டதை முக்கியமாக வேறுநாட்டவர்கள் ஆச்சரியத்தோடு பார்த்து மகிழந்தனர். பகல் 11.00 மணியிலிருந்து பிற்பகல் 4.00 மணிவரை பாரிஸின் குறிப்பிட்ட பிரதான வீதிகளில் வாகனங்கள், பஸ்வண்டிகள் வராது முன்கூட்டியே நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. மேளதாளங்கள், குழந்தைகள், ஆண்கள், பெண்களின் காவடிகள், கற்பூரச் சட்டிகள், பாற்குடம், என பக்திசிரத்தையுடனான பக்தர்களின் நேர்த்திகள் தேர்ப்பவனியை மேலும் அழகுறச்செய்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவீனமானவர்களா பெண்கள்...?

அன்றைய காலம் தொட்டு பெண்ணியம் பற்றிய ஆய்வு நூல்களும், பொதுவான அபிப்பிராயங்களும் பெண்களுக்கு இரண்டாம் இடத்தையே ஒதுக்கியுள்ளன. ஆண்கள் வேலை செய்பவர்களாகவும், பெண்கள் வெறுமனே சமைப்பதற்கும், படுக்கையைப் பகிர்வதற்கும் தான் என்ற ரீதியில் தொடர்ந்து பெண்கள் பற்றி சித்திரிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், இந்த நிலைப்பாடு இன்று மாறத் தொடங்கியுள்ளது, கணிசமான அளவு முன்னேற்றம் கண்டுள்ளது என்று கூறலாம். இன்று பெண்கள் விமானம் ஓட்டுகின்றனர். விண்வெளிக்குச் செல்கின்றனர். களத்தில் ஆண்களுக்குச் சரிக்குச் சமனாக நின்று எதிரியை எதிர்த்துப் போராடுகின்றனர். பெரிய தொழில் நிறுவனங்களை நிர்வகிக்கின்றனர். கல்லூரி முதல்வர்களாகவும், வைத்திய நிபுணர்களாகவும், கட்டடப் பொறியியலாளர்களாகவும் திகழ்கின்றனர்.

உடலமைப்பு ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் ஒரே வயதுடைய ஆண், பெண் இருபாலாரையும் ஒப்பிட்டுப்பார்க்கும் போது உயரம், நிறை, பலம் ஆகியவற்றில் ஆண்கள் பெண்களை விடக் கூடியவர்களாகவே உள்ளனர். மேலும், பெண்ணின் வாழ்க்கையில் பிரத்தியேகமாக ஏற்படுகிற உடற்தொழிலியல் மாற்றங்களான மாதவிடாய் வருதல், மகப்பேறு அடைதல் ஆகிய விடயங்களையும் பெண்களின் பலவீனங்களாகப் பார்க்கின்றனர். மேற்கூறப்பட்ட இரண்டு காரணங்களையும் மனதில் நிறுத்திப் பெண்களை இரண்டாம் இடத்தில் நிறுத்தியுள்ளனர். ஆனால், இக் காரணங்கள் அனைத்தும் பெண்களின் பலவீனம் அல்ல. அவை பெண்களின் பலம் என்று வாதிடும் காலம் வந்துவிட்டது. இதற்குப் பல ஆய்வுகளும் உறுதுணையாக நிற்கின்றன.

உளவியல் ரீதியாக ஆண்களிலும் பார்க்கப் பெண்கள்பல மடங்கு பலம் வாய்ந்தவர்கள் என்றும் அவர்கள் தலைமைப் பதவியை வகிக்கத் தகுதி பெற்றவர்கள் என்றும் கூறுகின்றனர்.

இவ்வாறு ஆய்வுகளும், பரீட்சார்த்த செயற்பாடுகளும் பெண்களின் பலத்தை வெளிக்கொண்டு வந்திருக்கும் இவ்வேளையில், பெண்களும் பல பரிணாம வளர்ச்சிகளைத் தமது செயற்பாடுகளூடாகக் காட்டி வருகின்றனர். எனினும் இன்றும் கூட எம்மத்தியில் பெண்களைப் பலவீனமானவர்களாகவும், இரண்டாம் தர நிலையிலுள்ளவர்களாகவும் பார்க்கின்ற நிலை காணப்படுகிறது. இந்த நிலை மாற வேண்டுமாயின் முதலில் பெண்கள் தமது பலத்தினை அறிந்து வைத்திருக்க வேண்டும். அடுத்ததாக என்னென்ன விடயங்களை வைத்துப் பெண்களைப் பலவீனமாக எடை போடுகின்றனர் என்று அறிந்து அவை, ஏன் பலவீனமான விடயங்களாகக் கருதப்பட்டு வந்தன என்பதையும் நோக்க வேண்டும். மேலும், இவ்விடயங்கள் யாவும், இன்று பலமானவையாகச் செய்யப்படுகின்றன என்ற விஞ்ஞான ரீதியான ஆய்வு உண்மையும் அறிந்திருக்க வேண்டும்.

முதலாவதாக மதக் கோட்பாடுகள் பெரும்பாலும் பெண்ணை ஆணுக்குக் கீழ்ப்பட்டவள் என்றும், ஆணுக்கு அடிமையானவள் என்றும் சித்திரிக்கின்றன.



இன்றும் மக்களிடையே பெரும் ஆதிக்கத்தைப் பெற்றுள்ள புராண, இதிகாசக் கதைகளும் பெண்களை ஆண்களின் அடிமைகளாகவே படைத்திருக்கின்றன. குழந்தைப் பருவத்தில் ஆணும், பெண்ணும் சரி சமமாக வளர்கின்றனர், வளர்க்கப்படுகின்றனர். ஆனால், பெண்கள் பூப்பெய்கின்ற போது உடல், உள ரீதியாகப் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதனால் சமூகம் அவளின் செயற்பாடுகளையும், சுதந்திரத்தினையும் மட்டுப்படுத்தியிருந்தது. அக் காலத்தில் பெண் பூப்பெய்தினால் வீட்டைவிட்டு சுதந்திரமாக நடமாட முடியாமல் தடுக்கப்பட்டிருக்கிறாள். அதன் உச்சக்கட்டமாக மாதவிடாய்க் காலத்தின்போது அவள் வாழும் வீட்டில் இருந்து கூடத்தள்ளி வைக்கப்பட்டிருக்கிறாள். எதுவித வேலையும் இன்றி வீட்டின் ஒரு மூலையில் கைதி போல் அடைக்கப்பட்டிருக்கிறாள். ஆனால், இன்று பெண்கள் மாதவிடாயின்போது நாளாந்தம் செய்து கொண்டு வந்த சகல பணிகளையும் இடைநிறுத்தாது செய்கின்ற நிலையினைக் காண்கிறோம்.

மாதவிடாய் மாதம் ஒரு முறை ஏற்படுகின்றபோது நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு இரத்தப்போக்கு ஏற்படும். இது காயத்தின்போது ஏற்படுகிற குருதி இழப்புப் போல் சடுதியாக ஏற்படுகிற குருதி இழப்பு அல்ல. ஓமோன்களின் செயற்பாட்டால் ஒரு மாத காலமாகப் பருமன் தடித்து வழமைக்கு மாறாக குருதி விநியோகத்தைப் பெற்றிருந்த கருப்பை உட்சுவர் உடைந்து உதிர்வதனாலேயே இரத்தப்போக்கு ஏற்படுகிறது. இதன்போது ஐந்து நாட்களுக்கும் சேர்த்து ஆகக் கூடுதலாக 300 மில்லி லீற்றர் இரத்தமே வெளியேறுகிறது. எந்த ஒரு பெண்ணும் 18 வயதுக்கு மேல் 500மி.லீற்றர் இரத்தத்தை உடலில் எந்தவித பாதிப்பும் இன்றி இழக்கலாம் என்பது ஆதார பூர்வமான உண்மையாகும். இந்த அடிப்படையில் தான் இரத்த தானம் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு இரத்த தானம் செய்கின்ற போது உடலில் பல நன்மைகள் ஏற்படுகின்றன. இவ் இழப்புக்கு ஈடாக புதிய இரத்தம் இரு கிழமைகளில் உருவாகிவிடுகின்றது. இதனால், இரத்தத்தில் புதிய அணுக்கள் சேருகின்றன. இதே போன்று பெண்களும், மாதாமாதம் இரத்தத்தை வெளியேற்றுகின்ற போது அவ் இரத்தம் இரு கிழமைகளில் ஈடுசெய்யப்பட்டுக்கொண்டே வருகின்றது. இதனால் உடல் புதுத் தெம்பு பெறுகிறது. ஆகவே, பெண்கள் மாதவிடாய் காலத்தின்போது ஓய்வெடுக்காமல் வேலை செய்யக்கூடிய உடல், உள பலம் உண்டு என்பதே உண்மையாகும்.

பெண்ணானவள் ஒரு புதிய உயிரை பத்து மாதங்கள் தன்னகத்தே சுமந்து பிரசவ வேதனையைத் தாங்கி அவ்உயிரை வெளிக் கொணர்ந்து உலகுக்குத் தருகிறாள். ஓர் உயிரைப் பிரசவிப்பது என்பது பெரிய கடமை. ஆண்களுக்குக் கிடைக்காத பெரும் பாக்கியம் பெண்களுக்குக் கிடைக்கின்றது என்றே கொள்ள வேண்டும்.

இறுதியாகப் பெண்ணில் ஏற்படுகின்ற சில தவிர்க்க முடியாத உடற் தொழில் மாற்றங்களினால் அவள் கடமையில் பின் தங்கும்போது அதனைப் பலவீனமாகப் பார்க்கும் நிலை தான் அன்று இருந்துள்ளது. இன்று இதனைப் பலமாகப் பார்க்கும் காலம் தொடங்கிவிட்டது. இதற்குப் பெண்கள் அனைவரும் தம்மிடம் உள்ள பிற்போக்குச் சிந்தனைகளைக் களைந்து தமது ஆற்றல் திறனையும், முற்போக்குச் சிந்தனையையும் வளர்க்க வேண்டும். அத்துடன் அறிவியல் ரீதியாகவும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இவ்வாறு செயற்படும்போது பெண்கள் ஆண்களுக்குச் சமனான பலமுள்ளவர்களாகத் திகழ்வார்கள் என்பதில் எதுவித ஐயமுமில்லை.


## இவ்வார பொன்மொழி

*உங்கள் அதிஷ்டத்தை உருவாக்கும் சிற்பி நீங்கள் தான்.*




## தாய்ப்பால் கொடுக்காவிடின்...

குழந்தைக்குத் தாய்ப்பால் தான் சிறந்த உணவு. ஆனால, நவநாகரிக உலகில் தாய்மார்கள் சரிவர தாய்ப்பால் கொடுப்பதில்லை. இது பற்றி 94 வளரும் நாடுகளில் உலக சுகாதார நிறுவனம் ஆய்வு நடத்தியது. 6 மாத குழந்தைகளுக்கு 39 சதவீதம் தான் தாய்ப்பால் ஊட்டப்படுகிறது. 61 சதவீதம் குழந்தைகளுக்கு சரியாக தா[illegible]பால் ஊட்டப்படுவதில்லை என்பது [illegible]தில் தெரிய வந்தது.



தாய்ப்பாலுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி உள்ளது. தாய்ப்பால் குடிக்காத குழந்தைகளின் உடல் நலம் பாதிக்கும். வயிற்றுப்போக்கு ஏற்படும். நிமோனியாக் காய்ச்சல் வரும் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

## பியூட்டி டிப்ஸ்



பற்கள் பளபளப்பாக இருக்க எலுமிச்சைச்சாறுடன் உப்புக் கலந்து பிரஷ் செய்யுங்கள்.

உங்கள் கூந்தல் பளபளப்பாகவும், கருமையாகவும் இருக்க உணவில் எலுமிச்சைச் சாற்றைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

தோடம்பழச் சாற்றை முகத்தில் தடவி 20நிமிடம் கழித்து முகம் கழுவினால் முகம் பளபளப்பாகப் பொலிவுடன் தோன்றும்.

பப்பாளிச் சாறு தடவினால் வியர்வைக் குரு, கொப்பளங்கள் மறைந்து போகும்.

கொத்தமல்லி இலையை அரைத்துப் பூசினால் முகம் வசீகரமாக மாறும்.

குளிப்பதற்கு முன்பு மஞ்சள் தூளையும், நல்லெண்ணையையும் கலந்து முகத்தில் தடவி 5 நிமிடம் காய விடவும். அதன் பின்பு வெதுவெதுப்பான நீரால் முகத்தைக் கழுவினால் முகம் பளபளப்பாகும்.

பப்பாளி முகத்தில் சுருக்கம் விழுவதை தற்காலிகமாக ஒத்திப்போடும்.

## மஞ்சளின் மகிமை

நாம் அன்றாடம் சமையலுக்குப் பயன்படுத்தப்படும் பொருட்களில் மஞ்சளும் அடங்கும். சிலர் மஞ்சளைப் பயன்படுத்தும் போது எதற்காகப் பயன்படுத்துகிறோம் என்று அறியாமல் பயன்படுத்துவதை நாம் சிலவேளைகளில் பார்த்ததுண்டு. அதனால் இன்று மஞ்சளின் மகிமை பற்றிப் பார்ப்போமா?

மஞ்சளை உணவில் சேர்ப்பதால் பசி உண்டாகும்.

இதனை உணவில் சேர்ப்பது வெறும் நிறத்துக்காக மட்டுமல்ல, மணத்துக்காகவும், உணவிலுள்ள தேவையற்ற கிருமிகளை நீக்கும் என்பதற்காகவும் தான்.

மஞ்சளைச் சுட்டு முகர தடிமல் இல்லாமல் போகும்.

அடிபட்டதனால் ஏற்படும் இரத்தக் கட்டு, உள் காயங்கள் நீங்க மஞ்சளைப் பற்றுப் போடுவார்கள்.

வெறும் மஞ்சள் பொடியை புண்கள் மீது தூவ புண்கள் ஆறும்.


மஞ்சளுடன் வேப்பிலையை அரைத்துப் பூச, அம்மையினால் ஏற்பட்ட கொப்பளங்கள் ஆறும்.

மஞ்சள், வேப்பிலையுடன் சிறிது வசம்பும் சேர்த்து அரைத்துப் பூச மேகப்படை, விஷக்கடிகள், வட்டமான படைகள் போகும்.

மஞ்சளை இலுப்பை எண்ணெயில் குழைத்துத் தடவ கால் வெடிப்புக் குணமாகும்.

மஞ்சள் சுட்ட சாம்பலுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்துப் பூச, ஆறாத புண்கள் ஆறும்.

மஞ்சளுடன், சாம்பிராணி, ஏலம், சுக்கு சேர்த்து அரைத்துத் தலையில் பற்றுப்போட தலைவலி குணமாகும்.



பெண்கள் முக்கியமாக முகத்தில் மஞ்சளைப் பூசுவதற்குக் காரணம் முகத்தில் முடி வளருவதைத் தடுப்பதற்கே.

பெண்கள் மஞ்சளைப் பூசிக் குளிப்பதனால் அவர்கள் மேனி பொன்னிறம் பெறும்.

## சமையல் குறிப்பு

### *அப்பிள் ஐஸ்கிரீம்*

**தேவையான பொருட்கள்**

தோல் நீக்கி விதை நீக்கிய பெரிய அப்பிள் [illegible] 2

| | |
|---|---|
| சர்க்கரை | – 4 மேசைக்கரண்டி |
| பால் மா | – 4 மேசைக்கரண்டி |
| மில்க் கிரீம் | – 1 கப் |
| பால் | – 1 கப் |
| கிராம்பு | – தேவையான அளவு. |
| முந்திரி | – 8 |



***செய்முறை***

அப்பிள் பழம், சர்க்கரை, பால் பவுடர், மில்க் கிரீம், பால் போன்றவற்றை ஒன்றாகக் கலந்து முட்டையை அடிப்பது போல் நன்றாக அடித்துக் கொள்ள வேண்டும். அத்துடன் கிராம்புத் தூளையும், முந்திரிப் பருப்பையும் கூடச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒன்றில் ஒன்று நன்றாக இவை கலந்தவுடன் இதனை குளிரூட்டக்கூடிய தட்டுக்களில் ஊற்றி, அப்படியே குளிரூட்டியில் வைத்து விடவும். இரண்டு மணி நேரம் கழித்து இதனை வெளியே எடுத்து வைக்கவும். சுவையாக இருக்கும்.

என்ன சகோதரிகளே, அப்பிள் ஐஸ்கிரீம் தயாரிக்க ரெடியா நீங்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெட் குறும்பு



ஆஹா.... குளிர்பானத்தை – குளிர்மையாக வைக்க குஷியான இடம் ஒன்று கிடைச்சாச்சு டோய்...

## ஜோக்

நாளை திருமணம் நடக்க இருக்கும் நிலையில் இன்று அவசரமாக மணப்பெண்ணைச் சந்திக்க விரும்பினான் மணமகன். மணமகளும் என்னவோ ஏதோவென பயந்தபடி அவனைச் சந்தித்தாள்.

மணமகன் சொன்னான் "திருமணத்துக்கு முன்பு உன்னுடன் மனம் விட்டுப் பேசிவிடும்படி எனது மனச்சாட்சி என்னை உறுத்துகிறது. நாளை நமக்கு திருமணம் நடைபெறுவதற்கு முன்னர் நான் இது வரை காலமும் தொடர்பு வைத்திருந்த பெண்களைப் பற்றிய எல்லாம் உன்னிடம் சொல்லிவிட விரும்புகிறேன்" என்றான்.


"அதுதான் போனமாதம் திருமணம் பேசி வந்தபோது என்னை தனிமையில் சந்தித்து எல்லா உண்மைகளையும் சொல்லி விட்டீர்களே! கள்ளமில்லாமல் எல்லாம்




சொன்ன உங்களது நல்ல குணம் பிடித்துப்போய்தானே இந்த கல்யாணத்துக்கு நான் சம்மதித்தேன்" என்றாள் மணமகள்.


மணமகன் சொன்னான் "அது போன மாதம் வரை தானே!"

# ஐடியா



நாயை சந்திர மண்டலத்துக்கு அனுப்ப முயற்சிக்கும் நாஸாக்காரர்களுக்கு ஒரு ஐடியா.... ரொக்கட்டுக்குள் நாயை வைத்தும் அனுப்பலாம். நாயின் மேல் ரொக்கட்டை வைத்தும் அனுப்பலாம்.

# நெட் கற்பனை



குளோனிங் முறையில் நாயையோ அல்லது மனிதனையோ உருவாக்கும் போது ஒரு சிறு தவறு நடந்தால் கூட இவ்வாறான விபரீதமான உருவம் தோன்றிவிடக் கூடும் கவனம்.

# ஓவியச்சிரிப்பு



தமது வேலையில் தாம் வைத்துள்ள கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டினை இப்படத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றார்கள்.

# கண்ணாமூச்சி

இந்தப் படத்தைப் பாருங்கள்... என்ன தெரிகிறது..? "அலை பாயுதே... கண்ணா... அலைபாயுதே" என்று பாடத்தோன்றுகிறதோ...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 நவ. 07 ஆம் திகதி வெளியிடப்பட்டது.